வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு வார மலர்
Eelanadu

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 18.02.2024 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 49 | பக்கங்கள் : 16

மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer – மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை



08 மீண்டும் அந்த சலித்துப்போன ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக் கதை


09 ஒட்டகம் கூடாரத்துள் நுழைந்தபோதே தமிழரசின் வீட்டை சூது கவ்வியது


10 அயோத்தி இராமர் கோவில் சொல்லும் செய்தி என்ன?


11 தேசிய மக்கள் சக்தியிடம் தமிழரின் எதிர்பார்ப்பு


# மனித உரிமை, சமூக நீதி தரத்தில் பின்னோக்கி செல்கிறது இலங்கை

## மனித உரிமை கண்காணிப்பகம் சுட்டிக்காட்டு

கொழும்பு, பெப். 18

**மனித உரிமைகள் மற்றும் சமூக நீதி தொடர்பான தரத்தில் இலங்கை பின்னோக்கிச் செல்வதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இலங்கை தொடர்ந்தும் தவறான நிர்வாகம் மற்றும் பொறுப்புக்கூறல் குறைபாடு காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் சிரமத்திற்குள்ளாகி வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக நீதி மற்றும் உரிமைகள் தொடர்பில் அவதானம் செலுத்துவதற்கு பதிலாக, கருத்து வேறுபாடுகளை ஒடுக்குவதிலும், மனித உரிமைகள் மீதான சர்வதேச கவனத்தை மட்டுப்படுத்துவதிலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவின் நிர்வாகத்தின் கீழ் இலங்கை வேகமாக பின்னோக்கிச் செல்வதாக, குறித்த அறிக்கையில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் பிரதி ஆசிய பணிப்பாளர் மீனாக்ஷி கங்குலி தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டின் இறுதியில் நாடு ஜனாதிபதித் தேர்தலை நடத்த தயாராகும் போது, ரணில் விக்கிரமசிங்க புதிய அடக்குமுறை சட்டங்களுடன் எதிர்ப்புகளை ஒடுக்க வலுவான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

(அ)



## அமெரிக்க குழு இலங்கைக்கு!

கொழும்பு, பெப். 18

நிகழ்நிலை காப்பு சட்டம் உள்ளிட்ட சட்டங்களுடன் தொடர்புடைய பிரச்னைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக அமெரிக்க செனட் சபையின் வெளியுறவு தொடர்புகள் குழுவின் சிரேஷ்ட தொழில்சார் பணிக்குழாமின் பிரதிநிதிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலைமைகள் தொடர்பில் ஆழமான தெளிவை பெற்றுக் கொள்வதற்காக இந்த பிரதிநிதிகள்

15

மன்னாரில் சடலமாக மீட்கப்பட்ட

## சிறுமி வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு கழுத்து நெரித்து கொல்லப்பட்டார்!

மன்னார், பெப். 18

மன்னாரில் சடலமாக மீட்கப்பட்ட 10 வயதான சிறுமி, பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு, கழுத்து நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளமை பிரேத பரிசோதனையில் தெரியவந்துள்ளது.

தலைமன்னார் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு காணாமல் போன அ.ஆன்கியான்சிதா என்ற சிறுமி, நேற்றுமுன்தினம் அதிகாலை 3.30மணியளவில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

அவரது சடலம் இன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டுவரப்பட்ட சிறுமியுடன் நேற்று காலை 10.30 மணியளவில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டது.

பிரேத

15

## அமெரிக்க துணை வெளியுறவு செயலர் ரிச்சர்ட் வர்மா இலங்கைக்கு வருகிறார்

கொழும்பு, பெப். 18

அமெரிக்க துணை வெளியுறவு செயலாளர் ரிச்சர்ட் வர்மா இலங்கை, இந்தியா மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளுக்கு 6 நாட்கள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இன்று முதல் எதிர்வரும் 23ஆம் திகதி வரை அவர் குறித்த நாடுகளுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



இந்த இராஜதந்திர விஜயத்தின்போது இலங்கை உள்ளிட்ட நாடுகளுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பில் அவர் கலந்துரையாடல்களை மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவரது இலங்கை விஜயத்தின்போது

15

## அமெரிக்காவிடமிருந்து அதிக ஆதரவு வேண்டும்!

### வலியுறுத்துகிறார் மைத்திரி

கொழும்பு, பெப். 18

இலங்கைக்கு அமெரிக்காவிடமிருந்து அதிக ஆதரவு தேவைப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ள அவர் இந்த கோரிக்கையை விடுத்துள்ளதாக வொசிங்டன் டைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் இடையே பாரிய அதிகார அரசியலில் சிக்கியுள்ள, தமது நாடு தற்போது பெரிய உறுதியற்ற நிலைமையில் உள்ளது.

நாட்டின் குடிமக்கள் மோசமான வெளிநாட்டு கடன் நெருக்கடி, உயரும் பணவீக்கம், சுருங்கும் பொருளாதாரம் மற்றும் உணவு, எரிபொருள் பற்றாக்குறை ஆகியவற்றில் இருந்து மீள முயற்சிக்கும் இலங்கை கொடுமையான வறுமையை எதிர்நோக்கி

15



## ஜனநாயக போராளிகள் கட்சியுடன் யாழ்ப்பாணத்தில் ஜே.வி.பி சந்திப்பு!

யாழ்ப்பாணம், பெப். 18

தேசிய மக்கள் சக்தியினருக்கும் ஜனநாயகப் போராளிகள் கட்சியினருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் 10.00 மணியளவில் யாழ்பாணம் தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் வடமாகாண

15

## கடன் மறுசீரமைப்பு குறித்து ஜப்பான் தூதர் வலியுறுத்தல்!

கொழும்பு, பெப். 18

பொருளாதார மீட்சிக்கான இலங்கையின் பாதையில் கடன் மறுசீரமைப்பின் கடுமையான முக்கியத்துவத்தை இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோசி ஹிடேக்கி வலியுறுத்தியுள்ளார்.

சுதந்திரத்திற்குப் பின்னர் மிகவும் கடுமையான தாகக் கருதப்படும் இலங்கையின் பொருளாதார

15

## 15 இலங்கை மீனவர்களுக்கு சிறை

கொழும்பு, பெப். 18

மியன்மாரில் கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் இருவருக்கு மியன்மார் நீதிமன்றம் 5 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளது.

மீன்பிடி படகுகளை செலுத்தியவர்களுக்கே 5 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், மேலும் 13 இலங்கை மீனவர்களுக்கு 3 வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக

15

## இப்படியும் நடக்கிறது

தமிழ் அரசுக் கட்சியில் ஏற்பட்டுள்ள குழப்பங்களை பலரும் தத்தமக்கு வேண்டியவாறு வியாக்கியானம் செய்து வருகின்றனர்.

கட்சியின் புதிய தலைவராக சிவஞானம் சிறீதரன் தெரிவு செயய்யப்பட்டதுதான் கட்சியில் ஏற்பட்டுள்ள இந்த நிலைமைக்கு காரணம் என்பதுபோலவும் அது சிறீதரனின் இயலாமையைக் காட்டுகின்றது என்றும் சிலர் எழுதுவதை காண முடிகின்றது.

ஆனால், கட்சிக்குள் ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமைக்கு உண்மையான காரணம் யார் என்பது பற்றியோ அல்லது இவை எல்லாம் ஏன் நடக்கின்றன என்பது பற்றியோ யாரும் கண்டுகொண்டதாகவோ அல்லது கவலையடைந்ததாகவோ தெரியவில்லை.

இவையெல்லாம் நடக்கும் என்பது தெரிந்ததுதானே அதனை சிறீதரன்தானே எதிர்கொள்ளவேண்டும் என்றால், உண்மைதான், அதனை அவர் எப்படி எதிர்கொண்டு அதிலிருந்து மீண்டுவருகின்றார் என்பதைப் பொறுத்திருந்து பார்த்தே விமர்சிக்கவேண்டும்.

ஆனால், இதுபோன்ற ஒரு சூழ்ச்சி நடந்து வருகின்றது என்பதை சம்பந்தன் ஐயா முன்னதாகவே தெரிந்துகொண்டதால்தான் அது குறித்து எச்சரிக்கை விடுத்திருந்தார்.

கட்சிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருப்பவர்கள் யார் என்பதை தெரிந்தவர்களுக்கு இது ஒன்றும் ஆச்சரியம் அளிக்கக்கூடியது அல்ல.

முதலில் தலைவருக்காக நடந்த தேர்தலின் முடிவு வேறு விதமாக இருந்திருந்தால் இப்போது எல்லாம் சுமுகமாக நடந்துகொண்டிருக்கும் என்று வேறு, சிலர் கருத்துகளை பகிர்ந்துவருவதை காண முடிகின்றது - உண்மைதான். இப்போது ஏன் இவை எல்லாம் நடக்கின்றன என்பதற்கு விளக்கம் தேவையில்லைத்தான்.

சில மாதங்களுக்கு முன்னர், தமிழ் அரசின் மூத்த தலைவர் ஒருவரைச் சந்தித்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர் அவரிடம் ஒரு கேள்வியைக் கேட்டார்:

‘அண்ணே... கட்சியின் தலைவராக அவர் வந்தால் அவரின் கீழ் நான் பணியாற்றுவது சரி என்று நினைக்கின்றீர்களா?’ என்று.

அதற்கு அந்த மூத்த தலைவர் சொன்ன பதில்: ‘அது எப்படி? நீங்கள் எப்படி அவரின் தலைமையின் கீழ் பணியாற்றுவது. நீங்கள் எங்கே? அவர் எங்கே?’.

இன்னுமொரு மூத்த ஊடகர் சொன்னார்: ‘தமிழ் அரசின் தலைவர் தேர்தலில் அவர் வெற்றி பெறவில்லையென்றால், நிச்சயம் அவர் கட்சியில் இருந்து வெளியேறுவார். அப்படி வெளியேறாமல் இருந்தால் அவருக்கு என்னை நேருக்கு நேர் முகம் கொடுப்பதே முடியாத காரியமாக இருக்கும். ஏனெனில், அவர் அவ்வளவு தூரம் தன்னோடு போட்டியிடுபவரைப் பற்றி என்னிடம் விமர்சித்திருக்கிறார்.’

இப்படி பல சம்பவங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். இவற்றைத் தெரிந்து வைத்திருக்கின்ற இந்த ஊர்க் குருவிக்கு தமிழ் அரசில் இப்போது நடக்கின்ற சம்பவங்கள் ஆச்சரியமானவையல்ல.

ஆச்சிரியமானது, இப்போது ஏதோ சிறீதரனின் ஆளுமைதான் இப்படியெல்லாம் நடப்பதற்கு காரணம் என்பதுபோல சிலர் எழுதிவருவதுதான்.

மூத்த ஊடகவியலாளர் வீரகத்தி தனபாலசிங்கம் தனது எக்ஸ் தளத்தில் ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்.

‘ இலங்கை தமிழ் அரசு கட்சிக்குள் நடக்கும் சண்டைகள் மற்றும் நீதிமன்றங்களில் ஏற்படும் வழக்குகள் ஒருபுறம் இருக்கட்டும். முதலாவதாக, தமிழ் மக்கள் தங்கள் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்துவதற்கான ஞானமும் வலிமையும் இலங்கை தமிழ் அரசு கட்சிக்கு உண்டு என்று இன்னும் நம்புகிறார்களா என்ற கேள்விக்கு நாம் பதிலளிக்க வேண்டும்.’ என்று கேட்டிருக்கிறார்.

ஆனால், இத்தனை ஆண்டு காலமும் ‘சம்பந்தன் சக சுமந்திரன் அன்ட் கோ’ கட்சியை வழிநடத்தியபோது, அவருக்கு வராத இந்த சந்தேகம் ஏன் இப்போது வந்தது என்பது அவருக்கு மட்டுமே வெளிச்சமானது.

பதினைந்து பாராளுமன்ற உறுப்பினர்களை அனுப்பும் அளவிற்கு தமிழ் மக்கள் தமிழ் அரசின்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்துவிட்டு, நல்லாட்சி அரசாங்க காலத்தில் அவர்கள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்துவார்கள் என்று பார்த்துக்கொண்டா இருந்தார்கள். அப்படியொரு நம்பிக்கையில் தமிழ் மக்கள் வாக்களித்திருந்தால், அதற்கு அடுத்த தேர்தலில் அவர்களை ஒட்டுமொத்தமாக அல்லவா வீட்டுக்கு அனுப்பியிருக்க வேண்டும். அதிகம் ஏன், சம்பந்தனை என்றாலும் வீட்டுக்கு அனுப்பியிருக்கவேண்டுமே.

உணர்ச்சி அரசியலை பேசுகின்ற ஒருவராக மாத்திரமே இதுவரை காட்சி தந்த சிறீதரன், இப்போதுதான் ஒரு தலைமைப் பொறுப்புக்கு வந்திருக்கிறார். அவரது தலைமையை எடை போடுவதற்கு இன்னமும் கால அவகாசம் இருக்கின்றது. அதற்கு முன்னர் அவரை இழுத்துவிழுத்துவதற்கு கட்சிக்குள் மட்டுமல்ல, வெளியிலும்தான் பலர் காத்திருக்கிறார்கள்.! இது சிறீதரனுக்கு ஆதரவு கருத்தல்ல. அவரை விமர்சிக்க இன்னும் காலம் இருக்கின்றது என்பது மட்டுமே. அவரை ‘அடிக்க’ இன்னும் காலம் இருக்கிறது அவ்வளவுதான்.!

**- ஊர்க்குருவி.**

# வீதியில் உலர வைக்கப்படும் நெல்லை உண்டால் புற்றுநோய் ஏற்பட வாய்ப்பு!

### முல்லை பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர்

முல்லைத்தீவு, பெப். 18

வீதியில் உலரவிடப்படும் நெல்லுடன் “கற்மியம்“ எனும் மூலகம் ஒன்று கலப்பதாகவும், எனவே அந்த நெல் அரிசியை உணவாக உட்கொள்ளும் போது புற்று நோய் ஏற்படும் வாய்ப்பிருப்பதாகவும் முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

எனவே, பொதுமக்கள் வீதியில் நெல்லை உலரவிடுவதைத் தவிர்க்குமாறும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிலையில் அக்கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போது பெரும்போக நெல் அறுவடை மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் விவசாயிகள் பிரதான வீதிகளை நெல் உலரவிடும் தளங்களாகப் பயன்படுத்துகின்றனர்.

இதனால் பாரிய அளவில் வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. பலர் வீதி விபத்துக்களில் சிக்கி பரிதாபமான முறையில் உயிரிழக்கின்றனர்.

இவ்வாறு வீதியில் நெல் உலரவிடுவதனால் வீதி விபத்தையும் தாண்டி பாரிய ஆபத்தொன்று காணப்படுகின்றது.

வாகன டயர்கள் வீதியில் உராய்வதனால் ‘கற்ட்மியம்’ எனும் மூலகம் வீதியில் படிந்துள்ளது. இந்நிலையில் இவ்வாறான வீதியிலேயே விவசாயிகள் நெல்லினை உலர வைக்கின்றனர்.

இவ்வாறு நெல்லினை உலரவிடும்போது குறித்த ‘கற்மியம்’ எனும் மூலகம் நெல்லோடு கலந்துவிடுகின்றது.

இவ்வாறு இந்த ‘கற்மியம்’ எனும் மூலகம் கலந்த நெல் அரிசியை தொடர்ந்து பத்துத் தொடக்கம் பதினைந்து வருடங்கள் உணவாக உட்கொள்ளும்போது புற்றுநோய் ஏற்பட வய்ப்பிருக்கின்றது.

எனவே, வீதியில் நெல் உலரவிடுவதை விவசாயிகள் தவிர்ப்பதே சிறந்தது - என்றார். (அ)

# மனைவியுடன் சண்டையிட்டு கிணற்றில் குதித்து உயிரை மாய்த்தார் குடும்பஸ்தர்

வவுனியா, பெப். 18

வவுனியா, வீரபுரம் பகுதியில் உள்ள கிணறு ஒன்றில் இருந்து இளம் குடும்பஸ்தரின் சடலம் நேற்று முன் தினம் காலை மீட்கப்பட்டுள்ளதாக செட்டிகுளம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, செட்டிகுளம், வீரபுரம் பகுதியில் மனைவியுடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இளம் குடும்பஸ்தர் வீட்டில் இருந்த கிணற்றுக்குள் குதித்துள்ளார்.

இதனையடுத்து, மனைவியும், பிள்ளைகளும் அயலில் உள்ளவர்களை அழைத்து மீட்க முயற்சித்தனர். இதன்போது கிராம அலுவலர் மற்றும் பொலிசாருக்கும் அயலவர்கள் முறைப்பாடு செய்தனர்.

அப்பகுதி மக்களின் துணையுடன் அவர் மீட்கப்பட்ட போதும், அவர் உயிரிழந்த நிலையிலேயே மீட்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சடலம் செட்டிகுளம் வைத்தியசாலையில் பொலிசாரால் ஒப்படைக்கப்பட்டதுடன், அங்கிருந்து வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பவத்தில் மூன்று பிள்ளைகளின் தந்தையான 33 வயதுடைய செபமாலை மொரிசன் என்பவரே மரணமடைந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் செட்டிகுளம் பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# டெங்கு அதிகரித்த மாவட்டங்களாக யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா

கொழும்பு, பெப். 18

நாட்டின் அதிக டெங்கு நோயாளர்கள் உள்ள மாவட்டங்களாக யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன என கண்டி மாவட்ட தொற்று நோய் நிபுணர் வைத்தியர் கிருஷான் மசாராச்சி தெரிவித்துள்ளார்.

கண்டி மாவட்டத்தில் பதிவாகும் டெங்கு நோயாளர்களின் வீதம் தற்போது குறைவடைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டிலேயே அதிகூடிய டெங்கு நோயாளர்கள் கண்டி தேசிய பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த வைத்தியர் தற்போது அது 5ஆவது இடத்திற்கு குறைந் துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டி மாவட்ட செயலக அலுவலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், கடந்த சில வருடங்களாக டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டங்கள் வெற்றியடைந்தமையே டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறைவதற்கு காரணம் என அவர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினால் வெளியிடப்பட்டுள்ள வாராந்த அறிக்கையின்படி, கண்டியிலிருந்து 10 பிரிவுகள் நாட்டின் அதிக ஆபத்துள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருப்பதாக தெரிவிக்கப்பட்டு தற்போது அந்த எண்ணிக்கை 02 ஆக குறைந்துள்ளது எனவும் அதன் பிரகாரம் கடந்த வருடம் 20% டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்த நிலையில் தற்போது அது 12% ஆக குறைந்துள்ளது.

இந்த அறிக்கைகளின்படி நாட்டின் அதிக டெங்கு நோயாளர்கள் உள்ள மாவட்டங்களாக யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன எனவும் அவர் கூறினார்.

(அ)

# நீர்த்தாங்கி தலையில் வீழ்ந்து பெண் உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 18

அம்பாந்தோட்டை - வலஸ்முல்ல பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றின் நீர் தாங்கி 12 அடி உயரத்தில் இருந்து வீழ்ந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் ஹம்பாந்தோட்டை - வலஸ்முல்ல பிரதேசத்தை சேர்ந்த 52 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயாவார்.

இவர் 14 வருடங்களாக இந்த ஹோட்டலில் பணிபுரிந்து வந்துள்ளார்.

இந்நிலையில் இவர் கடந்த 15 ஆம் திகதி இந்த ஹோட்டலின் சமையல் அறையில் இருந்து மதிய உணவுகளை தயாரித்துக் கொண்டிருந்துள்ளார்.

இதன்போது இந்த ஹோட்டலின் மேல்மாடியில் பாதியில் கட்டப்பட்ட நிலையில் உள்ள கொங்கிரீட் தூண் மத்தியில் பாதுகாப்பற்ற முறையில் வைக்கப்பட்டிருந்த நீர் தாங்கி இவரின் தலையில் வீழ்ந்துள்ளது. காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.(அ)

# இலங்கை மீனவர்களின் பாதிப்புணர்ந்து இந்திய மீனவர்கள் செயல்படவேண்டும்!

## கச்சதீவைக் கோருவது ஏற்புடையது அல்ல என்கிறார் மஸ்தான்

*வவுனியா, பெப். 18*

**இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதால், இலங்கை மீனவர்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றார்கள் எனவும், எனவே இலங்கை மீனவர்களின் பாதிப்பு நிலை உணர்ந்து இந்திய மீனவர்கள் செயற்படவேண்டுமென வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.**

அதேவேளை, இலங்கைக் கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் அத்துமீறி நுழையும்போது அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தால், அதற்காக அவர்கள் கச்சதீவினைக்கோருவது ஏற்புடையது அல்ல எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது இரண்டு நாடுகளுக்கிடையிலான பிரச்னையாகும். இருந்தாலும் இருநாடுகளும் ஒற்றுமையாகச் செயற்பட்டு இந்தப் பிரச்னைக்குரிய தீர்வைக் காணவேண்டும்.

அயல் நாடான இந்தியாவும், எமது நாடும் சகோதரர்களைப்போன்றது. எமது நாடு இளைய சகோதரன் எனில், இந்தியா எமக்கு மூத்த சகோதரரைப்போன்றது. இவ்வாறிருக்கும்போது சில பிரச்சினைகள் ஏற்படும். அதற்காக இவ்வாறான கருத்துக்களை மூத்த சகோதரர்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது.

இந்திய மீனவர்கள் இவ்வாறு இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைவதால் இலங்கை மீனவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகின்றனர்.

குறிப்பாகத் தமிழ்நாட்டையும், எம்மையும் எடுத்துக்கொண்டால் நாம் மொழியாலும் ஒன்றுபட்டவர்களாகக் காணப்படுகின்றோம்.

அந்த அடிப்படையில் உண்மைத்தன்மையை உணர்ந்து எமது மீனவர்களுக்குப் பாதிப்பு ஏற்படாதவாறு இந்திய மீனவச் சகோதரர்களும் இதனைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும்.

தொடர்ந்தும் இணக்கமாக நாமும் இந்தியாவும் சகோதரப் பாசத்துடன் செயற்படும்வகையில் அவர்களுடைய கருத்துக்களும் இருக்கவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது - என்றார். (அ)

# முல்லையில் வனவள திணைக்களத்திடம் இராணுவத்தினர் காணிகள் கையளிப்பு

*முல்லைத்தீவு, பெப். 18*

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல காணிகளில் முகாம்களை அமைத்து இராணுவத்தினர் தங்கியிருந்த நிலையில், தற்போது பல இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு, இராணுவத்தினர் அந்த காணிகளிலிருந்து வெளியேறியுள்ளனர்.

அவ்வாறு செல்லும்போது, இராணுவத்தினர் தாம் முகாம் அமைத்திருந்த காணிகளை முல்லைத்தீவு வனவள திணைக்களத்திடம் கையளித்துள்ளனர்.

வனவள திணைக்களத்திடம் இராணுவத்தினர் கையளித்த காணிகள், அபிவிருத்தி வேலைகளுக்காகவோ அல்லது ஏனைய முக்கிய தேவைகளுக்காகவோ பயன்படுத்த வேண்டுமாயின், அந்த தேவைகளை சுட்டிக்காட்டி, வனவள திணைக்களத்திடமிருந்து காணிகளை பெற்றுக்கொள்ள முடியும் என முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தாமும், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் பங்கேற்றிருந்த விசேட கூட்டமொன்றிலேயே இவ்விடயம் தொடர்பில் இணக்கம் காணப்பட்டதாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# யாழில் இரும்பு பெட்டியால் பரபரப்பு

*யாழ்ப்பாணம், பெப். 18*

யாழ்ப்பாண நகரப் பகுதியில் நேற்று சனிக்கிழமை காலை இரும்பு பெட்டியொன்று அநாதரவாக காணப்பட்டதால் அதில் வெடிகுண்டு இருக்கலாம் என்ற அச்சம் காணப்பட்டு பரபரப்பான சூழல் உருவானது.

வைத்தியசாலை வீதியில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அருகிலேயே குறித்த சம்பவம் இடம்பெற்றது.

இதனையடுத்து, அங்கிருந்தவர்கள் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு தகவலளித்த நிலையில் பொலிஸார், பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் குறித்த இடத்துக்கு விரைந்து பெட்டியை சோதனையிட்டனர்.

இதன்போது குறித்த பெட்டிக்குள் இயந்திர சாவிகள் காணப்பட்டமை தெரியவந்ததையடுத்து நிலைமை சுமூகமானது.

இதனையடுத்து பொலிஸார் குறித்த பெட்டியை அங்கிருந்து கொண்டு சென்றனர். (அ)





# யாழில் குற்றச் செயல்கள், போதைப்பொருளை ஒழிக்க பிரதி பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை

*யாழ்ப்பாணம், பெப். 18*

யாழ்ப்பாணத்தில் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தல் மற்றும் போதைப்பொருள் விற்பனையை தடுத்தல் தொடர்பில் விரைந்து எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸாருக்கு சிறப்பு கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்று முற்பகல் யாழ்ப்பாணம் தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்த யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க இந்தக் கட்டளைகளை வழங்கினார்.

அத்தோடு, பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு தமிழ்மொழி தெரிந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்திய அவர், பொதுமக்களின் அன்றாட வாழ்வுக்கு இடையூறாக உள்ள குற்றச் செயல்களை விரைந்து தடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

போதைப்பொருள் விற்பனையை தடுத்தல், அதன் பாவனையை முற்றாக ஒழித்தல் போன்ற நடவடிக்கைகளை பொலிஸார் எவ்வாறு முன்னெடுக்க வேண்டும் என்ற ஆலோசனைகளையும் இதன்போது பிரதிப் பொலிஸ்மா அதிபர் காளிங்க ஜெயசிங்க வழங்கினார். (அ)

# இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான 700 பஸ்கள் ஏலத்தில்!

*கொழும்பு, பெப். 18*

சேவையில் ஈடுபடுத்த முடியாத 700 பஸ்களை இந்த வருடம் ஏலத்தில் விட இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது.

இந்த பஸ்கள் அனைத்தும் பல வருடங்களாக இயங்க முடியாத நிலையிலிருப்பதாக அந்த சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.

கொழும்பு பிரதேசத்தில் இயங்க முடியாத நிலையில் 103 பஸ்கள் உள்ளதாகவும், அந்த பஸ்களின் பதிவை இரத்து செய்யுமாறு அறிக்கையொன்று மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், டிப்போக்களில் இருக்கும் பஸ்களை இரும்புக்காக ஏலம் விடவுள்ள நிலையில் அதில் கிடைக்கும் பணத்தில் புதிய பஸ்களை கொள்வனவு செய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (அ)

# முல்லைத்தீவுக் கடற்பரப்பிற்குள் இந்திய இழுவைப்படகு அதிகரிப்பு

## கைதுசெய்து கரைக்குகொண்டுவந்தால் வழக்கு தொடரலாம் என்கிறது நீரியல் வளத் திணைக்களம்

*முல்லைத்தீவு, பெப். 18*

தற்போது இறால் பிடிப்பதற்குரிய பருவகாலம் ஆரம்பித்துள்ள நிலையில், முல்லைத்தீவு கடற் பரப்பிற்குள் இந்திய இழுவைப்படகுகளின் வருகை அதிகரித்துள்ளதாக முல்லைத்தீவு மீன வர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்ற முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங் கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே முல்லைத்தீவு மீனவர்கள் இவ்வாறு கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் இவ்வாறு அத்துமீறி முல்லைத் தீவுக் கடற்பரப்பிற்குள் நுழைகின்ற இந்திய மீனவர்களைக் கைது செய்து, அவர்களுடைய இழுவைப் படகுகளையும் கைப்பற்றி கரைக்கு கொண்டுவந்தாலே தம்மால் வழக்குத் தொடர முடியுமென முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் கா.மோகனகுமார் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரி விக்கையில்,

இவ்வாறு அத்துமீறி முல்லைத்தீவு கடற்பரப்பிற்குள் நுழையும் இந்திய மீனவர்களைக் கைது செய்து, அவர்களுடைய இழுவைப்படகுகளைக் கைப்பற்றி கரைக்குக் கொண்டுவருவதிலேயே சிக்கலுள்ளது. அவ்வாறு இந்திய மீனவர்களைக் கைது செய்து, அவர்களது இழுவைப்படகுகளையும் கைதுசெய்து கரைக்குக் கொண்டுவந்தால் எம்மால் வழக்கு தொடரமுடியும்.

2017ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின்மூலம் மாவட்ட நீதிமன்றிற்கு இந்த வழக்கைக் கையாழும் அதிகாரமுள்ளது.

எனவே மாவட்டத்திலுள்ள கடற்படையினராவது இவ்வாறு அத்துமீறி நுழையும் இந்திய இழுவைப்படகுகளைக் கைப்பற்றி, இந்திய மீனவர்களையும் கைதுசெய்து கரைக்குக் கொண்டு வந்தாலே எம்மால் வழக்குத்தொடரமுடியும் - என்றார்.

இது தொடர்பில் மாவட்ட அரசாங்க அதிபர் அ.உமா மகேஸ்வரன் தெரிவிக்கையில்.

பெப்ரவரி மாத இறுதிப் பகுதி அல்லது மார்ச் மாத ஆரம்பத்தில் கடற்றொழில் அமைச்சர், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர், உரிய அதிகாரிகள், முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மீன்பிடியுடன் தொடர்புடைய அனைவரும் ஒன்றுகூடி, இந்த இந்திய இழுவைப்படகுப் பிணக்கு உள்ளிட்ட மீனவர்களின் ஏனைய பிணக்குகளுக்கும் தீர்வு காணப்படும் - என்றார். (அ)

# தமிழரசு மாநாடு தடைக்கும் எனக்கும் தொடர்பு இல்லை

## சாணக்கியன் எம்.பி. கூறுகிறார்

*மட்டக்களப்பு, பெப். 18*

திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணத்தில் 19 ஆம் திகதி நடக்கவிருந்த தமிழரசு கட்சியின் தேசிய மாநாட்டுக்கு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டமைக்கும் தனக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கிலும் புலம்பெயர் தேசத்திலும் உள்ள ஒரு சிலருக்கும் சில ஊடகங்களுக்கும் தங்களது கழிவறைகளில் தண்ணீர் வராவிட்டாலும் அதற்கு சாணக்கியனின் சதிதான் காரணம் என்றும் சாணக்கியனே அதன் பின்னணியில் இருப்பதாக கருதும் நிலையே காணப்படுவதாகவும் அவர் கவலை தெரிவித்தார். (அ)

ஈழநாடு



# கட்சி தலைவர்தான் ஜனாதிபதி வேட்பாளர் ஆகவேண்டும் என்று கட்டாயம் ஏதுமில்லை

## சஜித்துடன் மோதுகிறார் பொன்சேகா

கொழும்பு, பெப். 18

ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படுவதற்கு முன்னர் ஐக்கிய மக்கள் சக்தி தமது வேட்பாளரை அறிவித்தது தவறான முடிவாகும் என்று அக் கட்சியின் தவிசாளரான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

உலக அரசியலில் கட்சி தலைவர் இருக்கின்றார் என்பதற்காக உறுப்பினர்கள் மௌனம் காக்கமாட்டார்கள். தலைவர் தவறிழைத்தால் அதனை சுட்டிக்காட்டும் தைரியம் இருக்க வேண்டும்.

ஜனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்ட பிறகே வேட்பாளரை தெரிவுசெய்ய வேண்டும். அது எந்த கட்சியாக இருந்தாலும் அப்படிதான் நடக்கும். இது தொடர்பில் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருந்தேன்.

மக்களின் மனநிலை, கருத்துக் கணிப்பு, ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டே வேட்பாளர் தேர்வு இடம்பெற வேண்டும். அவ்வாறு இல்லாமல் சம்பிரதாயப்பூர்வமாக தேர்வு இடம்பெறக்கூடாது. இந்த நடைமுறைக்கு எதிராக கட்சிக்குள் நான் கதைத்துள்ளேன். சஜித் வேட்பாளராக இருக்கலாம். ஆனால் காலம் இருக்கும்போது முன்கூட்டியே வேட்பாளரை அறிவித்தது சரி என கூறமுடியாது.

வெற்றி வேட்பாளர் ஒருவரை அதாவது மக்கள் கோரும் வேட்பாளரையே கட்சி நிறுத்த வேண்டும். தலைவரைதான் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்றில்லை. அடுத்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் வெற்றிபெறமுடியாவிட்டால் அவருக்காக நான் வேலை செய்யபோவதில்லை என அறிவித்துள்ளேன்.

சஜித்துக்கு பதிலாக மற்றுமொருவர் வர வேண்டும் என கூறவில்லை. உரிய ஆய்வுகளின் பின்னரே முடிவெடுக்கப்பட வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் நான் இன்னும் முடிவெடுக்கவில்லை. ஆனால் மக்கள் கருத்து முக்கியம். மக்கள் கோரிக்கை விடுத்தால் அதனை ஏற்பதற்கு அரசியல்வாதிகள் தயாராக இருக்க வேண்டும்- என்றார். (அ)

# தேங்காய் எண்ணெய் தட்டுப்பாடு

கொழும்பு, பெப். 18

நாட்டில் வருடாந்த தேங்காய் எண்ணெய் தேவையை பூர்த்தி செய்ய உள்ளூர் உற்பத்தி போதுமானதாக இல்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மினுவாங்கொடை பிரதேச நடுத்தர மற்றும் சிறிய அளவிலான தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் குறித்த தகவலை தெரிவித்துள்ளனர்.

தற்போது, நாட்டின் வருடாந்த தேங்காய் உற்பத்தி 2,800 - 3,200 மில்லியன்கள் என்றும், அதில் 70% உள்நாட்டு நுகர்வுக்காக பயன்படுத்தப்படுகின்றது.

உள்நாட்டு உற்பத்தியைக் கணக்கிட்டு பற்றாக்குறையை மட்டும் இறக்குமதி செய்து சமநிலையைப் பேணாவிட்டால் உள்நாட்டு தேங்காய் எண்ணெய் தொழில் வீழ்ச்சியடையும் என்றும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

மேலும், நாட்டில் வருடாந்த தேங்காய் எண்ணெய் தேவை 24 0000 மெற்றிக் தொன் எனவும், அந்த தேவையை பூர்த்தி செய்ய உள்ளூர் உற்பத்தி போதுமானதாக இல்லை எனவும் எண்ணெய் உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒரு தேங்காய் 70 ரூபாவிற்கு கொள்வனவு செய்து எண்ணெயை தயாரித்தால் ஒரு போத்தல் 600 ரூபாவாகும். தற்போது சந்தையில் தேங்காய் எண்ணெய் போத்தல் 400 - 450 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (அ)

# நடை பயிற்சியில் ஈடுபட்ட பெண்ணின் 4 பவுண் நகையை களவாடியவர் கைது!

வவுனியா, பெப். 18

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைப் பயிற்சிக்கு வருகை தந்தவரின் நகைகளைத் திருடிய சம்பவம் தொடர்பில் 32 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் நடைப் பயிற்சிக்காகக் கடந்த சில நாள்களாக வவுனியா நகர சபை மைதானத்துக்கு வந்து சென்றுள்ளார். வழமை போன்று நேற்று முன்தினம் மாலையும் நகர சபைக்கு அவர் வந்துள்ளார். இதன் போது தான் அணிந்திருந்த சங்கிலி, காப்பு உள்ளிட்ட 4 பவுண் தங்க ஆபரணங்களை நகர சபை வளாகத்தில் உள்ள மோட்டடார் சைக்கிள் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்ட தனது மோட்டார் சைக்கிள் இருக்கைக்குள் வைத்து பூட்டி விட்டு நடைப் பயிற்சிக்குச் சென்றுள்ளார்.

நடைப் பயிற்சி முடிந்த பின்னர் தனது மோட்டார் சைக்கிளை எடுப்பதற்காக அந்தப் பெண் வந்தபோது அவரது மோட்டார் சைக்கிள் இருக்கை உடைக்கப்பட்டு அதில் இருந்த நகைகள் திருடப்பட்டிருந்தன. இதையடுத்து பாதிக்கப்பட்ட பெண் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டையடுத்து தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில், குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஜயத்திலக தலைமையில் பொலிஸ் சார்ஜன் திஸாநாயக்க, பொலிஸ் கான்ஸ்டபிள்களான உபாலி, தயாளன், ரணில் ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போது, மேற்படி சம்பவம் தொடர்பில் வவுனியா, பம்பைமடுப் பகுதியைச் சேர்ந்த 32 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது திருடப்பட்ட ஆறரை இலட்சம் ரூபா பெறுமதியான 4 பவுண் நகைகளும் அவரின் உடைமையில் இருந்து மீட்கப்பட்டன. திருட்டுச் சம்பவத்தின்போது சந்தேகநபர் தப்பிச் செல்லப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளும் பொலிஸா ரால் மீட்கப்பட்டுள்ளது.

(அ)



# கிளிநொச்சி தெற்கு கல்வி வலய தமிழ்மொழித் தின விழா நேற்று

கிளிநொச்சி, பெப். 18

கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தின் தமிழ் மொழித்தின விழா நேற்று இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு நேற்று காலை 9 மணியளவில் பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் வாசுதேவன் தலைமையில் கூட்டுறவு சபை மண்டபத்தில் இடம்பெற் றது.

நிகழ்வில் யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியற்துறை விரிவு ரையாளர் இ.சர்வேஸ்வரா, வடக்கு வலய பதிவாளர் நாயகம் சிவநயனி சர்வேஸ்வரா ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதை அடுத்து மங்கள விளக்கேற்றப்பட்டது. தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து இசைக்கப்பட்டதை அடுத்து அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடர்ந்து தமிழிற்கு அழப்பெரும் பணியாற்றி விபத்தில் உயிரிழந்த ஜீவரஞ்சினி விவேகானந்தராஜா ஆசிரியருக்கு "தமிழ் அன்னை" விருது வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த ஆசிரியையின் திருஉருவப்படம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. தொடர்ந்து குறித்த விருது அவரது குடும்பத்தினரிடம் வழங்கி வைக்கப்பட்டது.

மாணங்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்ற அதே வேளை, தமிழ்த்தின போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில், வலயக் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)

# காமினி ஜயவிக்கிரம காலமானார்!



கொழும்பு, பெப். 18

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான காமினி ஜயவிக்கிரம பெரேரா நேற்று காலமானார்.

நோய்வாய்ப்பட்டிருந்த அவர் உயிரிழக்கும்போது வயது 83.

ஜே.ஆர். ஜயவர்தன காலம்தொட்டே ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய செயற்பாட்டாளராக காமினி ஜயவிக்கிரம பெரேரா செயற்பட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் முக்கிய அமைச்சு பதவிகளை வகித்துள்ளார். கடைசியாக நல்லாட்சியிலும் அமைச்சு பதவியை வகித்தார். 2020 பொதுத்தேர்தலில் அவர் போட்டியிடவில்லை.(அ)

# தமிழரசின் உட்கட்சி இழுபறி தொடர்ந்தால் பலர் ஜனநாயக கூட்டமைப்புடன் இணைவர்!

## கூறுகிறார் கலாநிதி சர்வேஸ்வரன்

யாழ்ப்பாணம், பெப். 17

தமிழரசு கட்சியின் உட்கட்சி விவகாரம் தீர்க்கப்படாது தொடருமாக இருந்தால் பலர் ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் இணையக் கூடிய சாத்திய கூறுகள் காணப்படுவதாக வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் கலாநிதி சர்வேஸ்வரன் தெரிவித்தார்

தமிழரசுக்கட்சியின் தற்போதைய நிலை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

74 ஆண்டுகளாக பயணித்த தமிழரசு கட்சியில் முதல் முதலில் தலைவர் தெரிவில் போட்டிஇடம்பெற்று பெரும் குளறுபடிகள் இடம்பெற்று தலைவர் தெரிவு இடம் பெற்றமை என்பது துரதிஷ்டமான விடயம்

என்னைப் பொறுத்தவரை தமிழரசு கட்சியினுடைய ஆரம்ப கால உறுப்பினர்களாக இருந்து வளர்ச்சி அடைந்து வந்த ஆட்கள் என்று கடைசியாக இருக்கின்றவர்கள் சம்பந்தன், மாவை சேனாராஜாதான். ஏனையவர்கள் எல்லோரும் பின்னர் நடுப்பகுதியிலே பிற்பகுதியில் வந்து இணைந்தவர்கள். தலைவர் தெரிவில் போட்டியிடக் கூடியவர்கள் கூட கடந்த 10- 15 ஆண்டுகளுக்குள் கட்சிக்குள் வந்தவர்கள்.

எனவே தமிழரசு கட்சியினுடைய அந்த கலாசாரம், பண்புகளில் இருந்து அவர்கள் பயிற்றப்பட்டவர்கள் அல்லர். அவர்கள் அண்மைக் காலத்தில் கட்சிக்குள் வந்தவர்கள். அது காரணமாக இருக்கலாம்.

ஒரு கட்சி தலைமைக்கு தேர்தல் வைத்து அதனை தெரிவு செய்வது என்பது ஒரு புதிய விடயமாக காணப்படுகின்றது. தலைவர் போட்டி ஏற்பட்டது ஒரு விடயமல்ல. ஆனால் கட்சிக்குள் இரண்டு பிரிவாக இரண்டு அணிகளாக பிரிந்து விட்டார்கள். குறிப்பாக தலைவர் போட்டி மாத்திரமல்ல செயலாளர் தெரிவில் கூட பெரும் இழுபறி நிலை ஏற்பட்டு தற்பொழுது அந்த விடயம் நீதிமன்றம் வரை சென்றுள்ளது. இது ஒரு விசனத்திற்குரிய விடயமாகும்.

குறிப்பாக தமிழ் தேசிய போராட்டத்தில் இருக்கக் கூடிய தீயசக்திகளுக்கு ஒரு சந்தோஷமான ஒரு ஊக்குவிப்பான விடயமாக இருக்கும்.

தமிழரசு கட்சியில் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்றன. தமிழரசு கட்சி பழம் பெரும் கட்சி. அதற்கு ஒரு ஆதரவுத் தளம் இருக்கின்றது. அந்த தளத்தில் இருப்பவர்கள் மிகவும் விரக்தி அடைந்துள்ளார்கள்.

அதேபோல தமிழ் தேசிய நகர்வுகளை முன் கொண்டு செல்வதற்கு ஒரு தடையாக இருக்கும். தற்போதுள்ள சூழ்நிலையில் சில முடிவுகளை எடுக்கக்கூடிய நிலையில் கட்சி இல்லை என்பது ஒரு கவலையான விடயம் - என்றார்.

(அ)

ஈழநாடு
Eelanadu
18.02.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மாசி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசு கட்சியின் பிரச்னைக்கு தீர்வு

இலங்கை தமிழ் அரசு கட்சி இல்லாவிட்டால், தமிழ் மக்களின் அரசியல் வாழ்வு சூனியமாகிவிடப் போவதில்லை. தமிழ் அரசு கட்சி ஒரு குறிப்பிட்ட காலத்தில் இல்லாமல் இருந்த கட்சிதான். அந்தக் காலத்திலும் தமிழ் மக்களுக்கான அரசியல், புதைகுழிக்கு சென்றுவிடவில்லை. வரலாற்றுப் போக்கில் கட்சிகள் வருவதும் பின்னர் உதிர்வதும் சாதாரணமானது. தலைவர்களின் எழுச்சியும் வீழ்சியும் போன்றுதான் கட்சிகளும். ஆனால், இப்போது தமிழ் அரசு கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்னை, தமிழ் மக்களின் அரசியலுக்கே இழுக்கானது. ஒரு பாரம்பரிய கட்சியின் எதிர்காலத்தை நீதிமன்றத்திடம் ஒப்படைக்குமளவிற்கு தனிநபர்களின் போட்டி மானோபாவம் மேலோங்கிவிட்டது. இதற்கு ஜனநாயகம் என்று விளக்கமளித்து, தங்களை எவருமே நியாயப்படுத்திக் கொள்ள முடியாது.

நாடு ஒரு ஜனாதிபதி தேர்தலை எதிர்கொண்டிருக்கும் சூழலில், இவ்வாறானதொரு நெருக்கடி தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். தங்களின் தனிப்பட்ட நலன்களுக்கு முக்கியத்தும் கொடுக்காது விட்டிருந்தால், இதனை இலகுவாக தவிர்த்திருக்க முடியும். ஆனால், அது நடக்கவில்லை. இனி அடுத்தது என்ன என்பது தொடர்பிலேயே சிந்திக்க வேண்டும். இந்தப் பிரச்னையை தனிநபர்களின் அல்லது இரண்டு அணிகளின் பிரச்னையாக மாற்றினால் நிச்சயம் கட்சியின் எதிர்காலம் கேள்விக்குள்ளாகும். அடுத்த தேர்தலுக்கு கட்சி இல்லாமலும் போகலாம்.

அரசியல் ஸ்தாபனங்களில் பிரச்னைகள் ஏற்படுவது சாதாரணமானது. ஆனால் உள்முரண்பாடுகளை கையாளும் வழிமுறைகளை, முறையாக கையாள முடியாமல் போகும் போதுதான், முரண்பாடுகள் பகையாக மாறுகின்றன. பிரச்னைக்கு வெளியில் தீர்வு தேட வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. தற்போது தமிழ் அரசு கட்சியின் உள்விவகாரம் நபர்களுக்கிடையிலான பகையாக மாறி விட்டது. இனி அதனை தீர்க்க முடியாது. ஒன்றில், முரண்படுவர்கள் முற்றிலுமாக கட்சியிலிருந்து வெளியேற வேண்டும் அல்லது, கட்சி, ஒருவரது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வரவேண்டும்.

ஒரே நேரத்தில் இரண்டு மாவட்டங்களில், நன்கு திட்டமிட்டு வழக்குகள், தாக்கல் செய்யப்பட்டிருக்கின்றன. திருகோணமலையில் ஒரு மாவட்ட கிளையுண்டு - அதற்கு தெரியாமல் ஓர் உறுப்பினர் சுயமாக சிந்தித்து வழக்குத் தாக்கல் தொடுத்திருக்கின்றார் என்று கூறினால் அது ஒட்டுமொத்த சமூகத்தையும் சிந்திக்கத் தெரியாதவர்கள் என்று எண்ணுவதற்கு சமனானது. அதேபோன்றுதான் யாழ்ப்பாணத்திலும். இரண்டு வழக்குகளிலும் பிரபலமான சட்டத்தரணிகள் சமுகமளித்திருக்கின்றனர். இவை எதனை உணர்த்துகின்றன?

தமிழ் அரசுக் கட்சியின் விவகாரம் எப்போது நீதிமன்றத்திற்கு சென்றதோ, அப்போதே அந்தக் கட்சியின் 74வருட, நன்மதிப்பு நாசமாகிவிட்டது. அதற்கு சம்பந்தப்பட்டவர்கள் அனைவருமே பொறுப்பேற்றக வேண்டும். எங்களுக்கு தெரியாமல் நடந்தது என்று ஓர் அணியும், இன்னொரு அணியோ, அதனை சவாலுக்கு உள்ளாக்கப் போவதாகவும் கூறுவதனாது, பிரச்னையை கையாள்வதற்கு உதவாது.

ஜனாதிபதித் தேர்தலொன்றை தமிழ் மக்கள் எவ்வாறு கையாள வேண்டுமென்று சிந்திக்கின்ற சந்தர்ப்பத்தில், இவ்வாறானதொரு பிரச்னை பொருத்தமானதல்ல.

# தமிழர் உதிரம் சிந்தி பெற்ற மாகாணசபை முறையை முழுமையாக அனுபவிப்பவர்களின் பொறுப்பற்ற பேச்சு நாட்டுக்கு நன்மை தராது!

## ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவிப்பு

*வடமராட்சி, பெப். 18*

தமிழர் உதிரம் சிந்தி பெற்ற மாகாணசபை முறைமையை முழுமையாக அனுபவிக்கும் தென்னிலங்கை, அரசியல்வாதிகள் பொறுப்பற்ற பேச்சுக்களால் மீண்டும் இனங்களுக்கிடையே விரிசலும் நாட்டின் வளர்ச்சியும் வீழ்ச்சிப்பாதைக்கு செல்ல வழிவகுக்கும் என சுட்டிக்காட்டியுள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளரும் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் இத்தகைய பொறுப்பற்ற செயற்பாடுகளுக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சி தனது கண்டனத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது என தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்-

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரத்தை 22 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை முன்வைத்து மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை நிக்கவுள்ளதாக பிரித்துரு ஹெல உறுமியவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதயம் கம்பன்பில தெரிவித்துள்ளார்.

இது அரசினுடைய கருத்தல்ல. தேசிய கொள்கையும் அல்ல. ஒரு தனிப்பட்ட கட்சியினுடைய கருத்தாக இருக்கலாம். ஆயினும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினூடாக கிடைக்கப்பெற்ற 13 ஆவது அரசியலமைப்பின் திருத்தத்தினூடான மாகாண சபை முறைமையை இவ்வாறு எற்கனவே பலவீனப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன.

இனிமேலும் இவ்வாறு மேற்கொள்ள முயற்சிக்கப்படலாம்.

இதுபோன்று ஏற்கனவே இவ்வாறு பலவினப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சி ஒன்றின்போது சந்திரிகா அம்மையாருடைய ஆட்சிக் காலத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தென்னிலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக இடதுசாரி கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களின் 50 இற்கும் மேற்பட்ட கையொப்பங்களை பெற்று சபையில் சமர்ப்பித்து அதனை முறியடித்திருந்தார்.

ஆனாலும் தென்னிலங்கையுடனான தேசிய நல்லிணக்கத்தின் மூலம் இதை தடைதாண்டுவோம். அதற்கு நல்லிணக்கம் ஒருபுறமும் அரசியல் பிரதிநிதித்துவப் பலமும் இந்த இடத்தில் தேவைப்படுகின்றது என்பதை சுட்டிக் காட்டுகின்றோம்.

மேலும் தேசிய நல்லிணக்கத்திற்கு பாதகமான அல்லது தமிழர்களின் அரசியல் அபிலாசைகளை மலினப்படுத்தும் இவ்வா றான பேச்சுக்களை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

இதேநேரம் மாகாண சபைகளுக்கு இருந்த பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை இன்றைய எதிர்க்கட்சி தலைவரான சஜித் பிரேமதாசவின் தந்தையான ரணசிங்க பிரேமதாச தனது ஆட்சிக்காலத்தில் மத்திய அரசின் கீழ் கொண்டுவந்திருந்தார் என்றும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது - என்றார். (அ-02)

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த உதவிகள்

*வடமராட்சி, பெப். 18*




யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவகலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த நிகழ்வுகள் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் நேற்று முன் தினம் காலை 10:30 மணியளவில் இடம்பெற்றது.

இறை வணக்கத்துடன் ஆரம்பமான நிகழ்வில் சைவப் புலவர் திருமதி சண்முகவடிவு தில்லைமணி அவர்களால் குமரகுருபரர் சுவாமிகள் பற்றிய ஆன்மீக அருளுரை காலை 10.40 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை இடம்பெற்றதை தொடர்ந்து வாராந்த உதவிகளாக ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையில் தரம் - 01 வகுப்பில் புதிதாக இணைந்த 16 மாணவர்களுக்கு காலணிகளை பெற்றுக் கொள்வதற்க்காக பாடசாலை முதல்வர் சி.மதிபாலனிடம் ரூபா 40,000 நிதியும்,

புத்தளம் - சேனைக் குடியிருப்பு ஸ்ரீ பத்தினி அம்மன் அறநெறிப் பாடசாலை கட்டட கட்டுமானத்திற்காக ரூபா 190, 000 நிதியும், வழங்கிவைக்கப்பட்டன.

இதில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், நலன் விரும்பிகள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர் வாகிகள், உறுப்பினர்கள், அடியார்கள் என பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (அ-2)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



# மாத்தளை வடிவேலனின் ‘வல்லமை தாராயோ?’

‘வல்லமை தாராயோ?’ தொகுதியில் அடங்கியுள்ள சிறுகதைகள், மாத்தளை வடிவேலன் ஒரு நேர்த்தியான கதைசொல்லி என்பதைக் கேள்விக்கிடமில்லாமல் நிரூபிக்கின்றன. எழுபதாண்டுகாலம் அந்த மக்களோடு வாழ்ந்து, உண்டு, சுகித்து, சுகதுக்கங்களில் பங்கு கொண்டு, அந்த மக்களின் கூட்டு சொரூபமாய் இக் கதைகளில் அவர் வெளிவருகிறார். அவருக்குச் சொல்வதற்கு நிறைய கதைகள் இருக்கின்றன. கதைகளின் கிட்டங்கி அவர். சரித்திரம் அவரில் புதையுண்டு கிடக்கிறது’ என்ற மு. நித்தியானந்தன் வரிகள் மிகையானவை அல்ல, அவை மிகச் சரியானவை என்பதை இந்நூல் சர்வதேச அளவில் பெற்றிருக்கும் விருதுகள் நிரூபிக்கின்றன.






2022ஆம் ஆண்டு இலங்கையில் வெளிவந்த சிறுகதை தொகுதிகளில், தமிழகத்தில் ‘வல்லமை தாராயோ?’ என்ற நூல் வெளிவந்த கையோடு, டாக்டர் எம். ஜி. ஆர் ஜானகி அம்மாள் கலைக்கல்லூரி முனைவர் டாக்டர் குமார் ராஜேந்திரனின் ‘தாய்’ பதிப்பகம், இந்த நூலுக்கு ஒரு லட்சம் ரூபா விருது வழங்கிக் கௌரவித்தது. இதனைத் தொடர்ந்து, இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவனமும், லண்டன் தமிழ் இலக்கிய நிறுவனமும் இணைந்து வழங்கிய ‘உதயணன் இலக்கிய விருது’ இந்நூலுக்கு 2022ஆம் ஆண்டில் இலங்கையில் வெளிவந்த சிறுகதை தொகுதிகளில் மிக தரமான தொகுதி என இன்னுமொரு மகுடத்தைச் சூட்டியிருக்கிறது.

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கம் 2022இல் இலங்கையில் வெளிவந்த சிறுகதை தொகுதிகளில் மாத்தளை வடிவேலனின் ‘வல்லமை தாராயோ?’ நூல் முதல்தரமான தொகுதி என்று மற்றுமொரு விருது வழங்கி கௌரவித்துள்ளது. இலங்கையில் மட்டுமின்றி, தமிழகத்திலும், ஐரோப்பிய கனேடிய நாடுகளிலும் மாத்தளை வடிவேலனின் மலையக எழுத்துக்கள் களிநடனம் புரிகின்றன.

மலையக பத்திரிகை இயல் முன்னோடி கலைஒலி முத்தையாபிள்ளை நினைவுக் குழுவின் செயலாளர் எச். எச். விக்ரமசிங்க, இர. சிவலிங்கத்தின் முன்னுரையோடு வெளியிட்ட ‘மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்’ (1994) என்ற வரலாற்று ஆய்வு நூலை எழுதிய மாத்தளை வடிவேலனுக்கு அமெரிக்க முத்தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சை தமிழ் பல்கலைக்கழகம் இணைந்து நடாத்திய ‘மலையகம் 200’ நிகழ்வில் ‘மதிப்புறு முனைவர்’ பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளது.

**- எஸ். மரதன் கிருஸ்ணன்**

# இலங்கையில் இனரீதியான வன்முறைகள் உருவாகாது தடுத்தல்!

**மருத்துவர் சி.யமுனாநந்தா**

எமது கடந்தகால அனுபவங்கள் எம்மை இலங்கையில் ஐக்கியத்துடன் வாழ்வதற்கான வழியினைக் கற்றுத்தந்து உள்ளது. அதனை நாம் புரிந்து எமது சமூகத்தினை வழி நடத்த வேண்டிய கடமை எமக்கு உள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலையில் ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது பாராளுமன்ற தேர்தலையோ நடத்தினால் இலங்கையில் இனரீதியான முரண்பாடு அரசியல்வாதிகளால் உருவாக்கப்படும். மாறாக மாகாணசபைத் தேர்தலை நடத்தினால் பிரதேச ஒருமைப்பாடு பேணப்படும். மாகா ண சபைத்தேர்தலுக்கு பின்னர் பாராளுமன்றத்தேர்தலையும் அதன் பின்னர் சனாதிபதித்தேர்தலையும் நடத்தினால் இனரீதியான அரசியல் பிரச்சாரம் அதிக அளவில் நடைபெறாது. இவை நாம் கடந்த கால அனுபவங்களாக கற்றுக்கொண்ட பாடங்கள் ஆகும்.

பொருளாதார தாழ்வு நிலையில் தேர்தல்களை எதிர்கொள்ளும் போது எதிர்தரப்பு அரசியல்வாதிகள் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட ஊக்குவிப்பர். இது ஒரு ஒருங்கிய பயங்கரவாத செயலாக கருதப்படல் வேண்டும்.(Hybride Terrorism) தொடர்ச்சியாக இவ்வாறான தொழிற்சங்க நடவடிக்கைகள் நடைபெற்றால் அவசரகால நிலையின் கீழ் தொழிற்சங்க நடவடிக்கைகளை குறித்த காலத்திற்கு தடை செய்தல் அவசியம்.

அடுத்து அண்மையில் யாழ்ப்பாண நகரில் முற்றவெளியில் நிகழ்ந்த களியாட்ட விழா குழப்பத்தில் முடிந்தது. யாழ்ப்பாணக் கோட்டையும் அதனைச் சூழ்ந்த பிரதேசமும் போத்துக்கேயர் காலத்தில் இருந்து பெரும் மனித அவலங்களைச் சந்தித்த இடமாகும். 1971ஆம் ஆண்டு புரட்சியின் போது தென்னிலங்கை இளைஞர்கள் இங்கேயே சிறைவைக்கப்பட்டு இருந்தனர். 1984 ம் ஆண்டுக்குப் பின் பல உயிர்களின் பரிதவிப்புக்கள் இப்பகுதியில் நிகழ்ந்து உள்ளது. இதில் இலங்கை இராணுவ வீரர்க ளும் பொது மக்களும் அடங்குவர். எனவே இத்தகைய துன்பியல் ஆத்மவலியினை உடைய நிலத்தில் களியாட்ட நிகழ்வுகளை எதிர் காலங்களில் நடத்தாது விடுவதே சிறந்தது. மேலும் இத்தகைய இடங்களில் குதூகலிக்க மனம் கொள்வது கடந்த வரலாற்றை அறியாத தன்மையாகும்.

இத்தகைய இடங்களில் நிகழும் வன்முறைகள் இன முரண்பாடுகளை அதிகரிக்கவே செய்யும். எனவே இவற்றில் நாம் அவதானமாக இருத்தல் வேண்டும்.

# இந்தவார ராசிபலன் 18.02.2024 - 24.02.2024

ஞாயிற்றுக்கிழமை
சோபகிருது வருடம் - மாசி 06
நல்ல நேரம்: 9.32 - 11.02
ராகு காலம் : 05.02 - 06.32 திதி : நவமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.. சுபசெய்திகள் கேட்டு மனம் மகிழும். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர்கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். தொலை தூரம் பயணங்களால் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் சிலருக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய இல்லம் அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். போட்டி பொறாமைகள் அதிகமாகும். எதிர்பாராத தனவரவு ஏற்படும். புத்திர பாக்கியம், பதவி உயர்வு, புதிய தொழில் வாய்ப்புகள் ஏற்படும். பண விஷயமான சிந்தனைகள் எழும். சிலர் காவல்துறை பிரச்சினைகளை சந்திக்க நேரலாம். செய்யும் தொழிலில் தடைகள் ஏற்படலாம். தந்தை வழி உறவுகள் தொல்லை ஏற்படலாம்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிக்கும். பூஜா வழிபாடுகளும், பெரியோர் ஆசிகள் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் உதவியால் உள்ளம் மகிழும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் இருக்கும். வாக்கு வன்மையால் பொருளாதார முன்னேற்றங்கள் ஏற்படும். பிரயாணத்தின் போது எச்சரிக்கையோடு இருத்தல் அவசியம். பகைகளை வெல்லும் திறன் ஏற்படும். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். வீட்டில் சுப காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தைவழி உறவுகளை வீண் தொல்லைகள் ஏற்படலாம். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. மேலதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பலன்களை அடைவார்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் வாக்கு வன்மை ஓங்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும். சிலருக்குத் திருமணம், சந்ததி விருத்தி ஏற்படும். சகோதரரால் நன்மைகள் உண்டு. எனவே, கோபத்தை அடக்கி அவர்களுடன் ஒத்துப் போவது நல்லது. நண்பர்களுடன் சினிமா போன்ற கேளிக்கைகளில் ஈடுபட்டு இன்பம் துய்ப்பீர்கள். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிக்கிறார்கள். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். துவக்கத்தில் கையில் எடுக்கும் காரியங்களில் எல்லாம் தடை, தாமதங்கள் ஏற்படும், வேலைகளை முடிக்க தேவையற்ற அலைச்சல்கள் ஏற்படும்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் பெண்களின் அழகும், பொலிவும், அறிவுத்திறனும் கூடும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்லதே நடக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த முயற்சிகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் நிம்மதி ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவிகள் கிடைக்கும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். அரசு பதவியில் உள்ளவர்களின் அனுகூலமான நடவடிக்கைகள் மனதில் புத்துணர்ச்சியை ஏற்படுத்தும். நண்பர்களிடம் சுமுகமாக இருக்க முயற்சியுங்கள். பயணங்களால் செலவுகள் அதிகமாகும், ஆதலால் பணமுடையும் இருக்கும். பணிபுரிவர்களுக்கு வேலையில் சிரத்தையும், மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சியும் உண்டாகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி கூடும். தாயின் ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். புதுத்தெம்பும், உற்சாகமும் கூடும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் அன்பு மிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். மாணவர்களுக்குப் படிப்பில் தேர்ச்சி ஏற்பட்டு, அறிவுச் சுடரொளி வீசும். புது வீடு கட்டிக் குடியேறும் பாக்கியம் ஏற்படும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், இலாபகரமாகவும் அமையும். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம்.

# மக்களவை தேர்தலில் போட்டியிடத் தயங்குகிறார்களா பா.ஜ.க. தலைவர்கள்?

கடந்த சில மாதங்களாகவே தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்தில் தீவிர கவனம் செலுத்திவந்த இந்திய மத்திய இணையமைச்சர் எல். முருகன், மாநிலங்கள வைக்கு தேர்வுசெய்யப்பட்டிருக்கிறார். பா.ஜ.கவின் மாநிலத் தலைவர் கே. அண்ணாமலை, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என ஏற்கனவே அறிவித்துவிட்டார். காரணம் என்ன?

பா.ஜ.கவின் மாநிலங்களவைக்கான நியமனப் பட்டியல் கடந்த புதன்கிழமையன்று வெளியானது. அதில் மத்திய இணையமைச்சர் எல். முருகனின் பெயரும் இடம்பெற்றிருந்தது பலரது புருவங்களையும் உயர்த்தியது. காரணம், நீலகிரி மக்களவை தொகுதியைக் குறிவைத்து பல மாதங்களாகவே பணியாற்றி வந்தார் எல். முருகன்.

ஆறு - ஏழு மாதங்களாகவே நீலகிரி பகுதிக்கு அடிக்கடி வந்து, பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டிருந்தார் எல். முருகன். மக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களையும் பெற்றுவந்தார். கிட்டத்தட்ட தேர்தல் பிரச்சாரமே துவங்கிவிட்டது எனச் சொல்லும் அளவுக்கு முருகனுக்கான தேர்தல் பணிகள் நடந்துவந்தன.

நீலகிரி தொகுதியைப் பொறுத்தவரை, பா.ஜ.கவுக்கு சற்று ஆதரவு உள்ள தொகுதிதான். *1998, 1999* ஆகிய இரண்டு முறையும் பா.ஜ.கவின் மாஸ்டர் மதன் இந்தத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றிருக்கிறார். குறிப்பாக, நீலகிரியின் மலைப் பகுதிகள் பா.ஜ.கவுக்கு சாதகமானவையாகக் கருதப்படுகின்றந. ஆகவே, இந்த முறை நீலகிரி தொகுதியில் ஆ. ராசாவை எதிர்த்து பா.ஜ.கவின் சார்பில் எல். முருகன் களமிறங்குவது உறுதி எனக் கருதப்பட்டது.

இந்த நிலையில்தான், திடீரென மத்திய பிரதேசத்தில் இருந்து மாநிலங்களவை உறுப்பினராக அவர் தேர்வு செய்யப்படுவது குறித்த அறிவிப்பு வெளியாகியிருக்கிறது.

### அண்ணாமலையும் போட்டியிடவில்லை

அதே நாளில் கோயம்புத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய கே. அண்ணாமலையும் தான் இந்தத் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்றும் தனக்கு கட்சிப் பணிகள் அதிகமாக இருப்பதாகவும் கூறியிருந்தார். ஆனால், அண்ணாமலை சொல்வது இது முதல் முறையல்ல.

நாடாளுமன்றத் தேர்தலில் அவர் கோயம்புத்தூரிலிருந்து போட்டியிடலாம் எனப் பேச்சுகள் அடிபட்டு வந்த நிலையில், கடந்த ஆகஸ்ட் மாதத்திலிருந்தே பல தருணங்களில் தான் நாடாளுமன்றத் தேர்தலில்



போட்டியிடப் போவதில்லை என்பதை அண்ணாமலை மீண்டும் மீண்டும் சொல்லி வருகிறார். ஆகவே அவருடைய புதன்கிழமை அறிவிப்பு புதிதல்ல என்றாலும், ஒரே நாளில் பா.ஜ.கவின் இரண்டு தலைவர்கள் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை எனக் கூறி ஒதுங்கியது சற்றுப் பரபரப்பை ஏற்படுத்தியது.

அரசியல் நோக்கர்களைப் பொறுத்தவரை, பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி உடைந்ததே, எல். முருகன் இப்படி ஒதுங்கிக்கொண்டதற்குக் காரணம் எனக் கருதுகிறார்கள். கடந்த ஆண்டு செப்டம்பரில், பா.ஜ.க. கூட்டணியிலிருந்து அ.தி.மு.க. வெளியேறுவதாக அறிவித்த பிறகு, கூட்டணியை மீண்டும் உருவாக்க பா.ஜ.க. பல முறை முயற்சித்தும் அதில் வெற்றி கிடைக்கவில்லை எனக் கூறப்படுகிறது. இந்தப் பின்னணியில்தான் எல். முருகனின் மாநிலங்களவை நியமனம் நடந்திருக்கிறது.

ஆனால், இதையெல்லாம் எல். முருகன் மறுக்கிறார். இது தொடர்பாக செய்தியாளர்கள் எல். முருகனிடம் கேட்டபோது, "கட்சியின் கட்டளையை நிறைவேற்றத் தயாராக இருக்க வேண்டும். இது என்னுடைய முடிவல்ல. தேசியத் தலைமை எடுத்த முடிவு. எங்களுக்கு எந்த பயமும் கிடையாது. ராசாவையும் தி.மு.கவையும் தூக்கியெறிய வேண்டியதுதான் எங்கள் முதல் கடமை. அதற்கான பணிகளை அண்ணாமலையும் எங்கள் அணியும் செய்து கொண்டிருக்கிறோம். கூடிய சீக்கிரம் தி.மு.க. காணாமல் போகும். வரும் நாடாளுமன்றத் தேர்தலில் *40* தொகுதிகளிலும் எங்களுடைய தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும்" என்று மட்டும் தெரிவித்தார்.

### அதிமுக கூட்டணி பிளவே காரணம்

ஆனால், இதில் வேறு பல செய்திகளும் இருக்கின்றன. அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. இல்லையென்றால், தான் போட்டிபோட விரும்பவில்லை என்ற எல். முருகனின் கோரிக்கையை தேசிய தலைமை ஏற்றுக்கொண்டு, அவருக்கு வேறு ஒரு வாய்ப்பை வழங்கியிருக்கிறது என்பதுதான் இந்த நியமனத்தின் பொருள்.

மேலும், பா.ஜ.க. வெற்றிபெற்று மீண்டும் மத்தியில் ஆட்சியமைக்கும் பட்சத்தில் தமிழ்நாட்டிற்கு ஒரு பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் எல். முருகனுக்கு மீண்டும் இணையமைச்சர் பதவியோ, அமைச்சர் பதவியோ கிடைக்கக்கூடும். இது தமிழக பா.ஜ.கவில் மாநிலத் தலைவர் கே. அண்ணாமலைக்கு இணையான ஒரு இடத்தை முருகனுக்கு அளிக்கும் என்பதும் கவனிக்கத்தக்கது.

### பாஜக தரப்பு என்ன சொல்கிறது?

ஆனால், இவ்வளவு யூகங்களுக்கெல்லாம் வேலையே இல்லை என்கிறார் பா.ஜ.கவின் மாநில துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி.

"எல். முருகன் மத்திய அமைச்சராக இருக்கிறார். அவருடைய எம்.பி. பதவிக் காலம் முடிவுக்கு வந்தது. அதனால், மீண்டும் மாநிலங்களவை உறுப்பினராக்கியிருக்கிறார்கள். இதைத் தவிர, இதில் வேறு யூகங்களுக்கே வேலையில்லை. இதைப் பற்றி சொல்வதற்கும் வேறு எதுவும் இல்லை" என்கிறார் நாராயணன் திருப்பதி.

பா.ஜ.க. தலைமையின் இந்த முடிவுக்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம் என்கிறார் மூத்த பத்திரிகை யாளர் ப்ரியன்.

"பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி முறிந்த பிறகு பல கணக்குகள் மாறிவிட்டன. தமிழக பா.ஜ.கவின் பல தலைவர்கள் போட்டியிடத் தயங்குகிறார்கள். மற்றொரு பக்கம், பா.ஜ.க. மீண்டும் மத்தியில் ஆட்சியைப் பிடிக் கும் பட்சத்தில் முருகனை மறுபடி அமைச்சராக கலாம். ஆனால், அவர் தோல்வியடைந்தால் அது பெரிய தர்ம சங்கடமாக இருக்கும். ஏற்கனவே தாராபுரத்தில் தோற்ற வரைத்தான் மாநிலங்களவை உறுப்பினராக்கினார்கள். இப்போது மறுபடியும் தோற்றால், அந்தத் தருணத்தில் மீண்டும் மாநிலங்களவை உறுப்பினராக்க, அமைச்ச ராக்க வேண்டியிருக்கும். அதைத் தவிர்க்கக்கூட இதைச் செய்திருக்கலாம்" என்கிறார் ப்ரியன்.

ஆனால், நீலகிரியைச் சேர்ந்த கட்சிக்காரர்களிடம் அந்தத் தொகுதியில் எல். முருகன் போட்டியிடுவார் என்ற நம்பிக்கை இன்னும் அவர்களிடம் இருக்கிறது. "எல். முருகன் நீண்ட காலமாகவே இங்கே பணியாற்றினார். கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கும் மேலாக தீவிரமாக வேலை பார்த்தார். மக்களிடமும் நல்ல அறிமுகத்தை ஏற்படுத்திக்கொண்டார். எல்லாப் பிரிவினரையும் சந்தித்துப் பேசினார். சில வேண்டுகோள்களையும் நிறைவேற்றித் தந்தார். அதனால், அவர் என்னதான் மாநிலங்களவை உறுப்பினராகிவிட்டாலும் நீலகிரி தொகுதியிலும் போட்டியிடுவார் என்ற நம்பிக்கை இன்னும் எங்களுக்கு இருக்கிறது" என்கிறார் நீலகிரியின் பா.ஜ.க. மாவட்டத் தலைவரான மோகன் ராஜ்.

அண்ணாமலையைப் பொறுத்தவரை, தான் போட்டியிடப் போவதில்லை என்று சொல்லிவந்தாலும்கூட, மத்தியத் தலைமை அறிவித்தால், அவர் போட்டியிட வேண்டியிருக்கும். பா.ஜ.கவைப் பொறுத்தவரை மத்திய அமைச்சர்களையே சட்டமன்ற மன்றத் தேர்தல் களில் களமிறக்கினார்கள் என்பதை மறக்கக்கூடாது என்கிறார் ப்ரியன்.

## காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகளை முடக்கிய வருமான வரித்துறை!!



### காங்கிரஸ் வங்கிக்கணக்கு முடக்கம்

வருமான வரித்துறை தங்களது அனைத்து வங்கிக் கணக்குகளையும் முடக்கிவிட்டதாக காங்கிரஸ் தெரிவித்துள்ளது. மேலும் வருமான வரித்துறை *210* கோடி ரூபாய் அபராதம் விதித்துள்ளதாகவும் காங்கிரஸ் கூறியுள்ளது.

காங்கிரஸ் கட்சியின் வங்கிக் கணக்குகள் மட்டுமின்றி இளைஞர் காங்கிரசின் கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தலைவர் அஜய் மக்கான் வெள்ளிக்கிழமை நடந்த செய்தியாளர் சந்திப்பில் கூறினார். மேலும் வருமான வரித்துறை மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் விசாரணை நடந்து வருவதாகவும் கூறினார்.

வங்கிக் கணக்குகளில் ஒரு குறிப்பிட்ட வரம்பு வரையிலான பணத்தை முடக்கிவிட்டு மீதமுள்ள பணத்தை உபயோகப்படுத்துவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் அந்த வரம்புடன் ஒப்பிடுகையில் காங்கிரஸ் கட்சியின் கணக்குகளில் உள்ள நிதியின் அளவு மிகவும் குறைவு என்றும், எனவே உபயோகிப்பதற்கு எந்த நிதியும் மீதமில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக பாஜக செய்தித் தொடர்பாளர் நளின் கோலி, "தனக்கு முன்பாக யார் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் சட்டம் பார்ப்பதில்லை, விதிமீறல் நடந்ததா இல்லையா என்பதை மட்டும்தான் சட்டம் பார்க்கிறது," என்று கூறியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக டெல்லி ஜந்தர் மந்தரில் இளைஞர் காங்கிரஸ் வெள்ளிக்கிழமை மதியம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. மக்கானின் செய்தியாளர் சந்திப்புக்குப் பிறகு வருமான வரித்துறையிடம் இருந்து எந்தப் பதிலும் இல்லை.

### காங்கிரஸ் தலைவர் அஜய் மக்கானின் குற்றச்சாட்டு

வெள்ளிக்கிழமை காலை அஜய் மக்கான் தனது எக்ஸ் பக்கத்தில், "ஜனநாயகம் தாக்குதலுக்கு உள்ளாகிறது" என்று கூறியிருந்தார்.

அடுத்து நடந்த செய்தியாளர் சந்திப்பில் காங்கிரஸின் அனைத்து கணக்குகளும் முடக்கப்பட்டுள்ளதாக அஜய் மக்கான் கூறினார். மேலும், "காங்கிரஸ் கணக்குகள் மட்டும் முடக்கப்படவில்லை, நாட்டின் ஜனநாயகமும் முடக்கப்பட்டுள்ளது. இது மிகவும் கவலையளிக்கக்கூடிய ஒரு செய்தி," என்று அவர் கூறினார்.

இந்த விவகாரம் குறித்து சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ள ராகுல் காந்தி, "பயப்படாதீர்கள் மோடி, காங்கிரஸ் என்பது பண பலத்தை அல்ல, மக்கள் பலத்தைச் சார்ந்துள்ளது. சர்வாதிகாரத்தின் முன் நாங்கள் ஒருபோதும் பணிந்ததில்லை, இப்போதும் தலை வணங்க மாட்டோம். இந்தியாவின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனைத்து காங்கிரஸ் தொண்டர்களும் முழுமூச்சுடன் போராடுவார்கள்," என்று கூறியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன் கார்கே சமூக ஊடகங்களில், "அரசமைப்பு சட்டத்திற்கு விரோதமாக பாஜக வசூலித்த பணம் தேர்தலில் பயன்படுத்தப்படும், ஆனால் கிரவுட் ஃபண்டிங் மூலம் நாங்கள் வசூலித்த பணம் முடக்கப்படும். இதனால்தான் எதிர்காலத்தில் நாட்டில் தேர்தலே நடக்காது என்று நாங்கள் கூறுகிறோம்," என்று பதிவிட்டுள்ளார்.

செய்தியாளர் சந்திப்பு முடிந்து இரண்டு மணிநேரம் கழித்து, இந்த வழக்கு தொடர்பாக மேல்முறையீட்டு தீர்ப்பாயத்தில் நடைபெற்ற விசாரணை குறித்த கூடுதல் தகவல்களை அஜய் மக்கான் தெரிவித்தார். வருமான வரித்துறையும், வருமான வரித்துறை மேல்முறையீட்டு தீர்ப்பாயமும் காங்கிரஸின் மனுவை விசாரித்து, குறிப்பிட்ட வரம்பு வரை வங்கிக் கணக்கில் பணத்தை முடக்கிவிட்டு மீதித் தொகையை எடுக்க அனுமதி அளித்துள்ளது என்றார்.

"ரூபாய் *115* கோடி வங்கியில் இருப்பதை உறுதி செய்யுமாறு எங்களிடம் கூறப்பட்டுள்ளது. இந்த வரம்புக்கு மேல் எந்தத் தொகையையும் கட்சி பயன்படுத்திக் கொள்ளலாம். அதாவது *115* கோடி வரை முடக்கப்படும் என்று அர்த்தம். இந்தத் தொகை நமது வங்கிக் கணக்கில் வைக்கப்பட்டுள்ள தொகையைவிட மிக அதிகம்," என்று அவர் கூறியுள்ளார்.

முன்னதாக செய்தியாளர் சந்திப்பில் அஜய் மக்கான், காங்கிரஸின் வங்கிக் கணக்கில் சுமார் *25* கோடி ரூபாய் மட்டுமே உள்ளது என்று கூறியிருந்தார்.

# மீண்டும் அந்த சலித்துப்போன ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக் கதை



வீரகத்தி தனபாலசிங்கம்

அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எத்தனை தடவைகள் கூறினாலும், தேர்தலை ஒத்திவைப்பதற்கு எந்த நேரத்திலும் எதையாவது அவர் செய்யக்கூடும் என்ற சந்தேகம் எதிரணி கட்சிகளை விட்டுப் போவதாக இல்லை. சாத்தியமானளவுக்கு தேர்தல்களை தாமதிப்பதற்கு இந்த அரசாங்கம் இயன்றவரை பிரயத்தனங்களைச் செய்யக்கூடியது என்ற எண்ணம் பரவலாக வலுவடைந்துவிட்டது.

ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கான இறுதி முயற்சியாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கவேண்டிய தேவை குறித்து பொது விவாதம் ஒன்று சில அரசியல்வாதிகளினால் முன்னெடுக்கப்பட்டிருப்தாக கடந்த வாரம் செய்திகள் வெளியாகின.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாசவுடன் தற்போது முரண்படத் தொடங்கியிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ராஜித சேனாரத்ன போன்ற அரசியல்வாதிகள் இந்த வருடம் தேர்தலை நடத்தாமல் ஜனாதிபதி ஆட்சிமுறையை உடனடியாகவே ஒழித்து விடவேண்டும் என்ற கருத்தை முன்வைத்திருக்கிறார்கள்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தலைமையிலான சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தினால் முன்னெடுக்கப்படும் புதிய தேர்தல் சீர்திருத்தங்களுக்கான இயக்கத்தின் தொடக்க நிகழ்வில் அவர்கள் பேசினார்கள். ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு உட்பட தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த இயக்கத்தின் நோக்கம் என்று கூறப்படுகிறது.

எந்தவொரு தேர்தலையும் ஒத்திவைப்பதற்கு ஆதரவாக ஒருபோதும் செயற்படப்போவதில்லை என்று கரு ஜெயசூரிய கூறியிருக்கின்ற போதிலும், ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கான ஒரு முயற்சியாகவே தற்போது தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்து மீண்டும் பேசப்படுகிறது என்று கட்சிகள் பலவும் சந்தேகம் கிளப்புகின்றன. இது விடயத்தில் ஜனாதிபதி விக்கிரமசிங்க அரசாங்க சார்பற்ற தன்னார்வ நிறுவனங்கள் சிலவற்றின் ஆதரவைத் திரட்டுவதாகவும் குற்றஞ்சாட்டப்படுகிறது.

ஆனால், இந்த செய்திகள் வந்த மறுநாளே ஜனாதிபதி செயலக ஊடகப் பிரிவு ஜனாதிபதி தேர்தல் உரிய நேரத்தில் நடத்தப்படும் என்றும் பாராளுமன்ற தேர்தல் அடுத்த வருடம் நடத்தப்படும் என்றும் அறிக்கை வெளியிட்டது. இவ்வருடம் நடத்தப்படவேண்டிய தேர்தலுக்காக 1000 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்யும் முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துவிட்டதாகவும் பாராளுமன்ற தேர்தலுக்காக 2025 பட்ஜெட்டில் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

**உதய கம்மன்பிலவின் விளக்கம்**

அதேவேளை, ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் கடைப்பிடிக்கும் என்று தான் சந்தேகிக்கும் உபாயம் குறித்து பிவிதுறு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில கடந்த வாரம் செய்தியாளர்கள் மகாநாட்டில் வெளியிட்ட தகவல்கள் முக்கிய கவனத்துக்குரியவை.

“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான ஒரு அரசியலமைப்பு திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படுவதற்கு மேலதிகமாக சர்வஜன வாக்கெடுப்பொன்றில் மக்களின் அங்கீகாரத்தையும் பெறவேண்டும் என்று உயர்நீதிமன்றம் ஏற்கெனவே கூறியிருக்கிறது. பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிறகு திருத்தம் சர்வஜன வாக்கெடுப்புக்கு விடப்படவேண்டும். மக்களின் அங்கீகாரம் கிடைத்த பிறகு முன்னெடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசியலமைப்பின் 80 வது சரத்தில் விபரிக்கப்பட்டிருக்கிறது.



“ஆனால், சர்வஜன வாக்கெடுப்பு முடிவுகளின் தகுதிக்கு எதிராக எவராவது மனுவொன்றைத் தாக்கல் செய்தால், சர்வஜன வாக்கெடுப்பு செல்லுபடியாகக் கூடியதா இல்லையா என்பதை உயர்நீதிமன்றம் தீர்மானிக்கும் வரை திருத்தச் சட்டமூலத்தை ஜனாதிபதி சான்றுப்படுத்த முடியாது. மறு வார்த்தைகளில் கூறுவதானால், சர்வஜன வாக்கெடுப்பின் தகுதி சவாலுக்கு உட்படுத்தப்பட்டால் உயர்நீதிமன்றத்தின் தீர்மானம் வரும் வரை ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கமுடியாது. 2025 ஆகஸ்டில் பாராளுமன்றம் கலைக்கப்படும் வரை தற்போதைய ஜனாதிபதி அதிகாரத்தில் தொடர்ந்து இருக்கமுடியும்.

“உயர்நீதிமன்ற விசாரணையை ஆறு மாதங்களுக்குள் நிறைவுசெய்வதற்கு சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும் என்று சர்வஜன வாக்கெடுப்புச் சட்டம் கூறுகின்ற போதிலும், அது கட்டாயமானது அல்ல.

“அரசியலமைப்பு திருத்தத்தை ஜனாதிபதி சான்றுப்படுத்தும் வரை தற்போதைய அரசியலமைப்பே நடைமுறையில் இருக்கும் என்பதால் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்று சிலர் வாதிடலாம். அதன் காரணத்தினால் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு எந்த தடையும் இல்லை என்று அவர்கள் கூறலாம். நுட்ப நுணுக்கத்தின்படி அது உண்மை என்றாலும் நடைமுறைச் சாத்தியமானதல்ல. அடுத்த ஜனாதிபதி தேர்தலை தவிர்ப்பதற்கான அரசாங்கத்தின் பொறியில் எதிரணி கட்சிகள் வீழ்ந்து விடக்கூடாது” என்று கம்மன்பில கூறினார்.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு என்பது உண்மையில் அலுத்துப்போன கதைதான். ஆனால் மீண்டும் பேசுபொருளாகியிருப்பதால் அது குறித்து எழுதுவதை தவிர்க்கவும் முடியவில்லை.

**விஜேதாச ராஜபக்சவின் யோசனை**

கடந்த வருடம் அக்டோபரிலும் இவ்வாறு ஒரு கதை வந்தது. அதாவது பாராளுமன்ற தேர்தலை பழைய தொகுதி முறையையும் தற்போதைய விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையையும் உள்ளடக்கிய கலப்பு முறையில் நடத்துவதற்கான யோசனை அடங்கிய அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை நீதியமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ச சமர்ப்பித்ததாகக் கூறப்பட்டது.

> ஜனாதிபதி ஆட்சிமுறையினால் இதுகாலவரையில் மக்கள் எதிர்நோக்கிய சொல்லொணாத் துன்பங்களுடன் ஒப்பிடும்போது அதை ஒழிப்பதற்கு ஒரு தேர்தலைத் தியாகம் செய்வதால் பெரிதாக எந்த கெடுதியும் வந்துவிடப்போவதில்லை என்று சில அவதானிகள் கூறுகிறார்கள்.

225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 160 பேர் தொகுதி அடிப்படையிலும் மிகுதி 65 பேரும் அரசியல் கட்சிகளுக்கு கிடைக்கும் வாக்குகளின் விகிதாசாரத்தின் அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவதும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட்டு நிறைவேற்று அதிகாரமுடைய பிரதமரைக் கொண்ட பாராளுமன்ற ஆட்சிமுறை மீண்டும் கொண்டுவரப்படவேண்டுமா இல்லையா என்பது குறித்து சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்துவதுமே அவரின் யோசனைகள் என்றும் கூறப்பட்டது.

ஆனால், அந்த யோசனைகள் தேசிய தேர்தல்களைச் சீர்குலைப்பதை நோக்கமாகக் கொண்டவை என்றும் உள்ளூராட்சி தேர்தல்களும் மாகாணசபை தேர்தல்களும் காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டிருக்கும் நிலையில் அந்த தேர்தல் சீர்திருத்த யோசனைகளை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று எதிரணி கட்சிகள் கடுமையான எதிர்ப்பைக் காட்டியதை அடுத்து அந்த முயற்சி முன்னெடுக்கப்படவில்லை. தங்களுக்கு அவ்வாறு எந்த யோசனையும் இருக்கவில்லை என்று கூறுதிலும் கூட விஜேதாச ராஜபக்ச எந்த அசௌகரியத்தையும் எதிர்நோக்கியதாக தெரியவில்லை.

அடுத்த பாராளுமன்ற தேர்தலுக்கு பிறகு தெரிவுசெய்யப்படும் பாராளுமன்றமே ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து தீர்மானிக்கவேண்டும் என்பதே ஐக்கிய மக்கள் சக்தியினதும் தேசிய மக்கள் சக்தியினதும் நிலைப்பாடாக இருந்து வருகிறது. குறிப்பாக ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கான எந்த முயற்சியையும் அவர்கள் அனுமதிக்கப் போவதில்லை.

**அரசியலமைப்பில் ஏற்பாடு இல்லை**

அதேவேளை, ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசியலமைப்பில் எந்தவொரு ஏற்பாடும் இல்லை. அரசியலமைப்பில் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலமும் இல்லை. அந்த தேர்தலை ஒத்திவைக்கவேண்டுமானால் அதற்குரிய அரசியலமைப்புத் திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படுவதுடன் தேசிய சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றில் மக்களின் அங்கீகாரத்தைப் பெறவேண்டும் என்று சில சட்டநிபுணர்கள் வாதிடுகிறார்கள். அண்மையில் இணையவெளி பாதுகாப்பு சட்டமூலத்தை உயர்நீதிமன்றத்தின் விதப்புரைகளை அலட்சியம் செய்து அரசாங்கம் அவசர அவசரமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றியதைப் போன்று ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்கும் திருத்த விடயத்தில் நடந்து கொள்ள முடியாது.

**மகிந்தவின் மனமாற்றம்**

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையின் உறுதியான ஆதரவாளரான முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அந்த ஆட்சிமுறையை ஒழித்து விடுவது விரும்பத்தக்கது என்று கடந்தவாரம் கூறியிருப்பது அரசாங்கத்தின் நோக்கம் தொடர்பிலான சந்தேகத்தை வலுப்படுத்துகிறது.

தனது முதலாவது பதவிக்காலத்துக்கு பிறகு ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக அவர் ஒரு தடவை உறுதியளித்த போதிலும் பதவிக்கு வந்த பிறகு ஜனாதிபதியின் அதிகாரங்களை மேலும் அதிகரிப்பதற்கு அவர் செய்த காரியங்கள் எல்லோருக்கும் தெரியும். ஜனாதிபதி ஒருவருக்கு இருந்த இரு பதவிக்கால வரையறையை இல்லாமல் செய்ய அவரது இரண்டாவது பதவிக்காலத்தில் 18 வது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டுவந்தார். ஆனால் மூன்றாவது பதவிக்காலத்துக்கு மக்கள் அவருக்கு ஆணையை வழங்கவில்லை.

அத்தகைய ஒருவர் தற்போது ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு ஆதரவாகப் பேசியிருப்பது மாத்திரமல்ல, முழு நாடுமே அதை விரும்புவதாக வேறு கூறியிருக்கிறார். அதே போன்றே இன்னொரு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான முயற்சியொன்று குறித்து தெரிய வருவதாகவும் அவ்வாறு செய்வதற்கு அரசியலமைப்பு திருத்தம் கொண்டு வரப்படுமானால் அதை சிறிலங்கா சுதந்திர கட்சி ஆதரிக்கும் என்று கடந்த வாரம் கூறியிருக்கிறார்.

ஆனால், இது குறித்து ஜனாதிபதி விக்கிரமசிங்கவிடம் இருந்து இதுவரை எந்த பிரதிபலிப்பும் வரவில்லை. உரிய நேரத்தில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்று ஜனாதிபதி செயலக ஊடகப்பிரிவு அறிக்கையை மாத்திரம் வெளியிட்டிருக்கிறது.

**வாக்குறுதி மீறல்களின் வரலாறு**

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப் தேர்தல்களில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி அளித்து அதிகாரத்துக்கு வந்த எந்த ஜனாதிபதியும் அதை நிறைவேற்றவில்லை என்பதை இப்போது சொல்லித் தான் தெரியவைக்க வேண்டும் என்றில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

ஈழநாடு



# ஒட்டகம் கூடாரத்துள் நுழைந்தபோதே தமிழரசின் வீட்டை சூது கவ்வியது

**பனங்காட்டான்**

சாண் ஏற முழம் சறுக்குது என்றொரு முதுமொழியுண்டு. அகில இலங்கை தமிழரசுக் கட்சிக்கு இப்போது இது பொருத்தமாகத் தெரிகிறது.

சுமார் பத்து ஆண்டுகளாக புதிய நிர்வாகிகள் தெரிவின்றி ஒரே தலைமையில் இயங்கிய தமிழரசுக் கட்சிக்கு புதுவாழ்வு கொடுக்க வேண்டுமென்ற சிரத்தையால் முன்னெடுக்கப்பட்ட முயற்சி கட்டெறும்பாகி நிற்கிறது.

மாவை சேனாதிராஜாவின் பதவி ஆசைக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று புறப்பட்டவர்கள் இன்று பதவி மோகத்தால் சூழ்ச்சி வலைகளைப் பின்னி கட்சியை நீதிமன்றத்துள் கொண்டு சென்று நிறுத்தியுள்ளனர்.

தென்னிலங்கையிலும் ஐக்கிய தேசிய கட்சிக்குள் 1970களில் டட்லி சேனநாயக்கவுக்கும் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுக்கும் இடையில் உருவான பிரச்சனை நீதிமன்றம் வரை சென்றது. சிறீலங்கா சுதந்திர கட்சிக்கு உரிமை கோரி அநுர பண்டாரநாயக்க தமது தாயார் சிறீமாவோவுக்கும் சகோதரி சந்திரிகாவுக்கும் எதிராக நீதிமன்றத்தை நாடினார். இவர்களின் பிரச்னை ஆட்சியைக் கைப்பற்றி அரியாசனம் ஏறுவதால் உருவானது.

ஆனால், தமிழரசுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிரச்னை கட்சியை வளர்ப்பது என்பதைவிட அதனை உடைத்து நிர்மூலமாக்குவதையே இலக்காக்கியுள்ளது. இதன் ஆரம்பம் 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போதே ஆரம்பமானது. இரண்டு பிரமுகர்கள் தங்களுக்குள் செய்துகொண்ட 'கனவான்கள் ஒப்பந்தம்' சில வாக்குறுதிகளை மையமாகக் கொண்டது. எவ்வகையிலாவது தேர்தலில் வெற்றி பெற வேண்டுமென்பதற்காக ஏற்பட்ட இந்த இணக்கம், அண்மையில் நடைபெற்ற கட்சித் தலைவர் தெரிவின்போது மீறப்பட்டது.

கடந்த தேர்தலின்போது தாம் தோற்றுவிடுவோம் என்ற அச்சத்தில் சிவஞானம் சிறீதரனின் ஆதரவை சுமந்திரன் நாடினார். இதன் அடிப்படையில் எழுதாத இந்த ஒப்பந்தம் சிறீதரனின் வாக்குப்பலத்தை சுமந்திரனுக்குப் பகிர்ந்தது. சிறீதரனுக்கு முதலாம் வாக்களிப்பவர்கள் இரண்டாவது வாக்கை சுமந்திரனுக்கும், சுமந்திரனுக்கு முதலாம் வாக்களிப்பவர்கள் இரண்டாம் வாக்கை சிறீதரனுக்கும் அளிப்பதற்கு ஏற்பாடானது.

2015 தேர்தலில் 72,058 வாக்குகள் பெற்ற சிறீதரன் 2020 தேர்தலில் 35,887 வாக்குகளைப் பெற்றார். 2015 தேர்தலில் 58,043 வாக்குகளைப் பெற்ற சுமந்திரன் 2020ல் 27,834 வாக்குகளை மட்டுமே பெற்றார்.

சுமந்திரனும் சிறீதரனும் கூட்டுச் சேர்ந்ததை விரும்பாத தமிழரசுக் கட்சி ஆதரவாளர்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டியதால் 2015ல் இருவரும் பெற்ற வாக்குகளைவிட சுமார் ஐம்பது வீதம் குறைவான வாக்குகளையே 2020 தேர்தலில் பெற முடிந்தது. கட்சித் தலைமை தேர்தலின்போது சிறீதரனுக்கு ஆதரவளிப்பதாக சுமந்திரன் அளித்த வாக்குறுதியை நம்பியே, சிறீதரன் தமது ஆதரவு வாக்குகளை சுமந்திரனுக்கு வழங்கி அவரை வெற்றிபெறச் செய்தாரென்பது அப்போதே வெளிவந்த தகவல்.

ஆனால், கடந்த மாதம் தலைவர் தெரிவு அறிவிக்கப்பட்டபோது சிறீதரனை எதிர்த்து சுமந்திரன் போட்டியிட களமிறங்கினார். தமிழரசுக் கட்சிக்குள் ஜனநாயகம் இருக்கிறது என்பதை வெளிக்காட்டவே தாம் போட்டியிடுவதாக அவர் இதனை நியாயப்படுத்தவும் முனைந்தார். ஆக ஜனநாயகம் என்ற பெயரிலேயே தாம் போட்டியிடுவதாக அறிவித்து சிறீதரனின் நெற்றியில் நாமம் போட்டார்.



தலைவர் தெரிவு முடிவு சுமந்திரன் சற்றும் எதிர்பாராதது. தமக்கு 200 வரையானவர்களின் ஆதரவு இருப்பதால் சிறீதரன் தோற்கடிக்கப்படுவாரென்று இவர் முழுமையாக நம்பியிருந்தார். இதன் அடிப்படையிலேயே, சிறீதரன் வெற்றி பெற்றால் ஒரு வாரம்கூட அவரது தலைமையின் கீழ் தாம் இருக்கப் போவதில்லையென்று தமக்கு நெருக்கமானவர்களிடம் அவர் தெரிவித்திருந்ததை சில உள்நாட்டு ஊடகவியலாளர்கள் நன்கு அறிந்திருந்தனர்.

இதனால், தேர்தலில் தோல்வியுற்ற

ஒட்டகம் முதலில் தனது தலையைத்தான் கூடாரத்துள் புகுத்தும். பின்னர் படிப்படியாக முழு உடம்பையும் உள்ளே தள்ளும். இதனால் ஏற்கனவே கூடாரத்துள் இருந்தவர்கள் வெளியேறுவர் அல்லது வெளியேற்றப்படுவர். இது நடைபெறவில்லையென்றால் ஒட்டகம் கூடாரத்தை நிர்மூலமாக்கி தனது முன்னைய இடத்துக்கு திரும்பிவிடும் என்று எப்போதோ படித்தது ஏன்தான் இப்போது நினைவுக்கு வருகிறதோ தெரியவில்லை.

பின்னர் தம்மை ஒரு ஜனநாயகவாதியாக வெளிக்காட்டுவதற்காக புதிய தலைவருடன் இணைந்து செயற்படுவதற்கு தாம் தயாரென அறிவித்த சுமந்திரன் அடுத்த கணமே மறைமுகமாக தமது வித்தையைக் காட்டும் நடவடிக்கைகளை கனகச்சிதமாக ஆரம்பித்தார்.

நிர்வாகிகள் தெரிவு ஆரம்பமான கூட்டத்துக்கு முன்னர் புதிதாக தெரிவான தலைவர் சிறீதரனுடன் கலந்துரையாடும்போது, தலைவர் தெரிவின்போது பிரிந்திருந்ததாக காணப்படும் இரண்டு அணிகளும் ஒன்று சேர வேண்டுமானால் கட்சியின் செயலாளர் பதவி தமக்கு தரவேண்டுமென சுமந்திரன் நேரடியாக வேண்டினார்.

கட்சியின் மரபுப்படி செயலாளர் பதவி கிழக்கு மாகாணத்துக்கு வழங்கப்பட வேண்டுமென சிறீதரன் பவ்வியமாக எடுத்துக் கூறினார். இதனை நன்கு தெரிந்து கொண்டே அப்பதவியைக் கேட்டது இவரது 'ஏ' பிளான். அடுத்து தமது 'பி' பிளானை நாசூக்காக முன்வைத்தார். அதாவது, செயலாளர் பதவிக்கு மூவரின் பெயர்களை சுமந்திரன் தெரிவித்தார். திருகோணமலை குகதாசன், மட்டக்களப்பு சாணக்கியன், அம்பாறை கலையரசன் ஆகியோரின் பெயர்களே சுமந்திரனால் தெரிவிக்கப்பட்டவை. இவரது நெளிவுசுளிவுகளை நன்கு அறிந்திராத சிறீதரன் அதற்குள் அகப்பட்டார்.

மட்டக்களப்பில் கடந்த தேர்தலின் போது தமிழரசுக் கட்சியில் இணைந்த சாணக்கியனுக்கு மூத்தவர்களான சிறீநேசன், அரியநேந்திரன், யோகேஸ்வரன் போன்றொரும், அம்பாறையில் கோடீஸ்வரன் போன்றோரும் திருமலையில் நவம் போன்றோரும் இருக்க எதற்காக குறிப்பிட்ட மூவரின் பெயர்களை மட்டும் சுமந்திரன் சிபாரிசு செய்கிறார் என்பதை அப்போது சிறீதரன் ஏனோ சிந்திக்கத் தவறி விட்டார்.

இவ்விடயங்கள் தொடர்பாக தமிழ் தொலைக்காட்சி ஒன்றில் சுமந்திரன் வழங்கிய நேர்காணலை கூர்ந்து அவதானித்தால் இவ்விடயத்தில் அவர் போட்ட வேடத்தை அப்பட்டமாக தெரிந்து கொள்ள முடியும். செயலாளர் பதவியை தமக்கு தருமாறு கேட்டதாக முதலில் தெரிவித்த சுமந்திரன் பின்னர் அப்பதவியை தாம் கேட்கவில்லையென்றும் தமது கருத்தை மட்டுமே சிறீதரனிடம் தெரிவித்ததாகவும் கூறி அதனை மழுப்புவதற்கு பெரும் பிரயத்தனம் மேற்கொண்டார்.

குகதாசன், சாணக்கியன், கலையரசன் ஆகியோர் சுமந்திரன் அணியினர் என்பது அனைவரும் அறிந்த சமாச்சாரம். இவர்களில் ஒருவருக்கு செயலாளர் பதவி வழங்கினால் மட்டுமே, தலைவர் தெரிவில் பிரிந்திருப்பதாகக் காணப்படும் இரண்டு அணிகளும் ஒன்றுசேர முடியு மென்று சுமந்திரன் இங்கு கூறியது அவரது ரகசிய திட்டம் என்ன என்பதை அப்பட்டமாக வெளிச்சம் போட்டுக் காட்டியது.

கனடாவில் வாழ்ந்து வந்த குகதாசன் திருகோணமலைக்குச் செல்ல புறப்பட்டபோது தமக்கு எம்.பி. பதவி நிச்சயம் என்றும், தேர்தலில் தோல்வியடைந்தால் தேசிய பட்டியல் எம்.பி. பதவி தமக்கே என்றும் பலரிடம் கூறியுள்ளார். அவரின் எம்.பி. கனவை கானல் நீராக்கி நியமன எம்.பி. பதவியை கலையரசனுக்குப் பெற்றுக் கொடுத்தவர் சுமந்திரனே.

திருமலை எம்.பி. பதவி கிடைக்காததில் ஏமாற்றம் கண்ட குகதாசன் தமது ஆதரவாளர்கள் சிலரை தமிழரசு கூட்டத்துக்குக் கூட்டிச் சென்று மூத்த தலைவர் சம்பந்தனை அப்புறப்படுத்தும் செயல்களுக்கு பிள்ளையார் சுழி போட்டார். சம்பந்தன் முதுமை காரணமாக நாடாளுமன்ற அமர்வுகளுக்குச் செல்லாதபடியால் அப்பதவியை இன்னொருவருக்கு வழங்க வேண்டுமென்ற பாணியில் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் சுமந்திரன் சுட்டியிருந்தார்.

இதனை வழிமொழியும் பாதையில் இன்னொரு தொலைக்காட்சியில் குகதாசன் வழங்கிய செவ்வியில், ஐயாவுக்கு (சம்பந்தன்) காது கேட்பது குறைவு, அவர் பேசுவதையும் புரிய முடியவில்லை என்று கூறி சம்பந்தனுக்கு எதிராக ஓர் அலையை உருவாக்க எத்தனித்தார். இந்தப் பின்னணிகளில் சுமந்திரன் - குகதாசன் கூட்டு சம்பந்தரை அவமானப்படுத்தி அகற்ற எடுத்த முயற்சி. இது கைகூடாத நிலையில் குகதாசனை முதன்மைப்படுத்தி கட்சியின் செயலாளராக்கி, தமது விருப்பங்களை அவர் மூலம் செயற்படுத்தி கட்சியை தம்வசப்படுத்தவே சுமந்திரன் முயற்சிகளை மேற்கொண்டார்.

இப்போது கட்சித் தலைவர் தெரிவு, செயலாளர் தெரிவு உட்பட எல்லாமே நீதிமன்றம் முன்னால் சென்றுள்ளன. இந்த மாதம் 19ம் திகதிய கூட்டத்துக்கு இரண்டு நீதிமன்றங்கள் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்துள்ளன. கடந்த வார பத்தியில் இவ்விடயங்களின் முக்கியத்துவம் கருதி எழுதப்பட்ட பின்வரும் பந்தியை இங்கு மீள்பதிவு செய்ய வேண்டியுள்ளது:

"முதற்கோணல் முற்றுங்கோணல் என்ற முதுமொழியை நிரூபிப்பதுபோல அடுத்த கட்ட நடவடிக்கைகளும் செயலாளர் தெரிவும் கோணலாகிப் போயுள்ளது. கட்சியின் புதிய தலைவராக இன்னமும் பதவி ஏற்காத சிறீதரனுக்கு சுமந்திரன் எழுதிய கடிதம் முக்கியமானது. தலைவர் தெரிவின்போது யாப்புக்கு முரணான பல இடம்பெற்றன என்பது தெரிந்தும், போட்டி முடிவை (தமது தோல்வியை) தாம் ஏற்றுக் கொண்டதாக சுமந்திரன் தெரிவித்திருப்பதை இங்கு முக்கியமாகப் பார்க்க வேண்டும். இந்த வாதத்தையே சிறீதரனுக்கு எதிரான ஓர் ஆயுதமாக சுமந்திரன் பின்னொரு வேளையில் பாவிக்க மாட்டார் என்று கூற முடியாது".

அச்சொட்டாக அதுவேதான் இன்று நடைபெறுகிறது. தலைவர் தெரிவை மட்டுமன்றி செயலாளர் தெரிவையும் நடைபெற்ற கூட்டங்களையும், நடக்கவிருந்த கூட்டத்தையும் கேள்விக்குட்படுத்தி சட்ட நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனது எழுபத்தைந்தாவது அகவையில் தமிழரசுக் கட்சி சத்திய சோதனைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

உட்கட்சி ஜனநாயகத்தைச் சிதைக்கும் வகையில் இடம்பெறும் சூழ்ச்சிகளை முறியடித்து உடனடியாக கட்சியின் மகாநாட்டை நடத்துமாறு புதிய தலைவராகத் தெரிவான சிறீதரனுக்கு மூத்த தலைவர் சம்பந்தன் அறிவுறுத்தியுள்ளார்.

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், மீண்டும் தர்மம் வெல்லும் என்று புதிய தலைவர் சிறீதரன் தமது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

கட்சிக்காக நீதிமன்றத்தில் வாதாட கட்சி கேட்டால் தாம் தயார் என்று சுமந்திரன் தெரிவித்துள்ளார். "வாதியும் நானே, எதிரியும் நானே, எதிரிக்காக வாதிடப் போவதும் நானே என்ற மாதிரி அர்த்தநாரீஸ்வரர் ஆகலாம் எண்டுறியளோ தம்பி" என்று ஈழநாடுவின் அப்புக்குட்டி அண்ணை கேட்டுள்ளார்.

ஒட்டகம் முதலில் தனது தலையைத்தான் கூடாரத்துள் புகுத்தும். பின்னர் படிப்படியாக முழு உடம்பையும் உள்ளே தள்ளும். இதனால் ஏற்கனவே கூடாரத்துள் இருந்தவர்கள் வெளியேறுவர் அல்லது வெளியேற்றப்படுவர். இது நடைபெறவில்லையென்றால் ஒட்டகம் கூடாரத்தை நிர்மூலமாக்கி தனது முன்னைய இடத்துக்கு திரும்பிவிடும் என்று எப்போதோ படித்தது ஏன்தான் இப்போது நினைவுக்கு வருகிறதோ தெரியவில்லை.

ஈழநாடு

# அயோத்தி இராமர் கோவில் சொல்லும் செய்தி என்ன?

நியூசிலாந்து சிற்சபேசன்



இந்தியத் துணைக்கண்டத்திலும், பூமிப்பந்தெங்கிலுமுள்ள இந்திய வம்சாவளியினரிடையேயும் "இராமர்" என்பது மந்திரச்சொல்லாகும். அதனுடைய உள்ளார்ந்த கருத்தியல் பிரதேசரீதியாக மாறுபடக்கூடியதாகும். பெருவெட்டில் சொல்வதெனில், விந்திய மலைக்குத் தெற்கே காப்பிய நாயகனாகக் கொண்டாடப்படுகின்ற "இராமர்", விந்தியமலைக்கு வடக்கே வானுயர்ந்த தெய்வமாகப் போற்றப்படுகின்றான்.

ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். அதுபோல, "இராமர்" என்னும் சொல்லின் "மந்திரசக்தியைப்" புரிந்துகொள்ள ஒன்றைச் சொல்லலாம்.

அஃது சாமானியர்களின் உள்விறாந்தைகளில் தொலைக்காட்சிப் பெட்டி புகுந்த காலகட்டமாகும். அப்போது, இராமாயணம் தொலைக்காட்சித் தொடராக, இந்தியாவிலே, ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தது. அஃது ஏற்படுத்திய தாக்கம் வார்த்தைகளில் வர்ணித்து விடக்கூடியதல்ல. தொலைக்காட்சிப் பெட்டி தென்பட்ட இடங்களிளெல்லாம், இராமாயணம் பார்க்க மக்கள் கூடினார்கள். "இராமர்" தோன்றுகின்ற காட்சிகளிளெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டார்கள். சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கினார்கள்.

அத்தகைய போற்றுதலுக்குரிய இராமபிரானின் பிறப்பிடமே அயோத்தியாகும். அஃது, உத்திரப்பிரதேச மாநிலத்தில், சாராயு நதிக்கரையில் அமைந்திருக்கின்றது. இராமஜென்மபூமி எனவும் அழைக்கப்படுகின்றது.

அங்கே அமைக்கப்பட்டுள்ள இராமர் கோவிலே, சனவரி 22ல், பூர்வாங்கமாகத் திறந்து வைக்கப்படுகின்றது. கோவில் வளாகம் எழுபது ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாகும். அதிலே சுமார் ஏழு ஏக்கர் விஸ்தாரணத்தையும், மூன்று தளங்களையும் கொண்ட கோவில் கட்டடத்தின் மையப்பகுதியில், சுமார் நான்கு அடி உயரமான இராமபிரானின் உருவச்சிலை நிறுவப்படுகின்றது.

அயோத்தியில் பெருமெடுப்பில் நிர்மாணிக்கப்பட்டு, அரசின் அனுசரணையோடு, தேசமே திரண்டெழுந்து கொண்டாடுகின்ற இராமர் கோவில் மீள்நிர்மாணம் கடந்துவந்த பாதை கரடுமுரடானதாகும். இராமஜென்ம பூமி சர்சை இன்று நேற்று ஏற்பட்டதல்ல.

இஸ்லாமியப் படையெடுப்புக்களால், 16ம் நூற்றாண்டில், இராமர் கோவில் தகர்க்கப்பட்டு மசூதி நிறுவப்பட்டபோது ஆரம்பமாகியது.

1800களின் நடுப்பகுதிகளிலேயே இராமஜென்மபூமியை மீளப்பெறும் முனைப்பு வெளிப்படையாகியது. அதனால், இந்து - இஸ்லாமிய கலகங்கள் ஆரம்பித்தன.

சர்சைக்குரிய பிரதேசத்தை, இந்து மற்றும் இஸ்லாமிய இடங்களாக தனித்தனியாக அடையாளப்படுத்தி, 1857 ஆண்டு அளவிலேயே, அன்றைய பிரித்தானிய காலனித்துவ அரசு எல்லை வகுத்தது.

அந்த ஏற்பாடு, அடுத்த 90 ஆண்டுகளுக்கு சர்சைகளுடனே தொடர்ந்தது எனலாம்.

இந்திய சுதந்திரம் பெற்ற பின்னர் சர்சைகள் உக்கிரமடைந்தன. அந்த இடத்திற்கான உரிமையைக் கோரிய தரப்புக்கள் நீதிமன்றத்தை நாடின.

நீதிமன்ற விசாரணை நிலுவையில் உள்ள காரணத்தின் அடிப்படையில், யாருமே உள்நுழைய முடியாத தடையை 1949ல் அரசு விதித்தது.

அதன்பின்னர், நீதிமன்றத்தில் விசாரணைகள் தொடர்ந்தன. வருடங்கள் உருண்டோடின.

இராமர் கோவில் விவகாரத்தில், சங்கப்பரிவார் எனப் பொதுவில் சுட்டக்கூடிய, இந்துஅமைப்புக்கள் ஆரம்பம் முதலே அதீதமான பற்றுதலைக் கொண்டிருந்தன. இந்திய விடுதலையை வேண்டிய காலகட்டத்திலேயே, இந்து அடையாளங்களை சங்கப்பரிவார் முன்னிறுத்தி





யது. அவற்றினுடைய வழித்தோன்றலே, தற்போதைய, பாரதிய ஜனதாக் கட்சியாகும்.

1984ல் இராமர் கோவில் அமைக்கப்பட வேண்டும் என்னும் எழுச்சி வீறு கொள்ள ஆரம்பித்தது.

1986ல் சர்சைக்குரிய இராமஜென்ம பூமி பிரதேசத்தில் இந்துக்கள் வழிபாடு செய்வதற்கான அனுமதியை மாவட்ட நீதிமன்றம் வழங்கியது.

1989ல் விஸ்வ ஹிந்து பரிஷத்தினால் இராமர் கோவிலுக்கான அத்திவாரக்கல் நாட்டப்பட்டது.

அதே காலப்பகுதியில், பாரதிய ஜனதாக் கட்சி சுண்டியிழுக்கும் வளர்ச்சியைத் தேசிய அளவிலே பெறத் தொடங்கியது. இராமர் கோவில் நிர்மாணத்தை முன்னிறுத்தி, அன்றைய தலைவரான, அத்வானி முன்னெடுத்த இரத யாத்திரை பரவலான கவனிப்பைப் பெற்றது. அதனைத் தொடர்ந்த ஆண்டுகளிலே, "ஹிந்தி பெல்ட்" என்று சொல்லப்படுகின்ற மாநிலங்களான மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், ஹிமாச்சல் பிரதேசம், உத்தரப்பிரதேசம் போன்ற வற்றிலே பாரதிய ஜனதாக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது.

சங்கப்பரிவார் முன்னெடுத்த இராமர் கோவில் பிரசாரத்துக்கு, உத்தரப்பிரதேசத்தில் அமைந்த கல்யாண் சிங் தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சி அரசு தோன்றாத்துணையாகியது.

1992 டிசம்பர் 6ம் திகதி சர்சைக்குரிய பிரதேசத்தில் "கரசேவக்" என்று சொல்லப்படுகின்ற இந்துதொண்டர்கள் லட்சக்கணக்கிலே திரண்டபோது உணர்வுகள் கொந்தளித்தன. கல்யாண் சிங் தலைமையிலான உத்தரப்பிரதேச அரசும், பிவி நரசிம்மராவ் தலைமையிலான இந்திய அரசும் மோனத்தவத்திலிருந்த வேளையில், சர்சைக்குரிய, பாபர் மசூதி தகர்க்கப்பட்டது.

அதன்பின்னர் வழமையான விசாரணைகள் நடைபெற்றன. வழக்குகள் தொடரப்பட்டன. 2010 செப்டெம்பரில் சர்சைக்குரிய பிரதேசத்தை, சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே, சமமாகப் பங்கிட வேண்டுமென அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அந்தத்தீர்ப்பை எதிர்த்து, சம்பந்தப்பட்ட தரப்புக்கள், டெல்லி உச்சநீதிமன்றத்தை நாடின. சுமார் ஏழுவருடங்கள் வழக்கு விசாரணைகள் நடைபெற்றன. உச்சநீதிமன்றத்தின் ஐந்து நீதிபதிகள் அடங்கிய "கன்ஸிடியூஷனல் பென்ச்" அமைக்கப்பட்டது. விசாரணைகளின் முடிவில், சர்சைக்குரிய இடம் இராமர் கோவிலுக்கு உரியது என்னும் தீர்ப்பை, 2019 நவம்பரில், உச்சநீதிமன்றம் வழங்கியது. அதன்மூலமாக, சுமார் ஐநூறு ஆண்டுகளாகத் தொடர்ந்த சர்சை முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.

அதன்பின்னர், 2020 மார்ச் மாதத்தில் அத்திவாரம் நாட்டப்பட்டது. 2024 சனவரி 22ல் இராமர் கோவில் திறந்து வைக்கப்படுகின்றது.

இந்தியப் பாரம்பரியத்தின் மையக் கோட்பாடு "அறம்" எனச் சொல்லலாம். அறத்திற்கான வரைவிலக்கணமாகவே இராமபிரானின் வாழ்வு சொல்லப்படுவதுண்டு. அத்தகைய இராமபிரானின் வாழ்வு மட்டுமல்ல, பிறப்பிடமும் அறத்திற்கு இலக்கணமாகியிருக்கின்றது.

அந்நிய ஆக்கிரமிப்பால் அழிக்கப்பட்ட அயோத்தி இராமர் கோவில் கரடுமுரடான பாதைகளைக் கடந்து வானுயர்ந்திருக்கின்றது. அஃது, அறம் வெல்லும் என்பதையே பாறைசாற்றுகின்றது.



# தமிழர்களிடம் தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பும் தேசிய மக்கள் சக்தியிடம் தமிழரின் எதிர்பார்ப்பும்!

**- கந்தையா அருந்தவபாலன்**

ஜேவி.பி எனப்படும் மக்கள் விடுதலை முன்னணியின் இன்னொரு வடிவமான தேசிய மக்கள் சக்தியின் உயர்மட்ட உறுப்பினர்கள் சிலர் தற்போது வடக்கிலுள்ள அரசியல், சமூகத் தலைவர்களைக் கிரமமாகச் சந்தித்து அரசியல் நிலைமைகள் தொடர்பான கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருவதுடன் தமது கட்சிக்கான ஆதரவையும் கோரி வருவதை அவதானிக்க முடிகிறது. அக்கட்சியின் உயர்மட்டத் தலைவர்களில் ஒருவரான முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயாக தலைமையில் அக்கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சந்திரசேகரன் உட்பட்ட குழுவினர் இக்கலந்துரையாடல்களில் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ந்து மாறி மாறி ஆட்சி செய்துவந்த பாரம்பரியக் கட்சிகள் நாட்டையும் சீரழித்து தம்மையும் சீரழித்துக் கொண்டிருக்கும் ஓர் அரசியல் சூழ்நிலையில் தமது கட்சிக்கு அதிகரித்து வரும் மக்கள் ஆதரவை உச்சமாக்கி நாட்டின் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக அண்மைக்காலத்தில் அக்கட்சி மேற்கொண்டு வரும் பல்வேறு வழமைக்கு மாறான எத்தனங்களின் ஒரு பகுதியாகவே தமிழ்த் தலைவர்களுடனான இச்சந்திப்புக்களும் அமைகின்றன எனலாம். இவற்றினூடாக அக்கட்சி தொடர்பாக தமிழ் மக்கள் கொண்டிருக்கும் நிலைப்பாட்டைத் அதன் தலைவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும் அதேவேளை அக்கட்சியின் அண்மைக்கால நிலைப்பாடுகள் தொடர்பாக தமிழ்மக்களும் புரிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும் என நம்பலாம். இதன்மூலம் இவ்விரு தரப்புகளின் எதிர்பார்ப்புகளுக்கும் இடையில் இணக்கப்பாடுகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் உருவாக்கப்படுமா இல்லையா என்பது தேசிய மக்கள் சக்தியின் எதிர்கால நடவடிக்கைகளிலேயே பெருமளவு தங்கியுள்ளது.

எவ்வாறெனினும் இனப்பிரச்சினை தொடர்பான அக்கட்சியின் தற்போதைய நிலைப்பாட்டுக்கும் தமிழ்மக்களின் எதிர்பார்ப்புகளுக்குமிடையே பாரிய இடைவெளி ஒன்று காணப்படுகிறது. உண்மையில் இவ்விடைவெளிக்கான காரணம் இனப்பிரச்சினை தொடர்பாக இவ்விரு தரப்புகளும் கொண்டிருக்கும் நோக்கு நிலை வேறுபட்டிருப்பதாகும். இலங்கையில் தொடர்ந்து நிலவி வரும் பொருளாதார, சமூகப் பிரச்சினைகளே இனப்பிரச்சினைக்கான தோற்றுவாய் என்பதும், பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் தீர்க்கப்படும்போது இனப்பிரச்சினைககான தீர்வு இயல்பாகவே ஏற்படும் என்பதும் தேசிய மக்கள் சக்தித் தலைவர்களின் நிலைப்பாடு. அதனால் இனப்பிரச்சினைக்குத் தனித்து முக்கியமளிக்கத் தேவையில்லை, பொருளாதார, சமூகப்பிரச்சினைகளுக்கான தீர்வுக்கே முக்கியம் அளிக்கப்பட வேண்டும் என அவர்கள் கருதுகின்றனர். மாறாக இலங்கையின் இன்றைய சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் யாவற்றினதும் தோற்றத்துக்கான காரணம் இனப்பிரச்சினை என்பது தமிழ்மக்களின் நிலைப்பாடு. இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணப்படும்போது நாட்டின் பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் இயல்பாகவே மறைந்துவிடும் எனத் தமிழ் மக்கள் கருதுவதால் எந்தக் கட்சியென்றாலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கே கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பது தமிழர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. இத்தகைய எதிர்த்துருவ நிலைப்பாடுகள் காணப்படும் ஒரு நிலையில் தமிழ்மக்களின் ஆதரவை தேசிய மக்கள் சக்தி பெறுவதற்கான வாய்ப்புகள் இலகுவாக இருக்குமா?

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் தொடர்பான ஜே.வி.பியின் கடந்தகால நிலைப்பாடும் செயற்பாடுகளும் அம்மக்களுக்கு




அக்கட்சி மீது நல்லெண்ணத்தை உருவாக்கும் வகையில் அமையவில்லை. பதிலாக அக்கட்சிமீது எதிர்மறையான எண்ணத்தையும் வெறுப்பையுமே தோற்று வித்துள்ளன. தொடக்க காலத்திலிருந்து அக்கட்சி எவ்வாறு இந்தியாவுக்கு எதிரான நிலைப்பாட்டில் இருந்து வந்ததோ அதேபோன்று தமிழ்மக்களுக்கு எதிரான ஒரு மனநிலையையும் அக்கட்சித் தலைவர்கள் கொண்டிருந்தார்கள் என்பதும் உண்மையாகும். தமிழ் மக்களுக்கு எதிரான அவர்களின் இந்த மனநிலையை முக்கியமான பல சந்தர்ப்பங்களில் அவர்கள் வெளிக்காட்டி இருக்கிறார்கள். இலங்கையின் இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வாக அமையாத இந்திய இலங்கை ஒப்பந்தத்தைக் கூட மூர்க்கத்தனமாக எதிர்த்ததுடன் அதனை வைத்து தென்னிலங்கையில் பாரிய சொத்து மற்றும் உயிரழிவுகளை ஏற்படுத்தியிருந்தார்கள். பின்னர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் அவர்கள் பங்கெடுத்திருந்த காலப்பகுதியில் தமிழ்மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் மஹிந்தவைவிட மிகத் தீவிரமாக இவர்களே இறங்கியிருந்தனர். விடுதலைப் புலிகளை அழித்தல் என்ற பெயரில் தமிழ்மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவையும் ஊக்கத்தையும் வழங்கியமை. இந்திய இலங்கை ஒப்பந்தத்தைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டு கிட்டத்தட்ட 30 ஆண்டுகள் ஒரே மாகாணமாக இருந்து வந்த வடக்கு கிழக்கை உச்ச நீதிமன்றில் வழக்குத் தொடுத்து அதனை இரண்டாக்கப் பிரித்தமை போன்றன இவற்றுள் முக்கியமானவை. அக்காலப்பகுதியில் ஜே.வி.பியின் முக்கிய தலைவராகவும் அமைச்சராகவும் இருந்த விமல் வீரவங்ச முற்று முழுதாக தமிழர் விரோதப் போக்கையே கடைப்பிடிந்து வந்தார். அவர் நாவற்குழியில் இராணுவத்தின் ஆதரவுடன் சிங்கள மக்களைக் குடியேற்றியது மட்டுமன்றி காலதாமதமின்றி அக்காணிகளுக்கான அரச உறுதிப்பத்திரங்களையும் வழங்கிவைத்தமை ஓர் ஆக்கிரமிப்பு நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது. இவ்வகையில் ஆட்சியதிகாரத்தில் ஒரு பங்காளராக மட்டுமே இருந்த குறுகிய காலப்பகுதியிலேயே திட்டமிட்ட வகையில் தமிழ்மக்களுக்கெதிரான பல செயற்பாடுகளை அக்கட்சியினர் அரங்கேற்றியிருந்தனர். இதனால் தமிழ் மக்களின் நோக்கு நிலையில் ஜே.வி.பியினர் மற்றைய சிங்களத் தலைவர்களைவிட மோசமான சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகளாகவே இன்றுவரை கருதப்படுகின்றனர்.

எனினும் அண்மைக்காலத்தில் அக்கட்சியினர் தம் சிந்தனையிலும் செயற்பாடுகளிலும் முன்னைய இறுக்க நிலைக்குப் பதிலாக சற்று நெகிழ்வான போக்கை வெளிப்படுத்தி வருவதை அவதானிக்க முடிகிறது. தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசநாயகவின் இந்தியப் பயணம், மேற்குலகத் தூதுவர்களுடனான சந்திப்புகள், தமிழ்த் தலைவர்களுடனான சந்திப்புகள் மற்றும் அவை தொடர்பான அவர்களது வியாக்கியானங்கள் இந்த நெகிழ்வுப் போக்கை காட்டி நிற்கின்றன. குறிப்பாக அனுரகுமாரவின் இந்தியப் பயணம் அவர்கள் சமகால இலங்கை, உலக மற்றும் உபகண்ட யதார்த்த அரசியலைப் புரிந்து கொண்டு அதற்கேற்ப தம்மைத் தகவமைக்கத் தொடங்கி விட்டார்கள் என்று எண்ண வைக்கிறது. இந்தப்பயணம்

> **இன்றுள்ளதை விட மிகமோசமான பொருளாதார, சமூகப்பிரச்சிகளுக்குள் வாழ்ந்து மீண்டவர்கள் தமிழர்கள். அவர்கள் இலங்கையராகச் சிந்திப்பதற்கு மேலாகத் தமிழராகச் சிந்திக்கிறார்கள். அவர்கள் இலங்கையராகச் சிந்தித்து நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்பை முழுமையாக மாற்ற எவருக்கும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவே உள்ளனர். ஆனால் அதற்கு முன் தமக்கான அரசியல் தீர்வை எதிர்பார்த்து நிற்கிறார்கள்.**

தொடர்பாக அனுரகுமார கருத்துத் தெரிவிக்கையில் மாறிவரும் உலக ஒழுங்குக்கு ஏற்ப தாமும் மாறவேண்டிய அவசியம் இருப்பதாகவும், இலங்கை மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் போது அதனால் இந்திய நலனுக்கு ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகளை கவனத்தில் கொள்ளவேண்டும் என்றும் கூறியுள்ளமை கவனத்திற்குரியவையாக உள்ளன. சமகாலத்தில் இதேமாதிரியான கருத்துக்களை அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ஹரிணி அமரசூரியவும் பாராளுமன்றத்தில் முன்வைத்திருந்தார் என்பதுவும் குறிப்பிடத்தக்கது. மேலும் அக்கட்சியின் மூத்த உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பிமல் இரத்நாயக்கவுடனான பிபிசி யின் செவ்வியொன்றில் இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று கூறுவதையும் மறுத்திருந்தமையையும் கவனிக்க வேண்டும். அண்மைக்காலத்தில் அக்கட்சியின் இவ்வாறான வெளிப்பாடுகள் உண்மையில் அதன் கொள்கை மாற்றங்களா அல்லது ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான உத்திகளா என்பதைத் தீர்மானிப்பதற்கு நாம் இன்னுஞ் சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டும்.

இதேவேளை இலங்கையின் மிக முக்கிய பிரச்சினையாக நீடித்துவரும் இனப்பிரச்சினை தொடர்பாக தேசிய மக்கள் சக்தி என்ன தீர்வைக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு அவர்களிடமிருந்து எந்தவகையான தெளிவான வெளிப்படுத்தல்களும் இதுவரை வந்ததில்லை. பிரச்சினை ஒன்று இருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் தமிழ்மக்கள் கருதுவதுபோல் நாட்டின் தனித்துவமான, முக்கியமான ஒரு பிரச்சினையாக அவர்கள் கருதுவது போல் தெரியவில்லை. உண்மையில் இடதுசாரிகளாக அல்லது மார்க்ஸிய சிந்தனைவாதிகளாகத் தம்மைக் காட்டிக் கொள்ளும் அவர்கள் இனப்பிரச்சினைக்கு ஏனைய கட்சிகளைவிட முன்னேற்றமான ஒரு தீர்வை முன்வைத்திருக்க வேண்டும். ஆனால் அவர்கள் பார்வையில் நாட்டில் நிலவும் ஏனைய சமூகப் பொருளாதாரப் பிரச்சினை போல அதுவும் ஒரு பிரச்சினை அந்தளவே. அண்மையில் இந்தியாவின் 'த ஹிந்து' நாளிதழ், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமாரவை செவ்வி கண்ட போது தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பாக அவரின் நிலைப்பாடு என்னவென்ற வினாவுக்கு " தமிழர்க்கு மட்டுமல்ல முஸ்லிம் மக்களுக்கும் பிரச்சினைகள் உண்டென்றும், அவை அவர்களது மொழி, பண்பாடு மற்றும் ஆட்சியில் பங்கு பெறுதல் என்பவை தொடர்பானவை எனவும் அவற்றைத் தாங்கள் தீர்த்து வைப்போம்" என்று பொதுப்படையாகக் கூறியுள்ளார். அவரது இந்தப் பதிலில் தமிழர் பிரச்சினை ஏனைய பிரச்சினைகளைவிட முக்கியமான அல்லது தனித்துவமான ஒரு பிரச்சினையாக, ஏனையவற்றை விட அதற்கு முக்கியமுள்ளதாக அக்கட்சி கருதுவதாகப் புலப்படவில்லை. குறைந்தது 13 ஆவது திருத்தம் தொடர்பாக அவர்களது தற்போதைய நிலைப்பாடு என்ன என்பது பற்றியும் தெளிவான வெளிப்படுத்தல்கள் இதுவரை இல்லை. வடக்கில் தமிழ்த் தலைவர்களுடனான தற்போதைய தனிப்பட்ட கலந்துரையாடல்களில்கூட இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்களின் பொறிமுறை என்ன என்பதற்கு தனித்துவமான பதில் இல்லை. அப்பிரச்சினையைத் தனித்து நோக்காது ஏனைய பொருளாதார, சமூகப் பிரச்சினைகளைப் போன்று நோக்குகின்ற நிலைப்பாட்டையே அவதானிக்க முடிகிறது.

நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகக் கட்டமைப்புகள் முழுமையாக மாற்றப்படவேண்டும், அதற்கு பாரிய 'மக்கள் சக்தி இயக்கம்' ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதே தேசிய மக்கள் சக்தியின் தற்போதைய நிலைப்பாடாகத் தென்படுகிறது. நாட்டை மீட்டெடுப்பதற்கான அந்த மக்கள் சக்தி இயக்கத்தில் தமிழ் மக்களும் இணைந்து கொள்ள வேண்டும் என்பதே அவர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. பாரம்பரிய அரசியல் கட்சிகள்மீதான மக்களது நம்பிக்கை சிதைந்துள்ள இன்றைய நிலையில் இந்த அணுகுமுறை மூலம் வரும் தேர்தலில் ஆட்சியதிகாரத்தைப் பெறுவதற்கான மக்கள் ஆதரவைத் திரட்ட முடியும் என அக்கட்சி நம்பிக்கை கொண்டுள்ளது போல் தெரிகிறது.

தமிழ் மக்களிடம் தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்பு இவ்வாறு அமைந்திருக்கும் அதேவேளை அக்கட்சியிடம் தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு வேறு வகையில் அமைந்துள்ளதை அவதானிக்க முடிகிறது. தமிழ் மக்கள் இரண்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

# உடல் மொழி கூறும் உண்மைகள்!

முனைவர் என்.பத்ரி

மனிதன் ஒரு சமூக விலங்கு என அழைக்கப்படுகிறான். அவனுக்கு மற்றவர்களுடன் அன்றாடம் தொடர்பில் இருக்க வேண்டிய தேவை உள்ளது. ஆதிகாலத்தில் சைகைகளின் வழியே தகவல்களை மனிதன் பரிமாறிக் கொண்டான். மனித நாகரிகம் வளர்ந்த நிலையில் உடல் மொழியுடன் தானறிந்த மொழியையும் தகவல் தொடர்புக்கு அவன் பயன படுத்தத் தொடங்கினான். எனவேதான், உடல்மொழி நமது அன்றாட வாழ்வில் தவிர்க்க முடியாத ஓர் அங்கமாகிவிட்டது.

குழந்தைகள் பேசத் தொடங்கும் முன்னரே உடல் மொழியைப் புரிந்துகொள்கின்றன. பிறந்து சில மாதமே ஆன குழந்தை நாம் கொஞ்சினால் சிரிப்பது, கடிந்து கொண்டால் அழுவது எல்லாம் உடல் மொழியின் தூண்டல்-துலங்கல் உணர்வுகளே. கொஞ்சம் வளர்ந்த குழந்தை தன் தந்தையிடம் ஏதாவது வாங்கித்தரச் சொல்லி கேட்கவேண்டும் என்றால் அப்பாவின் முகத்தைப் படிக்கிறது. நல்ல மன நிலையில் இருப்பதை உறுதி செய்துகொண்ட பின்னர்தான், தன் விழைவுகளைக் கேட்கிறது.

உடல் மொழியில் சொற்களுடன் உடல் அசைவுகள் தகவல்களைப் பரிமாறிக்கொள்ள பயன்படுகின்றன. இத்தகைய நடத்தையில் முக பாவங்கள், உடல் தோரணை, சைகைகள், கண் இயக்கம், கால், கை அசைவுகள் ஆகியவை அடங்கும். சில நேரங்களில் மொழிகளைப் பயன்படுத்தாமல் உடல் மொழியை மட்டுமே பயன்படுத்தி நாம் வெற்றிகரமாக தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடியும். தேர்வறையில் குழப்பத்தில் இருக்கும் மாணவர்களுக்கு அதிகம் உதவிக்கு வருவது அவர்களின் நண்பர்களின் உடல்மொழியே ஆகும்.

எதுவும் பேசாமல் இருக்கும்போது கூட நம் மனதில் என்ன ஓடுகிறது என்பதை நம் முகபாவங்கள் காட்டிக் கொடுத்துவிடும். அதாவது, நம்முடைய உணர்ச்சிகளை, மகிழ்ச்சி, சோகம், கோபம், வருத்தம் போன்றவற்றின் வழியே நம் முகம் காட்டிக் கொடுத்துவிடும்.




கண்களைப் பார்த்து பேசும்போது பல விஷயங்களை நாம் மேலும் நன்றாகப் புரிந்து கொள்ள முடியும். நம் கண்களைப் பார்த்து பேசும் மனிதர்கள் உண்மையை மட்டும்தான் பேச முடியும். நம் கண்களை பார்த்துப் பேசும்போது, நம்முடன் விருப்பத்துடன் பேசுகிறாரா, கடமைக்குப் பேசுகிறாரா என்பதையும் தெரிந்து கொள்ளலாம். குற்றம் செய்த ஒருவரின் கண்ணே அவரைக் காட்டிக் கொடுத்து விடும்.

ஒரு நபர் எவ்வாறு அமர்ந்திருக்கிறார், கை, கால்களை நேராக வைத்திருக்கிறாரா, கால் மேல் கால் போட்டு அமர்ந்துள்ளாரா என்ற அடிப்படையில் அவருடைய உடல் மொழியை நாம் நன்கு புரிந்து கொள்ள முடியும். நேராக அமர்ந்திருந்தால், அவர் அதிக தன்னம்பிக்கை கொண்டவர். லேசாக கூன் விழுந்தவாறு, சாய்ந்தவாறு அமர்ந்திருந்தால் அவரிடம் தன்னம்பிக்கை குறைவாக இருக்கிறது. அவர் இருக்கும் இடத்தில் அவர் தனக்கு செல்வாக்கு இருப்பதாக உணரவில்லை என்றும் பொருள்.

கை, கால்களை கோணலாக வைத்துக் கொண்டாலோ, அல்லது குறுக்கு வாட்டாக வைத்துக் கொண்டாலோ நாம் சொல்வதை கேட்பதில் அவருக்கு விருப்பமில்லை என்று பொருள். அந்த நபர் வெளிப்படையாக எதுவும் பேச மாட்டார் என்றும் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒருவர் வீட்டுக்குச் செல்கையில் நமது வருகை அவர்களுக்குப் பிடிக்கவில்லையென்றால், அவர்கள் வெளிப்படையாக சொல்லத் தேவையில்லை. அவர்களின் உடல்மொழியே அவர்களின் மனத்தின் நிலைமையை நமக்கு அறிவித்து விடும்.

கண்காணிப்பு கேமராவின் முன்பு, மற்றவர்களுடைய கண்காணிப்பில் உள்ளபோது மனிதர்களின் நடத்தை ஒழுங்காக இருக்கும். மனிதர்கள் தங்களுக்கு விருப்பமான செயல்களை நியாயத்துக்குப் புறம்பாக இருந்தால் கூட செய்வது இயல்பு. எப்படியிருப்பினும் பெரும்பாலானோர் அவர்களுக்கு வேண்டியவர்கள் முன்னிலையில் ஒருமாதிரியும், அவர்கள் இல்லாதபோது வேறு மாதிரியும் நடந்து கொள்வதை பார்க்கும்போது நம்மால் சிரிக்காமல் இருக்க முடியாது.

ஒருவர் தொடர்ந்து பொய் சொல்வது என்பது ஒரு கலை. அவர்கள் தம் நினைவாற்றலை அதிகம் வளர்த்துக் கொள்ள வேண்டும். மூளைக்கு நிறைய வேலை கொடுக்க வேண்டும். ஒரே நேரத்தில் சொன்ன பொய்களைக் காப்பாற்றுவதற்கான வார்த்தைகளையும் உருவாக்க வேண்டும். பொய்யை உண்மைபோல் பேச வேண்டும். அதே சமயத்தில் உண்மையை மறைக்கவும் வேண்டும். அவர்கள் தாம் எப்போது அகப்பட்டுக் கொள்ளப் போகிறோமோ என்ற பதற்றத்திலேயே இருப்பார்கள். நடித்துக் கொண்டே வாழ்க்கையை நகர்த்திக்கொண்டு வாழ்வதால், இயல்பான வாழ்க்கையை வாழமாட்டார்கள். ஒரு நாள் அவர்களின் உடல் மொழியே அவர்களின் உண்மை உருவத்தை வெளிக் கொணர்ந்து விடும். பொது வெளியில் அவமானத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

ஒருவருடைய நடத்தையைப் பொருத்தே அவருடைய உடல் மொழிகள் இருக்கும். பொய் சொல்லுதல், ஏமாற்றுதல் அல்லது ஏதாவது கொடுமைகள் செய்து பழகிவிட்டவருக்கு கெட்ட செயலும் நல்லதாகவே தெரியும். அவர்களுக்கு வாழ்க்கை குறித்த கண்ணோட்டம் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும். அதற்கேற்ப உடல் மொழிகளும் தகவமைப்பு கொண்டதாக மாறிவிடும். அவ்வாறான மனிதர்களிடம் நாம்தான் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

---



**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

# வியுக்தியார் பதில்கள்

**எஸ். செந்துாரன்,**
**அராலி வடக்கு, அராலி.**

**கேள்வி:** இலங்கை தமிழ் அரசு கட்சியின் தேசிய மாநாட்டை எதிர்வரும் 19ஆம் திகதி - திங்கட்கிழமை நடத்துவதற்கு யாழ்ப்பாணம், திருகோணமலை மாவட்ட நீதிமன்றங்கள் இடைக்கால தடைவிதித்துள்ளனவே. கட்சி விடயங்களை கட்சிக்குள் பேசித் தீர்க்காமல் இப்படி நீதிமன்றங்களுக்கு எடுத்துச் செல்வது சரியானது என்கின்றீர்களா?

**வியுக்தியார்:** கட்சி மீது, முக்கியமாக மக்கள் மீது அக்கறையுள்ள எவரும் இதனைச் செய்யமாட்டார்கள். ஒரு வழக்கு - கட்சி மாநாடு நடாத்துவதெனில் 21 நாட்கள் முன்அறிவித்தல் கொடுத்து நடாத்தப்படவேண்டும் என்ற கட்சி யாப்பு மீறப்படுவதான குற்றச்சாட்டு. அது குறித்து கட்சிக்குள்ளேயே பிரச்சினையைக் கிளப்பியிருந்தாலும் அதற்கு முடிவு வந்திருக்கக்கூடியதுதான். ஆனால் மற்றைய வழக்கு - கட்சி யாப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதைவிட பொதுச்சபையில் அதிகமானவர்கள் இடம்பெற்றிருந்ததாக குற்றம்சாட்டப்பட்டிருக்கின்றது. அது கூட சரியானதாக இருந்தாலும், முதலாவது பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றது, கடந்த மாதம் இருபத்தியோராம் திகதி. கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாகவோ அல்லது முடிந்த பின்னரோ அப்படியொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தால் கூட அதனை நியாயப்படுத்தியிருக்கலாம். இப்போது அடுத்த பொதுச்சபை கூடியபொதுகூட பொறுத்திருந்துவிட்டு, அந்தப் பொதுச்சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவையும் கூட மாற்றியமைக்க முடிவுசெய்த பின்னர் வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருப்பதுதான் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. அதாவது திருகோணமலையைச் சேர்ந்த குகதாசன் பொதுச்செயலாளராக தெரிவுசெய்யப்பட்டபோது அவர் தனது பதவிக் காலத்தை ஒரு வருடம் மட்டும் வகிப்பது என்று முடிவுசெய்யப்படவில்லை. ஆனால் அப்படியொரு முடிவு எட்டப்பட்ட பிறகு வழக்கு தாக்கல் செயய்யப்பட்டிருப்பது சந்தேகத்தை ஏற்படுத்துவது நியாயமானதே. அவர் முதல் வருடம் மட்டும் பதவியில் இருந்தால், அவரது பதவிக்காலம் முடிவடைந்த பின்னரே பாராளுமன்றத் தேர்தல் வரும். அப்படி வருகின்றபோதுதான் பொதுச்செயலாளரே தேவைப்படுவார். அந்த நேரத்தில் சிறிநேசன்தானே பொதுச்செயலாளராக இருப்பார். இப்போது வழக்கின் நோக்கம் புரிந்திருக்குமே.

---

**தி. வினோத், இருபாலை,**
**கோப்பாய்.**

**கேள்வி:** இலங்கை தமிழ் அரசு கட்சியின் தேசிய மாநாடு, பொதுக் குழுக் கூட்டங்களின் முடிவுகளுக்கு திருகோணமலை, யாழ்ப்பாணம் நீதிமன்றங்கள் பிறப்பித்த இடைக்கால தடைகள் தொடர்பான வழக்குகளில் கட்சியின் தலைவர்கள் கேட்டால் முற்பட்டு வாதாடத் தயாராக இருக்கிறேன் என்று சுமந்திரன் எம்.பி. தெரிவித்திருக்கிறாரே. கட்சித் தலைவர்கள் அவரிடம கேட்பார்கள் என்று நினைக்கின்றீர்களா?

**வியுக்தியார்:** கட்சியில் இதுபோன்ற வழக்குகள் வருகின்றபோது அவர் யாரிடமாவது கேட்டா இது வரை ஆஜரானார். அதைவிட இரண்டு வழக்குகளிலுமே, அவரும் ஒரு எதிர் மனுதாராக குறிப்பிடப்பட்டுள்ளபோது அவர் தனக்காக என்றாலும் தான் ஆஜராகலாம்தானே? அவர் ஏன் இப்படி அழைப்பு விடுக்கிறார் என்பதுதான் புரியவில்லை. வழக்கு தாக்கல் செய்யப்பட்டதுமே அவராகவே இவ்வாறு முந்திக்கொண்டு அழைப்பு விடுப்பதுதான் கட்சியின் மற்றைய தலைவர்களுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தும் என்று நினைக்கின்றேன். நிச்சயம் கட்சியின் மற்றைய தலைவர்கள் தமக்கு நம்பிக்கையான சட்டத்தரணிகளைத்தான் நாடுவார்கள் என்றுதான் நான் நினைக்கின்றேன்.

---

**க. ராம்குமார்,**
**ஸ்ரேசன் றோட், வவுனியா.**

**கேள்வி:** மாகாண சபைகளுக்கு 13ஆம் திருத்தச் சட்டம் மூலம் வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரத்தை நீக்குவதற்கு 22ஆவது திருத்தச் சட்டத்தை பாராளுமன்றில் கொண்டு வந்து நிறைவேற்றவுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளாரே. பொலிஸ் அதிகாரம் இல்லாத மாகாணசபைகள்தான் இனி எமக்கு தீர்வாக வரப்போகின்றது என்று நினைக்கின்றேன். நீங்கள் அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்.?

**வியுக்தியார்:** பதின்மூன்றாவது திருத்தம் என்பது இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பயனாக உருவாக்கப்பட்டது. அதாவது இந்த திருத்தம் தொடர்பில் இன்னுமொரு நாடு சம்பந்தப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் அதனை நீக்குவதற்கு நடக்கும் முயற்சி எத்தகைய விளைவுகளை தரும் என்பதை இப்போது சொல்லிவிட முடியாது. ஆனால், இப்படியொரு திருத்தத்தை தனிநபர் பிரேரணையாக கம்பன்பில கொண்டுவந்தாலும் அது விவாதத்திற்கு எடுக்கப்பட்டு, அமுல்செய்யப்படுமா என்பது தெரியவில்லை. ஆனால் அப்படி எடுத்தாலும், இந்த விடயத்தில் அரசியல் கட்சிகள் என்ன நிலைப்பாட்டில் இருக்கின்றன என்பதை அறிய நல்ல சந்தர்ப்பம்தான். முக்கியமாக அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளுக்காக காத்திருக்கும் கட்சிகள் என்ன சொல்லப்போகின்றன என்பதை அறிய நல்ல சந்தர்ப்பம்தானே.

---

**கே. ஜெயரூபன்,**
**செட்டிபாளையம், மட்டு.**

கேள்வி: இறுதிப் போர் காலத்தில் வடக்கு மாகாண பிரதி பொலிஸ் மா அதிபராகவும் பின்னாளில் விசேட அதிரடிப்படையின் தளபதியாகவும் இருந்த நிமால் லெவ்கே ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்துள்ளார். ஏற்கனவே முன்னாள் ராணுவத்தளபதியான தயா ரத்நாயக்கவும் அந்தக் கட்சியில் ஐக்கியமாகியிருந்தார். இப்படியே கட்சியில் ராணுவத்தினரையே இணைப்பது எதற்காக என்று நினைக்கின்றீர்கள்?

வியுக்தியார்: இலங்கையில் அண்ணளவாக மூன்று லட்சம் படையினர் இருக்கின்றனர். ஓய்வுபெற்ற படையினரையும் சேர்த்தால் இது பல லட்சங்களைத் தொடும். இப்படி படையினரின் குடும்பங்களின் வாக்குகள் மாத்திரமே அண்ணளவாக இரண்டு மில்லியன் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இந்த வாக்குகளை இலக்கு வைத்தத்தான் இப்போது காய்கள் நகர்த்தப்படுகின்றன. ஐக்கிய மக்கள் சக்தியில் மாத்திரமல்ல, ஜேவிபியின் தேசிய மக்கள் சக்தியிலும் தான் படை அதிகாரிகள் சேர்ந்து வருகின்றனர். அரசியல் கட்சிகளுக்குத்தான் கொள்கை என்பது இல்லையே, அவர்களின் குறி தேர்தலில் வாக்குப்பெறுவது- வெற்றி பெறுவது என்பது மட்டும்தானே.

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# “டெல்லி சலோ”

# மீண்டுமொரு தொடர் போராட்டம்: டெல்லியில் விவசாயிகள் முற்றுகை!



விவசாய விளை பொருட்களுக்கு குறைந்த பட்ச ஆதார விலையை நிர்ணயிக்கும் சட்டம் இயற்றப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து மீண்டுமொரு தொடர் போராட்டத்தை டெல்லியில் பஞ்சாப், ஹரியானா விவசாயிகள் தெருக்களில் இறங்கியுள்ளனர்.

இத்திய சுதந்திர போராட்டத்தின் போது சுபாஷ் சந்திர போஸின் புகழ்பெற்ற முழக்கமான “டெல்லி சலோ” (டெல்லி நோக்கிச் செல்லுங்கள்) எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்தப் போராட்டத்திற்கு சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஜ்தூர் மோர்ச்சா உள்ளிட்ட 200 விவசாய அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்தப் போராட்டதிற்காக பஞ்சாப், பீகார்,



ஹரியானா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் டெல்லியை நோக்கிப் படையெடுத்துள்ளனர்.

மத்திய பாஜக அரசு கடந்த 2020ஆம் ஆண்டில் வேளாண் சட்டங்களை கொண்டு வந்த வேளை, அதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்த விவசாயிகள் பாரிய போராட்டத்தில் இறங்கினர். இந்த போராட்டம் சுமார் ஓராண்டு வரை நீண்டது. அதன் பின்னரே வேளாண் சட்டங்களை வாபஸ் பெறுவதாக மத்திய அரசு அறிவித்தது.

இப்போது தலைநகர் டெல்லியை முற்றுகையிட்டு விவசாயிகள் போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்துள்ளனர்.

**ஹரியானா பஞ்சாப் மாநில விவசாயிகள்:**

முக்கியமாக ஹரியானா மற்றும் பஞ்சாப் மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகள் டெல்லியை நோக்கிப் பேரணியை ஆரம்பித்துள்ளனர். குறைந்தபட்ச ஆதரவு விலைக்கான உத்தரவாதம் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டத்தில் குதித்துள்ளனர். சுமார் இருநூறுக்கும் மேற்பட்ட விவசாய சங்கங்கள் இதில் கலந்து கொண்டு டெல்லியை நோக்கி முற்றுகையிட்டுள்ளனர்.

முன்னதாக இந்தப் போராட்டத்தை ஆரம்பிக்கும் முன்பு விவசாய சங்கத்தினர் கேரளா, உத்தரப் பிரதேசம், பீகார், சத்தீஸ்கர், மகாராஷ்டிரா, உத்தரகாண்ட் மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்குச் சென்று அந்தந்த



மாநில விவசாயிகளிடம் நேரடியாக ஆதரவு கோரியது குறிப்பிடத்தக்கது.

இப்போது விவசாயிகள் டெல்லியில் மீண்டும் போராட்டத்தை அறிவித்து குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட வாக்குறுதிகளை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

இந்த விவசாயிகள் போராட்டம் தொடர்பாக மத்திய அரசுக்கு உளவு துறை சமர்பித்த தகவல்கள் வெளியாகியுள்ளது. தலைநகர் டெல்லியை விவசாயிகள் முற்றுகையிட முயன்றுள்ள நிலையில், அனைத்து நுழைவாயில்களிலும் பலத்த போலீஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டது.

முக்கிய நுழைவாயில்களை தவிர்த்துவிட்டு தொலைவில் மற்றும் சாலை வசதிகள் முறையாக இல்லாத நுழைவாயில்களை பயன்படுத்தி டெல்லியை முற்றுகையிட விவசாயிகள் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**காங்கிரஸ் கட்சி ஆதரவு:**

காங்கிரஸ் கட்சி விவசாயிகளுக்கு மத்திய அரசு அநீதி இழைப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளது. இது குறித்து காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ், விவசாயிகளுக்கு அளித்த உத்தரவாதங்களை மோடி

> இந்திய சுதந்திர போராட்டத்தின் போது சுபாஷ் சந்திர போஸின் புகழ்பெற்ற முழக்கமான ’டெல்லி சலோ’ எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்தப் போராட்டத்திற்கு பல விவசாய அமைப்புகளும் ஆதரவு தெரிவித்துள்ளன.

அரசு நிறைவேற்றவில்லை. விவசாயிகளுக்கு காங்கிரஸ் ஆதரவு அளிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன் பெருஞ் சாலைகளில் ஆணித் தடுப்புகள் பற்றிய வீடியோக்கள் வைரலான நிலையில் அதைப் பகிர்ந்திருந்த காங்கிரஸ் மூத்த தலைவரும் எம்.பியுமான ராகுல் காந்தி, விவசாயிகளின் பாதையில் ஆணி அடிப்பவர்கள் நம்பிக்கைக்கு தகுதியற்றவர்கள், அவர்களை டெல்லியில் இருந்து பிடுங்கி எறிந்துவிடுங்கள்.

விவசாயிகளுக்கு நீதியையும் லாபத்தையும் காங்கிரஸ் வழங்கும் எனப் பதிவிட்டிருந்ததுடன், பிரதமர் மோடி, கடந்த பத்து ஆண்டுகளில் விவசாயிகளை



ஏமாற்றியுள்ளார் எனவும் குற்றஞ்சாட்டியிருந்தார்.

**மீண்டுமொரு தொடர் போராட்டம்**

இந்தப் போராட்டம் தொடர்பாக உளவு துறை கொடுத்த முக்கிய தகவல்களின் பட, விவசாயிகள் போராட்டத்திற்காக பஞ்சாபிலிருந்து மட்டும் 1,500 டிராக்டர்கள் மற்றும் 500 வாகனங்கள் வந்ததாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

குறிப்பாக அடுத்த ஆறு மாதத்திற்கு தேவையான உணவு, உடை உள்ளிட்ட பொருட்கள் உடன் தான் அவர்கள் இந்த பேரணியை ஆரம்பித்து உள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த டிராக்டர்களை விவசாயிகள் தங்குமிடங்கள் போல மாற்றி உள்ளதாகவும் உளவு துறை கூறியுள்ளது. மேலும், விவசாயிகள் சிறு குழுக்களாக டெல்லிக்குள் வந்து நகரில் இருக்கும் குருத்வாராக்கள், தர்மசாலாக்கள், ஆசிரமங்கள், விருந்தினர் மாளிகைகளில் தங்கவும் பிறகு திடீர் போராட்டங்களை நடத்தவும் திட்டமிட்டுள்ளதாக உளவு துறை தகவல் வெளியாகியுள்ளது.

இதன் காரணமாக டெல்லியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக பிரதமர் இல்லம், உள்துறை அமைச்சர் அலுவலகம் போன்ற இடங்களில் போராட்டம் நடக்கலாம் என்பதால் அங்கே பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

**டெல்லியில் 2020 போராட்டம்**

டெல்லியின் எல்லைகளில் 2020-ம் ஆண்டு நவம்பரில் விவசாயிகளின் தொடர் போராட்டம் நடைபெற்றது. ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்ந்த இந்த போராட்டத்தில் பல விவசாயிகள் உயிரிழந்தனர். இதேபோன்று மீண்டுமொரு தொடர் போராட்டத்தை பஞ்சாப், ஹரியாணா விவசாயிகள் தற்போது கையில் எடுத்துள்ளனர். தங்கள் கோரிக்கைகள் நிறைவேறும் வரை பேராட்டத்தை தொடர விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர்.

விவசாய விளைபொருட்களுக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் உள்ளிட்டப் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ராஜஸ்தான், உ.பி., பிஹார், கேரளா உள்ளிட்ட மாநிலங்களைச் சேர்ந்த விவசாயிகளும் இந்த போராட்டத்தில் பங்கேற்கின்றனர். சம்யுக்தா கிசான் மோர்ச்சா, கிசான் மஜ்தூர் மோர்ச்சா உள்ளிட்ட பல விவசாய அமைப்புகள் இதற்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

2024 மத்திய தேர்தல் நேரத்தில் மத்திய அரசிற்கு தலை வலியாக உருவெடுக்கும் இப்போராட்டத்தை தடுத்து நிறுத்த மத்திய விவசாயத்துறை அமைச்சர் அர்ஜூன் முண்டா, மத்திய உணவு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல் மற்றும் மத்திய உள்துறை இணை அமைச்சர் நித்தியானந்த் ராய் ஆகியோர் விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினர்.

சண்டிகரில் கடந்த 8-ம் தேதி முதல் கட்டமாக விவசாயிகளுடன் பேச்சுவார்த்தையை துவங்கினர். அதன்பிறகு பிப்.10, 11 மற்றும் 12 ஆகிய தேதிகளிலும் பேச்சுவார்த்தை தொடர்ந்தது. இதற்கான ஏற்பாடுகளை பஞ்சாப் முதல்வர் பகவந்த் சிங் மான் செய்திருந்தார்.

இந்த பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி, கடந்த விவசாயிகள் போராட்டத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள் வாபஸ்பெறவும், போலி விதை விற்பனை செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் மத்திய அரசு ஒப்புதல் தெரிவித்துள்ளதாக கூறப்பட்டது.

ஆயினும் தற்போது டெல்லி காவல் துறையினர் இப்போராட்டத்தை ஒடுக்கும் முயற்சியில் ஈடுபட் டுள்ளனர். இதற்காக,டெல்லி, பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநில எல்லைகளில் கூட்டங்கள் கூடுவதற்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் மத்திய பாதுகாப்பு படை வீரர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பஞ்சாப், ஹரியாணா விவசாயிகள் தீவிரமாக கையில் எடுத்துள்ள கோரிக்கைகள் நிறைவேறும் வரை இந்த போராட்டத்தை தொடர அவர்கள் திட்டமிட்டுள்ளதாக தெரிகிறது. •



# தலவாக்கலையில் இடம்பெற்ற செல்... வா....சேர் நினைவேந்தல் இதழ் வெளியீடு தலவாக்கலையில்







கொழும்பு, பெப். 18

ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் ஓய்வுபெற்ற உப பீடாதிபதியும் பிரபல ஆசிரியருமான வ.செவ்வராஜா காலம் சென்று நாற்பது நாட்கள் நிறைவில் நோட்டன் வாசகர் வட்டம் வெளியீடாக வந்திருக்கும் செல்..வா ..சேர் நினைவுச் சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு தலவாக்கலை நண்பர்கள் வட்டத்துடன் இணைந்து தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் அதிபர் கிருஸ்ணசாமி முன்னிலை வகிக்க சாகித்யரத்ன மு.சிவலிங்கம் தலைமையில் இடம் பெற்றது.

திருமதி சுகிர்தகலா செல்வராஜா ஆசிரியை அவரது துணைவர் வ.செல்வராஜாவின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்த வருகை தந்த அனைவரும் மெழுகுவர்த்தி ஏந்தியும் மலர் தூவியும் அன்னாருக்கு மிகவும் உணர்வு பூர்மாக தமது அஞ்சலியை செலுத்தினர்.

வரவேற்புரையை ஜி.குணரட்னம் நிகழ்த்தினார். மல்லியப்புசந்தி திலகர் வெளியீட்டுரையும் ஆசிரியர் ஸ்டார்லின் சிவஞானஜோதி இதழாய்வுரையையும் ,விரிவுரையாளர் மு.அகிலன் , கோட்டக்கல்விப்பணிப்பாளர் எஸ். இங்கர்சால் , சிரேஸ்ட விரிவுரையாளர் அ.மெத்தியூஸ் ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்.

ஆசிரியர் எஸ்.செழியன் அஞ்சலி கவிதை வாசித்தார். ஆசிரியர்களான , தாஸ் பெர்னாண்டோ, மோகன் ஹரி ஆகியோர் அஞ்சலி பாடலை பாடினார்கள்.

குடும்பத்தினர் சார்பாக வ. செல்வராஜாவின் துணைவியார் திருமதி சுகிர்தகலா செல்வராஜா , திருமதி. வீரய்யா சுதர்ஷினி சைலஜா ஆகியோர் உரையாற்றினார். நோட்டன் வாசகர் வட்ட தலைவர் நோட்டன் ராம் நன்றியுரை நிகழ்த்தினார். இதழ் தொகுப்பாசிரியர் ஜீவா சதாசிவம் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். (அ)

## தமிழர்களிடம்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய விடயங்களுக்கான உண்மையான பிரதிபலிப்பை தேசிய மக்கள் சக்தியிடம் எதிர்பார்க்கின்றனர். ஒன்று அக்கட்சி யினர் கடந்த காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக அவர்களது தற்போதைய நிலைப்பாடு என்ன? அவை தவறானவை என ஏற்றுக் கொள்கிறார்களா? இல்லையா? இரண்டாவது எதிர்காலத்தில் இனப்பிரச்சினை தீர்வுக்கான அவர்களது முன்மொழிவு என்ன? தென்னிலங்கை மக்களுக்கு இன்றைய நிலையில் பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் முக்கியமாக இருக்கலாம். ஆனால் தமிழ் மக்களுக்கு அவற்றைவிட அரசியல் தீர்வே எப்போதும் முதன்மையாக இருந்து வருகிறது. ஏனெனில் இன்றுள்ளதை விட மிகமோசமான பொருளாதார, சமூகப்பிரச்சிகளுக்குள் வாழ்ந்து மீண்டவர்கள் தமிழர்கள். அவர்கள் இலங்கையராகச் சிந்திப்பதற்கு மேலாகத் தமிழராகச் சிந்திக்கிறார்கள். அவர்கள் இலங்கையராகச் சிந்தித்து நாட்டின் அரசியல், பொருளாதார, சமூகக் கட்ட மைப்பை முழுமையாக மாற்ற எவருக் கும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராகவே உள்ளனர். ஆனால் அதற்கு முன் தமக்கான அரசியல் தீர்வை எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

# மீண்டும் அந்த சலித்துப்போன....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய ஜே.ஆர்.ஜெயவர்தனவைப் பொறுத்தவரை, அவரது இரண்டாவது பதவிக்காலம் முடிவடைந்தபோது அவர் மேற்கொண்டு செய்வதற்கு அரசியலில் எதுவும் இருக்கவில்லை. அதனால் அவர் ஜனாதிபதி இரு பதவிக்கால வரையறையை நீக்குவதற்கோ அல்லது ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கோ அரசியலமைப்பு திருத்தத்தைக் கொண்டுவரவில்லை.

ஜெயவர்தன எழுபது வயதைக் கடந்த பின்னர்தான் ஜனாதிபதி பதவிக்கு வந்தார். அதை விடவும் குறைந்த வயதில் அவர் பதவிக்கு வந்திருந்தால் அரசியலமைப்பில் ஜனாதிபதிக்கு இரு பதவிக்கால வரையறையை விதிக்கும் ஏற்பாட்டை புகுத்தியிருப்பார் என்பது சந்தேகமே. ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவரது முதலாவது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னதாகவே கொல்லப்பட்டுவிட்டார்.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தனது இரண்டாவது பதவிக்காலத்தின் தொடக்கத்தில் 2000 ஆம் ஆண்டில் அரசியலமைப்பை மாற்றி நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து நிறைவேற்று அதிகாரப் பிரதமராக அதிகாரத்தில் தொடர விரும்பினார். அவரால் அந்த முயற்சியில் வெற்றி பெறமுடியவில்லை.

மகிந்த ராஜபக்ச 18 ஆவது திருத்தத்தைக் கொண்டுவந்து நீண்டகாலத்துக்கு அதிகாரத்தில் இருக்க விரும்பினார். அதனால் அவர் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கவில்லை. 2015 ஜனவரியில் மூன்றாவது பதவிக்காலத்துக்கு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டார்.

அந்த ஜனாதிபதி தேர்தல் பிரசாரங்களில் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதாக வாக்குறுதி வழங்கிய மைத்திரிபால சிறிசேன அதிகாரத்துக்கு வந்த பிறகு அதை காப்பாற்றவில்லை. அது மாத்திரமல்ல, "நல்லாட்சி" அரசாங்க காலத்தில் முன்னெடுக்கப்பட்ட புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளின் போது அவரது தலைமையிலான சுதந்திர கட்சி ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படக்கூடாது என்ற யோசனையையே சமர்ப்பித்தது.

அவரது ஆட்சிக்காலத்தில் 2015 முற்பகுதியில் கொண்டுவரப்பட்ட 19 வது அரசியலமைப்பு ஜனாதிபதியின் அதிகாரங்களில் குறிப்பிடத்தக்க குறைப்பைச் செய்தது என்பது உண்மை. தனது பதவிக்காலத்தில் ஜனாதிபதி பதவியிடம் எஞ்சியிருக்கும் நிறைவேற்று அதிகாரங்களையும் நீக்கிவிடுவதாக காலஞ்சென்ற வண. மாதுளுவாவே சோபித தேரரின் பூதவுடலுக்கு முன்னால் தலைகுனிந்து அஞ்சலி செய்தவண்ணம் சிறிசேன சூளுரைத்தார். ஆனால் அதைச் செய்யாமலேயே பதவியில் இருந்து அவர் இறங்கினார்.

**ரணிலின் நிலைப்பாடு**

அதேவேளை இரு தடவைகள் ஜனாதிபதி தேர்தலில் தோல்வி கண்ட விக்கிரமசிங்க பிறகு நடைபெற்ற இரு தேர்தல்களில் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்த எதிரணியின் பொது வேட்பாளர்களை ஆதரித்தார். 2013 ஆம் ஆண்டில் அவரது ஐக்கிய தேசிய கட்சி புதிய அரசியலமைப்புக்கு அடிப்படையாக அமையக்கூடிய கொள்கை விளக்கம் என்று கூறி வெளியிட்ட ஆவணமொன்றில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு யோசனையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

நல்லாட்சி அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவொன்று 2018 ஆம் ஆண்டில் தயாரித்து வெளியிட்ட அரசியலமைப்பு வரைவில் ஜனாதிபதியைத் பாராளுமன்றம் தெரிவு செய்யவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அநுரா குமார திசாநாயக்க தலைமையிலான ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) நிறைவேற்று அதிகாரம் இல்லாத ஜனாதிபதியை பாராளுமன்றம் தெரிவு செய்வதற்கு வகை செய்யும் அரசியலமைப்பு திருத்த சட்டமூலம் ஒன்றை 2018 ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது.

சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் 2021 ஆம் ஆண்டில் நிறைவேற்று அதிகாரம் இல்லாத ஜனாதிபதியை பாராளுமன்றம் தெரிவு செய்வதற்கு வகைசெய்யும் அரசியலமைப்பு திருத்தம் ஒன்றைப் பிரேரித்தது.

இதுவே ஜனாதிபதி ஆட்சிமுறை நடைமுறையில் இருந்துவரும் 45 வருடங்களுக்கும் அதிகமான காலத்தில் அதை ஒழிப்பதற்கான முயற்சிகள் தோல்வி கண்ட வரலாறு. அவ்வாறு கூறுவதை விடவும் வாக்குறுதி மீறல்களின் வரலாறு என்று கூறுவதே மிகவும் பொருத்தமானது.

ஜனாதிபதியாக பதவியேற்ற பிறகு முதற்தடவையாக பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடரை சம்பிரதாய பூர்வமாக தொடக்கிவைத்து 2022 ஆகஸ்ட் முதல் வாரத்தில் கொள்கை விளக்கவுரையை நிகழ்த்திய விக்கிரமசிங்க தான் நியமிக்க உத்தேசித்திருக்கும் மக்கள் சபையிடமே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கவேண்டுமா இல்லையா என்பது தொடர்பில் கருத்தொருமிப்பை ஏற்படுத்தும் பொறுப்பை ஒப்படைக்கப்போவதாக கூறினார். மக்கள் சபை நியமிக்கப்படவுமில்லை. அதற்கு பிறகு அதைப் பற்றி அவர் பேசுவதுமில்லை.

ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க வேண்டும் என்று நினைத்திருந்தால் "அறகலய" மக்கள் கிளர்ச்சிக்கு பின்னரான உடனடிச் சூழ்நிலைகளில் எதிரணி கட்சிகளுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து அதைச் சாதித்திருக்கவும் முடியும். தவறான ஆட்சி முறைக்கு எதிரான அந்த மக்கள் கிளர்ச்சியின் முக்கிய முழக்கமாக ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு விளங்கியது.

ஆனால், அதற்கு பிறகு இடைக்கிடை ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து அரசாங்கத் தரப்பில் இருந்து சமிக்ஞைகள் வருகின்றன. ஆனால், தேர்தல்களை தவிர்க்கும் நோக்கத்துடனேயே அவை வருவதாக சந்தேகிக்கப்படுவதால் அதற்கு கட்சிகளின் ஆதரவைப் பெறமுடியாமல் இருக்கிறது.

ஒழுங்கமைவான அரசியல் செயன்முறைகளின் மூலமாக ஜனாதிபதி ஆட்சிமுறையை இதுகாலவரையில் ஒழிக்க முடியாமல் போய்விட்டதால் விசித்திரமான சூழ்நிலைகளின் கீழ் கிடைக்கக்கூடிய வாய்ப்பை பயன்படுத்தி நாட்டின் அரசியல் நெருக்கடிகளுக்கு பெருமளவுக்கு காரணமாக இருக்கும் அந்த ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு அரசியல் கட்சிகள் ஏன் ஒத்துழைக்கக்கூடாது என்று சில அரசியல் அவதானிகள் கேள்வி எழுப்புகிறார்கள்.

இது ஒரு இயல்புமீறிய ஒரு கேள்வியாக இருந்தாலும், ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்கான முயற்சி குறுகிய நோக்கத்திற்காகவோ அல்லது வஞ்சகத்தனமான நோக்கத்துக்காகவோ முன்னெடுக்கப்பட்டாலும் கூட நாட்டினதும் மக்களினதும் நீண்டகால நலன்களை மனதிற் கொண்டு அரசியல் தந்திரோபாயமாக அதை ஆதரிப்பதில் தவறில்லை. ஏனென்றால் வேறு வழிகளில் இந்த ஆட்சிமுறையை ஒழிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்காது என்று அந்த அவதானிகள் வாதிடுகிறார்கள்.

ஆபத்தான அந்த ஆட்சிமுறையினால் இதுகாலவரையில் மக்கள் எதிர்நோக்கிய சொல்லொணா துன்பங்களுடன் ஒப்பிடும்போது ஒரு தேர்தலை தியாகம் செய்வதில் எதுவும் பெரிதாக கேடு வந்துவிடப்போவதில்லை என்று அவர்கள் கூறுகிறார்கள். இது எதிரணி கட்சிகள் சிந்திக்கவேண்டிய வாதம்.

# அமெரிக்கா, சீனா, இந்தியா எம் உறவை விரும்புகின்றன!

## கூறுகின்றார் அநுரகுமார

கொழும்பு, பெப். 18

"தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கம் இந்தியாவின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலான எந்தவொரு விடயத்தையும் செய்யாது. ஆனால், சீனாவுடனான பொருளாதார மற்றும் அரசியல் உறவுகள் பேணப்படும்."

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் உயர்மட்ட குழுவொன்று அண்மையில் இந்தியாவுக்குக்கு அதிகாரபூர்வ பயணமொன்றை மேற்கொண்டிருந்தது.

இந்தப் பயணம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அனுரகுமார திஸாநாயக்க,

கடந்த டிசம்பர் மாதம் இந்தியாவுக்கு வருகை தருமாறு அழைப்பு கிடைக்கப் பெற்றது. அதன் பிரகாரமே எமது பயணம் அமைந்தது.

இருப்பினும் டிசம்பரில் எங்களுக்கு வேறு அழைப்புகளும் இருந்தன. எமது கட்சியில் ஒருவர் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில் சீனாவுக்குச் சென்றிருந்தார்.

எங்கள் வெளியுலக உறவுகளில் முழு வெளிப்படைத்தன்மையைப் பேணுகிறோம் என இந்தியாவிடம் தெரிவித்தோம்.

சமகால அரசாங்கத்தின் தனியார்மயமாக்கல் கொள்கையில் சீன மற்றும் இந்தியாவின் முதலீட்டாளர்கள் ஈர்க்கப்பட்டுள்ளனர். இந்த விடயம் இரண்டு நாடுகளுக்கு இடையே இலங்கைத் தீவில் போட்டித் தன்மையை உருவாக்கியுள்ளது.

லங்கா ஹொஸ்பிட்டல் மற்றும் ரெலிகொம் நிறுவனத்தை தனியார் மயமாக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அமுல் நிறுவனம் என்.எல்.டி.பியை வாங்க வேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் காலத்தில் இருந்து ஆட்சியை கைப்பற்றிய அனைத்து அரசாங்கங்களும் பேரழிவுகரமான வெளிநாட்டுக் கொள்கைகளை பின்பற்றி இலங்கையை பெரும் வல்லரசுகளுக்கு இடையேயான போர்க்களமாக மாற்றியுள்ளன.

ஜே.ஆர். அமெரிக்கர்களை இலங்கைக்கு அழைத்தார். அந்த நேரத்தில், இந்தியா சோவியத் யூனியனுடன் (ரஷ்யா) இருந்தது. இது இந்தியாவை கோபப்படுத்தியது.

பின்னர், ஏனைய அரசாங்கங்கள் ஒவ்வொரு நாட்டிற்கும் மதிப்புமிக்க தேசிய சொத்துக்களை விற்றன. இந்தப் போட்டியில் ஒப்பந்தங்கள் மூலம் சீனாவையும் இந்தியாவையும் சமநிலைப் படுத்த முயன்றன.

தேசிய மக்கள் சக்தி அணிசேரா வெளியுறவுக் கொள்கையை கடைப்பிடிக்கிறது. வெளிப்படைத்தன்மையுடன் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விவகாரங்களில் ஈடுபடுவதே எமது நோக்கம்.

தூதரகத்தின் செயல்பாடுகளில் அடிக்கடி கலந்துகொள்ளும் சில நபர்கள் எங்களைப் பற்றிய தவறான தகவல்களை பரப்புகிறார்கள் என்பதை நாங்கள் அறிவோம்.

இந்த எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள எங்களுக்கு உண்மையில் நேரம் இல்லை. எவ்வாறாயினும், சமீபத்திய மாதங்களில், தூதரக அதிகாரிகள் எங்களைத் தொடர்பு கொண்டுள்ளனர்.

ஏனென்றால், நாங்கள் தேர்தலில் வெற்றி பெறுவோம் என்று அவர்கள் நினைக்கிறார்கள். எங்கள் கொள்கைகள் என்ன என்பதை விளக்க இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி வருகிறோம்.

எமது அரசியல் எதிரிகள் இந்திய பயணம் குறித்து மிகவும் கவலைப்படுகிறார்கள். இந்தப் பயணம் எமது கட்சி பற்றிய இந்தியாவின் நிலைப்பாட்டை அகற்றியுள்ளது.

தேசிய மக்கள் சக்திக்கு சர்வதேச தொடர்புகள் அல்லது சர்வதேச உறவுகள் தொடர்பில் நிலைப்பாடு இல்லை என கூறிவந்தனர். அதற்கும் எமது சந்திப்புகள் பதில் வழங்கியிருக்கும்.

இந்தியா, சீனா, அமெரிக்கா மற்றும் பல நாடுகள் இப்போது எங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றன. நாங்கள் தேர்தலில் வெற்றி பெறுவோம் என அந்த நாடுகள் நினைக்கின்றன.

ரணிலுக்கு தனிப்பட்ட முறையில் வெளிநாட்டுத் தலைவர்கள் தெரியும், அவர் நாட்டைப் மீட்டு எடுப்பார் என்று சிலர் நம்பினர். அந்த விடயம் பொய் என்பதை அறிந்திருப்பார்கள். நாங்கள் ஆட்சிக்கு வருவதை தடுக்க எதையும் செய்வார்கள் - என்றார். (அ)

# தமிழ்க் கட்சிகளின் பிளவு மிக வருத்தமளிக்கின்றது

## இந்தியத் தூதுவர் கவலை

யாழ்ப்பாணம், பெப். 18

"தமிழ்க் கட்சிகளின் பிளவு வருத்தமளிக்கின்றது. இந்தக் கட்சிகள் மேலும் பிளவடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்." என இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர், தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் புத்திஜீவிகள் உள்ளிட்ட சிலரை நேற்று முன் தினம் இரவு யாழ்ப்பாணத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போதே தமிழ் கட்சிகளின் பிளவு ஆபத்தானது என்றும் பிளவுகளை சரி செய்யப்பட்டு அரசியல் பயணங்கள் தொடர வேண்டும் என்றும் சந்தோஷ் ஜா சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் அரசியல்வாதிகள் ஒவ்வொருடனும் தனித்தனியே இந்தியத் தூதுவர் கலந்துரையாடியுள்ளார்.

இருக்கின்ற தமிழ்க் கட்சிகள் மேலும் பிளவடையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் சந்தோஷ் ஜா ஆலோசனைகளை வழங்கியுள்ளார். (அ)

# புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறையால் பெரும் அவதி

முல்லைத்தீவு, பெப். 18

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் வைத்தியர் பற்றாக்குறை காணப்படுவதாக முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இடம்பெற்றபோதே இவ்விடயம் தெரிவிக்கப் பட்டது.

குறிப்பாக, எட்டு வைத்தியர்கள் பணியாற்ற வேண்டிய புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் நான்கு வைத்தியர்கள் மாத்திரமே கடமையாற்றுவதாக தெரிவிக்கப்பட்டது.

நாளொன்றுக்கு 80 - 100 நோயாளர்கள் மாத்திரம் பயன் பெறுகின்ற மாங்குளம் ஆதார வைத்தியசாலைக்கு எட்டு வைத்தியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனினும், ஒரு நாளைக்கு 300 - 350 வரையான நோயாளர்கள் பயன் பெறுகின்ற புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் வெறுமனே நான்கு வைத்தியர்கள் மாத்திரமே பணியாற்றி வருகின்றனர்.

எனவே, அதிகளவு மக்கள் வாழும் புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள ஆதார வைத்தியசாலையின் வைத்தியர் பற்றாக்குறையை விரைவில் நிவர்த்தி செய்யுமாறும் இந்த கூட்டத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. (அ)

## கடன்....

நெருக்கடியின் பன்முகத் தன்மையில் நாடு எதிர்கொள்ளும் சவால்களின் சிக்கலான தன்மையை அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இலங்கையின் பொருளாதார வீழ்ச்சியானது அதன் கடன் நிலைத் தன்மை பிரச்னைகளுக்கு தீர்வு காண்ப தற்கு ஒரு விரிவான அணுகுமுறையை அவசியமாக்கியது.

எனினும் பாரிஸ் கிளப்பில் அங்கம் வகிக்காத சீனா மற்றும் இந்தியா போன்ற பாரியளவில் கடன் வழங்குநர்களுடன், கடன் மறுசீரமைப்புக்கான பாரம்பரிய வழிகள் போதுமானதாக இருக்கவில்லை.

இதனையடுத்து, நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து, ஜப்பான், பிரான்ஸ் மற்றும் இந்தியாவுடன் இணைந்து, உத்தியோகபூர்வ கடன் வழங்குநர் குழுவை ஆரம்பிக்க முனைப்பான நடவடிக்கைகளை எடுத்தது.

பேச்சுவார்த்தைகளை எளிதாக்குதல் மற்றும் முயற்சிகளை முன்னெடுப்பதில் ஜப்பானின் இந்த ஈடுபாடு கடந்த நவம்பரில் உடன்படிக்கையை எட்டியது.

இந்தநிலையில் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு முன்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதில் ஜப்பானின் உறுதிப்பாட்டை இலங்கைக்கான தூதுவர் மிசுகோசி ஹிடேக்கி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

## ஜனநாயக....

அமைப்பாளர் ராமலிங்கம் சந்திரசேகரன், யாழ் இணைப்பாளர் இளங்குமரன், ஜனநாயகபோராளிகள் சார்பில் தலைவர் சி.வேந்தன் மற்றும் கட்சி உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

சமகால தேசிய பிராந்திய சர்வதேச அரசியல் நகர்வுகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக இலங்கையில் தமிழ் மக்கள் தற்போது அனுபவித்து வருகின்ற அத்துமீறிய நில ஆக்கிரமிப்பு, எல்லை தாண்டி மீன்பிடி, தமிழர் நில கடல் வளங்கள் அந்தந்த பிரதேச மக்களின் எதிர்ப்பினையும் தாண்டி வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்கப்படுதல் போன்ற விடயங்களில் தேசிய மக்கள் சக்தியினர் பாராளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் குரல் கொடுக்க வேண்டுமென ஜனநாயகப் போராளிகளால் கோரப்பட்டது. வருகின்ற ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலும் இலங்கையில் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்னைக்கு தேசிய மக்கள் சக்தியினர் முன்வைக்கப்போகும் தீர்வு திட்டம் தொடர் பிலும் விரிவாக கலந்துரையாடப்பட்டது. (அ)

## அமெரிக்காவிடம்....

வருவதாக வொசிங்டன் ரைம்ஸ் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான துணை இராஜாங்கச் செயலர் அஃப்ரீன் அக்தருடனான சந்திப்பை உள்ளடக்கிய தமது அமெரிக்கப் பயணம் - ஆழமான இருதரப்பு ஒத்துழைப்பை ஊக்குவிப்பதையும், இலங்கைக்கான ஆதரவை மேம்படுத்துவதையும் நோக்காகக் கொண்டது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார்.

அத்துடன், இலங்கையை தற்போதைய சூழ்நிலையில் இருந்து காப்பாற்றவும், ஒன்றிணைந்து செயல்படவும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தை வலியுறுத்துவதே தமது இந்த பயணத்தின் முக்கிய நோக்கம் எனவும் முன்னாள் ஜனாதிபதி சிறிசேன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் பயங்கரவாதத்தை எதிர்க்கும் வகையில், தற்போதைய அரசாங்கத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் நிறைய ஒத்துழைப்பு உள்ளது.

இந்த உறவு வொசிங்டனில் இருந்து பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என தாம் நம்புவதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வொசிங்டன் ரைம்ஸ் பத்திரிகையிடம் குறிப்பிட்டுள்ளார். (அ)

## சிறுமி....

பரிசோதனை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி செல்லத்துரை பிரணவன் குறித்த சிறுமி பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு கழுத்தை நெரித்து கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சிறுமியின் உடல் தற்போது அவரது வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

அவரை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய சந்தேகநபரான தென்னந்தோட்ட பராமரிப்பாளர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

## அமெரிக்க....

அமெரிக்க - இலங்கை பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் இலங்கை விஜயத்தின் போது கொழும்பு துறைமுக நகரத்துக்கும் அமெரிக்க துணை வெளியுறவு செயலாளர் ரிச்சர்ட் வர்மா விஜயம் மேற்கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 15இலங்கை....

மியன்மாருக்கான இலங்கை தூதுவர் ஜனக பண்டார தெரிவித்தார் எவ்வாறாயினும், பொது மன்னிப் பின் கீழ் மீனவர்கள் விடுவிக்கப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுவதாக தூதுவர் கூறினார்.

மீனவர்கள் நலமுடன் இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மியன்மார் கடல் எல்லையை மீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 2 மீன்பிடி படகுகளுடன் 15 இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

குறித்த குழுவினர் கடந்த நவம்பரில் கற்பிட்டி மற்றும் நீர்கொழும்பு பகுதிகளுக்கு மீன்பிடிக்காக ரயன்புத்தா மற்றும் லோரன்ஸ் ஆகிய மீன்பிடி படகுகள் மூலம் சென்றுள்ளனர்.

குறித்த மீனவர்கள் டிசம்பர் 2 ஆம் திகதி மியன்மார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டனர். (அ)

## அமெரிக்க குழு....

குழு நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக, அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரதிநிதிகள், பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் ஆராயவும், நிகழ்நிலை காப்பு சட்டம் உள்ளிட்ட அண்மைய சட்டங்களுடன் தொடர்புடைய சிக்கல்கள் குறித்து கலந்துரையாடவும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்திக்கவுள்ளதாக அமெரிக்க தூதுவர் ஜூலி சங் தனது பதிவில் தெரிவித்துள்ளார். (அ)

ஈழநாடு
Eelanadu

# கச்சதீவு அந்தோனியார் திருவிழாவை புறக்கணித்துள்ளனர் தமிழக மீனவர்கள்

## இலங்கை அரசுக்கு எதிராக போராட்டம்

சென்னை, பெப். 18

**இலங்கையில் தமிழக மீனவர்களுக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக கச்சதீவு திருவிழாவை புறக்கணிக்க போவதாக மீனவர்கள் ஆலோசனை கூட்டத்தில் முடிவு எட்டப்பட்டுள்ளது.**



எல்லை தாண்டி மீன் பிடித்த தாக கைது செய்யப்பட்ட மூன்று தமிழக மீனவர்களுக்கு சிறை தண் டனை விதித்து இலங்கை நீதிமன்ற தீர்ப்பளித்ததை கண்டித்தும், நீதி மன்ற தீர்ப்பை உடனடியாக ரத்து செய்ய வலியுறுத்தியும் ராமேஸ் வரம் மீனவர்கள் கச்சதீவு திரு விழாவை புறக்கணிப்பதுடன் நேற்று முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட போவதாக ஆலோசனை கூட் டத்தில் விசைப்படகு மீனவர்கள் முடிவு செய்து தீர்மானத்தை நிறை வேற்றி உள்ளனர்.

ராமேஸ்வரம் மீன்பிடித் துறை முகத்திலிருந்து கடந்த மூன்றாம் திகதி மீன்பிடிக்க சென்று நான்காம் திகதி அதிகாலை எல்லை தாண்டி மீன்பிடித்ததாக இரண்டு படகு களையும் அதிலிருந்து 23 மீனவர் களையும் இலங்கை கடற்படை யினர் கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

மீனவர்களின் வழக்கு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப் பாணம் ஊர்காவற்துறை நீதி மன்றத்தில் விசாரணைக்கு எடுத் துக்கொள்ளப்பட்டபோது வழக்கை விசாரித்த நீதிபதி 23 மீன வர்களில் 20 மீனவர்களை விடுதலை செய்து உத்தரவிட்டதுடன் இரண்டு மீன்பிடி விசைப் படகு ஓட்டுநர்களான பெக்கர் மற்றும் ராபர்ட் ஆகிய இருவருக்கும் ஆறு மாத காலம் சிறந்த தண்டனை விதிக்கப்பட்டது.

அதேபோல் இலங்கை கடற் படையால் 2019 ஆண்ட சிறைப் பிடிக்கப்பட்டு இலங்கை நீதிமன்றத் தால் நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்ட மீனவர் மெல்வின் மீண்டும் எல்லை தாண்டிய குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்டதால் அவருக்கு ஓராண்டு சிறை தண்ட னையும் விதித்து தீர்ப்பளித்தார்.

இலங்கை நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு ராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் இந்த தீர்ப்பை உடனடியாக ரத்து செய்ய வேண்டும் எனவும், சிறை தண் டனை விதிக்கப்பட்ட ராபர்ட், பெக்கர், மெல்வின் ஆகிய மூன்று மீனவர்களையும் உடனடியாக விடு தலை செய்ய வலியுறுத்தி இன்று ராமேஸ்வரம் மீன்பிடி துறை முகத்தில் அனைத்து விசைப்படகு மீனவ சங்கம் சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தப் பட்டது.

இந்த கூட்டத்தில் சிறை தண் டனை விதிக்கப்பட்ட மூன்று மீன வர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டு கண்ணீருடன் தங்களது சிறையில் உள்ள தங்கள் உறவினர் களை உடனடியாக விடுதலை செய்ய வலியுறுத்தி கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

பின்னர் கூட்டத்தின் முடிவில் எதிர்வரும் 23ஆம்,24 ஆம் திகதி களில் கச்சதீவில் நடைபெற உள்ள புனித அந்தோனியார் கோவில் திரு விழாவில் கலந்து கொள்ளாமல் தமிழக மீனவர்கள் புறக்கணிக்கப் போவதாகவும், விசைப்படகு மீன வர்கள் நேற்று முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட உள்ளதாகவும் தெரி வித்துள்ளனர்.

அத்தோடு, இன்று மீன்பிடி விசைப் படகுகளில் கறுப்பு கொடி யேற்றி தங்களது எதிர்ப்பை வெளிப் படுத்த போவதாகவும் ராமேஸ்வரத் தில் இருந்து எதிர்வரும் செவ்வாய்க் கிழமை ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு மூன்று நாட்கள் நடந்து சென்று விசைப் படகு மீனவர்கள் அனைவரும் தங்களது படகு உரிமம், மீனவர் அடையாள அட்டை உள்ளிட்ட வைகளை ஆட்சியரிடம் ஒப்ப டைக்க போவதாக மீனவர் நடத்திய ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்துள்ளனர்.

மேலும் தங்களது கண்டனத்தை பதிவு செய்யும் விதமாக ராமேஸ் வரம் மீன்பிடி அனுமதி சீட்டு வழங் கும் அலுவலகம் முன்பு மீனவர்கள் சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

அமெ. இராஜதந்திர துணைச் செயலர்

# எலிசபெத் அலன் இலங்கை வருகிறார்

கொழும்பு, பெப். 18

அமெரிக்க பொது இராஜதந்திரத்திற்கான துணைச் செயலாளர் எலிசபெத் எம். அலன் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இம்மாதம் 12 ஆம் திகதி முதல் எதிர்வரும் 22 ஆம் திகதிவரை ஜோர்தான், இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விஜயம் செய்கிறார் எலிசபெத் எம். அலன்.

ஜோர்தானுக்கான விஜயத்தின் பின்னர், இலங்கைக்கு வருகைதரும் அலன், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான அமெரிக்க ஆதரவை மீண்டும் உறுதிப் படுத்தவும், சுதந்திரமான மற்றும் இந்தோ-பசுபிக் பகு தியை ஊக்குவிக்கும் நோக்கில் சந்திப்புக்களை மேற் கொள்வார்.

இலங்கைக்கான விஜயத்தின்போது, ஊடகவியலா ளர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் இளைஞர் மன்றம் உட்பட பலதரப்பட்டவர்களுடன் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஜனநாயக விழுமியங்கள் பற்றிய கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

அலனின் இறுதி விஜயமான இந்தியாவுக்கான பய ணம் அமைகின்றது. (அ)

# கடலில் மூழ்கிக் காணாமல்போன 2 மாணவர்கள் சடலங்களாக மீட்பு!

அம்பாறை, பெப். 18

கிழக்கு மாகாணத்தில், மாவட்டத்தில் கடலில் மூழ்கி காணாமல் போயிருந்த இரு மாணவர்களும் சடலங்க ளாக மீட்கப்பட்டுள்ளனர்.

மாளிகைக்காடு - சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் நிந்தவூர் பிரதேச கடலில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை புகைப்படம் எடுத்து விளையாடிக் கொண்டிருந்தபோது கடலில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்தனர்.

இவர்களில் சூர்தீன் முஹம்மட் முன்சிப் (வயது 15) எனும் மாளிகைக்காடு பிரதேசத்தை சேர்ந்த மாணவ னின் சடலம் நேற்று சனிக்கிழமை காலை மீட்கப்பட் டது. அதனை தொடர்ந்து சாய்ந்தமருதைச் சேர்ந்த ரிஸ் வான் முஹம்மட் இல்ஹம் (வயது 15) எனும் மாண வனின் சடலம் இன்று மதியம் மீட்கப்பட்டது.

சாய்ந்தமருதின் பிரபல பாடசாலை மாணவர்களான 13 மற்றும் 15 வயதுக்குட்பட்ட 08 மாணவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஜும்மா தொழுகையை முடித்துக்கொண்டு துவிச்சக்கர வண்டியில் நிந்தவூர்-ஒலுவில் எல்லை கடற்கரைக்கு சென்றனர்.

அங்கு புகைப்படம் எடுத்து விளையாடிக் கொண்டி ருந்தபோது அன்று மாலை 04.20 மணி அளவில் அதில் இருவரை கடலலையில் அள்ளுண்டு சென்றுவிட்டதாக விசாரணையில் தெரியவந்தது.

கடலலையில் அள்ளுண்டு சென்று காணாமல் போன மாணவர்களை மீனவர்களும், பொதுமக்களும் தேடி அலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த சம்மாந்துறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி எம்.ரீ.சபீர் மரணம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டார்.

# கள்வர்களற்ற கூட்டணி அமைப்பதுதான் நல்லது

## கூறுகின்றார் சந்திரிகா

கொழும்பு, பெப். 18

அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்காக கள்வர்கள் அற்ற கூட்டணியொன்று அமைத்தால் நல்லது என்று முன் னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமார துங்க தெரிவித்தார். பொது கூட்டணியொன்று அமைய வாய்ப்புள்ளதா என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக் கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதற் கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றனவே என எழுப்பட்ட கேள்விக்கு, "சட்டப்பூர்வமாக ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைக்க முடியாது." - என்றார் சந்திரிகா அம்மையார்.

அதேவேளை, இன்னும் ஏழு போயா தினங்களுக்குள் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார். (அ)

# யாழ்.சிறையில் இந்திய மீனவரை சந்தித்தார் ஜீவன் தொண்டமான்

யாழ்ப்பாணம், பெப். 18



மீனவர் பிரச்னைக்கு விரைவில் நிலையானதொரு தீர்வை காணுமாறு இந்திய அரசிடமும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் கோரிக்கை விடுத்துள் ளோம் - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள 43 தமிழக மீனவர்களை அமைச்சர் நேரில் சென்று சந்தித்தார். அவர்களிடம் சுகம் விசாரித்ததுடன், அவர்களுக்குள்ள பிரச்சினைகளை கேட்டறிந்துகொண்டார்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளி யிட்ட அமைச்சர் கூறியவை வருமாறு,

"யாழ்ப்பாணம் சிறையில் உள்ள 43 தமிழக மீன வர்களை சந்தித்தேன். அவர்கள் ஏன் கைதுசெய்யப்பட் டுள்ளனர் என்பது பற்றி எடுத்து கூறினேன். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டனர். 43 மீனவர் களில் இருவர் கடத்தல் சம்பவத்துடன் தொடர்பு பட்டுள்ளனர்.

ஏனைய 41 மீனவர்களுக்கும் இலங்கை அரசு மூல மாக அல்லது, எம்மால் முடிந்த உதவிகளை நிச்சயம் செய்வோம். இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங் களுக்குள் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்புகின்றேன். இலங்கை பொலிஸார் தம்மை நன்றாக நடத்துகின்றனர் என மீனவர்கள் தெரிவித்தனர்.

வடக்கில் உள்ள மீனவர்களும் தமிழர்கள், போரால் பாதிக்கப்பட்டவர்கள், சிறிய படகுகளை வைத்துக் கொண்டுதான் அவர்கள் தமது வாழ்க்கையை கொண்டு நடத்துகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் படக்கூடாது.

தமிழக மீனவர்கள் ரோலர் படகுகளைப் பயன் படுத்தி அதிகளவான மீன்களை பிடிக்கின்றனர், இலங்கை கடல் வளமும் சேதமடைகின்றது. இது கடல்சார் சட்டங்களையும் மீறும் செயலாகும். மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு இந்திய அரசிடமும், இலங்கை ஜனாதிபதியிடமும் நாம் கோரிக்கை முன்வைத்துள்ளோம்." - என்றார்.(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

குரு அரவிந்தன்

# ஆசை வெட்கமறியாதோ...?

எழுபது கிலோ மீற்றர் வேகத்தில் சென்ற நான் சைகை விளக்கு சிகப்பு நிறத்திற்கு மாறவே வண்டியை நிறுத்தி னேன். அதே வேகத்தில் வந்த அவள் எனது வண்டிக்கு அருகே தனது சிகப்பு நிற வண்டியை நிறுத்தி விட்டு உதட்டுக் குச் சாயம் பூசிக்கொண்டிருந்தாள். இப் படியான முகஅலங்காரங்களை சாதார ணமாக சைகை விளக்குகளில் வண்டியை நிறுத்தும் போது பெண்கள் செய்வது வழக்கம்.

ஆனால் இவள் தலையை ஒரே சீராக வேகமாக அசைத்துக் கொண்டு உதட் டுக்கு அலங்காரம் செய்த தால் அவளது அந்தச் செய்கை என்னை அவளது பக்கம் திரும்பிப் பார்க்க வைத்தது. ஏதாவது பாட்டைப் போட்டுவிட்டு அதற்கேற்பத் தலையசைக்கின்றாள் என்பது புரிந்தது. இளமை ஒருபக்கம் அவளிடம் துள்ளி விளையாட, அவள் சுறுசுறுப்பாகவும், அழகாகவும் இருந்தில் என்னை அவள் கவர்ந்திருந்தாள்.

பச்சை விளக்கு எரியவே நான் வண் டியை முன்நோக்கி ஓட்டிச் சென்றேன். அடுத்த பச்சை விளக்கைத் தண்டும் போது சட்டென்று மஞ்சள் விளக்கு எரிந்தது. கடந்து மறுபக்கம் போய்விட லாம் என்றுதான் நினைத்தேன், ஆனால் முன்னால் சென்ற வண்டிகள் ஏதோ காரணத்தால் மெதுவாக நகரத் தொடங் கவே எனது வண்டி பாதுகாப்புக் கோட்டைக் கடக்கும்போது சிகப்பு விளக்கு எரியத் தொடங்கிவிட்டது.

பொதுவாக வீதியைக் கடக்கும் போது இப்படியாக நடப்பதுண்டு என்பதால் ஏதோ கற்பனையில் இருந்த நான் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் இரண்டு வாரங்கள் கழித்து எனக்கு சிகப்பு விளக்கில் தெருவைக் கடந்ததற்காகத் தண்டப்பணம் கொடுக்கும்படி தபாலில் அறிவிப்பு வந்தது.

அங்கே அந்த சந்தியில் கண் காணிப்புக் கமெரா இணைக்கப்பட்டி ருந்ததை அவர்கள் அனுப்பிய படத்தில் இருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. எனது வண்டி கோட்டைத் தாண்டும்போ பாது சிவப்பு விளக்கு எரிவதைத் துல்லியமாகத் தானியங்கிக் கமெரா படம் பிடித்திருந்தது. எனது கவன மெல்லாம் அவளது சிகப்பு நிற வண்டி யில் இருந்ததால் நான் பாதையைக் கடக்கும்போது கமெராவைக் கவனிக் காமல் போயிருக்கலாம்.

அவர்கள் ஆதாரத்திற்காக அனுப்பிய புகைப்படத்தில் இன்னுமொரு விட யத்தை என்னால் அவதானிக்க முடிந்தது. அதாவது எனக்கருகே வண்டி ஓட்டிக் கொண்டு வந்த அந்தப் பெண்ணின் சிகப்பு நிற வண்டியும் எனது வண்டி யைப் போலவே சிகப்பு விளக்கில் அகப்பட்டிருந்தது.

வண்டியின் இலக்கத்தை எடுத்து நண்பன் மூலம் எப்படியோ அவளது தொலைபேசி இலக்கத்தைக் கண்டறிந்து அவளுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டேன். முதலில் ஒன்றுமே தெரி யாதது போல நடித்தவள் அந்தப் படத் தில் அருகே இருப்பது தனது வண்டி தான் என்பதை ஏற்றுக் கொண்டாள்.

தனது பெயர் நிஷா என்றும், தனக் கும் தண்டப்பணம் கட்டும்படி அறி விப்பு வந்திருப்பதாகவும் அறிமுகப்படுத் திக் கொண்டாள். அவளது முகத்தை மட்டும் ஞாபகம் வைத்திருந்த எனக்கு அவளது குரலிலும் ஒருவித கவர்ச்சி இருப்பது, அவளோடு தொலைபேசியில் பேசும்போது புரிந்து கொண்டேன்.

தண்டப்பணம் கட்டினால் புள்ளிகள் பறிபோய்விடும், அதனால் வண்டிக்கான காப்புறுதி அதிகரித்து விடும் என்பதை அவளுக்கு விளங்கப்படுத்தினேன். நான் ஒரு சட்டத்தரணி என்பதைச் சொல்லி,



எனக்காக நான் வாதாடும்போது அவளுக்கும் சேர்த்து வாதாடப்போவ தாகச் சொன்னேன். முதலில் தயங்கிய வள் ஒருவிதமாக ஒப்புக் கொண்டாள். அவளை முதன்முதலாகக் கண்ட அன்றே அவள்மீது எனக்கு ஒருவகை ஈர்ப்பு இருந்ததால் அவளது சம்மதம் எனக்குள் ஒருவித கிளுகிளுப்பை ஏற்படுத்தியது என்னவோ உண்மைதான்.

நான் தண்டப்பணம் சம்பந்தமாக சில விவரங்களை அவளிடம் கேட்டிருந் தேன். நானே அவளிடம் வந்து பெற்றுக் கொள்வதாகச் சொன்னபோது அவள் அதை மறுத்து தானே நேரில் கொண்டு வந்து தருவதாகச் சொன்னாள். எனவே தொடர்பு கொள்வதற்குச் சாதகமாக எனது செல்பேசி இலக்கத்தைக் கொடுத் திருந்தேன். மறுநாளே அவள் என்னைத் தொடர்பு கொண்டு வருவதாகச் சொல்லிவிட்டு என்னைத்தேடி வந்திருந்தாள். எங்கேயாவது தனியாக உட்கார்ந்து ஆறுதலாகப் பேசலாம் என்று நினைத்து அவளை அழைத்தேன்.

'வாங்க, ரிம்ஹோட்டனில காப்பி குடிச்சிட்டே உட்கார்ந்து பேசுவோமா?' என்றேன்.

தலையசைத்துவிட்டு என்னோடு வந்தாள். ஆளுக்கொரு காப்பி எடுத்துக் கொண்டு ஓரமாய் உட்கார்ந்தோம்.

'அப்புறம் சொல்லுங்க, நீங்க இங்கேதான் பிறந்தீங்களா நிஷா?'

'ஆமா, நான் இங்கேதான் பிறந்தேன். எங்க அப்பா அம்மாதான் சிலோன்லை இருந்து வந்தவங்க'

'இலங்கையில் எங்கே..?' என்றேன்.

'யாழ்ப்பாணம்' என்று மொட்டை யாய்ச் சொன்னாள்.

உங்க குடும்பத்தில நீங்க எத் தனைபேர், நீங்கதான் மூத்த பெண்ணா?

அவள் நெற்றியைச் சுருக்கி என்னை ஒரு மாதிரிப்பார்த்தாள்.

'எனக்குத் தெரியுமே, ஏற்கனவே சொன்னாங்க நான்தான் நம்பவில்லை' என்றாள்.

'என்ன சொன்னாங்க, யார் சொன்னாங்க?' என்றேன்.

'சொன்னாங்க, கொஞ்சம் இடம் கொடுத்தா எல்லாமே விசாரிப்பாங்க என்று சொன்னாங்கள்.'

'எல்லாமே என்றால்?'

'ஊரைச் சொன்னால், ஊரில வடக்கா கிழக்கா தெற்கா மேற்கா என்றெல்லாம் கேட்பாங்க என்று சொன்னாங்கள்' என்றாள்.

'ஓ அதுவா உங்க பிரச்சனை, நான் அதைக் கேட்கவில்லை. எனக்கு அது தேவையுமில்லை'

'அப்போ என்னோட பிறந்த தினத்தை வைத்து எண்சோதிடம் பார்க் கப் போறீங்களா?'

'என்ன நீங்க எல்லாமே தப்புத் தப் பாய் சிந்திக்கிறீங்க'

'இப்ப எதுக்கு என்னை இங்கே வரச் சொன்னீங்க, இது எங்க முதலாவது டேற்றிங் தானே?' என்று அதிரடியாய்க் கேட்டாள்.

'டேற்றிங்கா என்ன சொல்லுறீங்க?' எனக்குச் மெல்ல உதறல் எடுத்தது.

'அப்போ ஏன் வரச்சொல்லிக் கூப்பிட்டீங்க' என்றாள்.

'நானா வரச்சொன்னேன், நீங்க தானே வருவதாகச் சொன்னீங்க, வந்த இடத்தில் ஒரு காப்பி சாப்பிடுவோமா என்று உங்களை உபசரித்தது தப்பா?' என்றேன்.

'நானா கேட்டேன், நீங்கதானே காப்பிக்குக் கூப்பிட்டீங்க, அப்புறம் இன்னொருநாள் டினருக்குக் கூப்பிடு வீங்க, அது இரண்டாவது டேற்றிங்காய் போயிடும், அப்புறம் மூண்டாவது டேற்றிங்.. தெரியும்தானே மூணாவது தடவை சந்திக்கும்போது என்ன செய்வாங்க என்று' சொன்னவள் மீதமிருந்த காபியை உறிஞ்சியபடியே என் முகத்தில் ஏதாவது மாற்றங்கள் தெரிகிறதா என்று விழி உயர்த்திப் பார்த்தாள்.

இவளோடு கவனமாகப் பழக வேண்டும் என்று என்னைக் கட்டுப் படுத்திக் கொண்டேன். இங்கே பிறந்த வள் என்பதால் டேற்றிங் என்பதை சாதா ரண விடையமாக எடுத்துக் கொள்கி றாளா, எனக்கும் அவளுக்கும் இந்த விடையத்தில் என்ன வித்தியாசம். நாங்களும் எமக்குப் பிடித்தவர்களோடு ஆண் பெண் வித்தியாசம் பாராட்டாமல் பழகுகின்றோம். கொஞ்சம் நெருக்கமா கப் பழகும்போது அவர்களைப் புரிந்து கொள்கிறோம். அவர்கள் எதிர்ப்பாலாக இருந்தால் சிலசமயம் அவர்கள்மீது எங்க ளுக்கு ஒரு வகை ஈர்ப்பு ஏற்படுகின்றது.

இருவருக்கும் நல்ல புரிந்துணர்வோடு ஒருவர்மேல் மற்றவருக்கு ஈர்ப்பு ஏற்பட் டால் அதைச் சந்தர்ப்பம் பார்த்து வெளிப்படுத்துகின்றோம். இதுதான் காதலாகிறது. அந்தக் காதல்தான் அடுத்த கட்டத்திற்குச் சென்று காதல் திருமண மாகிறது. ஏதாவது காரணங்களால் இந் தக் காதல் தடைப்பட்டும் போகலாம். எங்களுடைய இந்தக் கலாச் சாரத்தைத் தான் இவள் தவறாகப் புரிந்து கொண்டு எடுத்ததற்கெல்லாம் 'டேற்றிங்' என்கி றாளோ என நினைக்கத் தோன்றியது.

வழக்குச் சம்பந்தமாக அடிக்கடி தொலைபேசியில் தொடர்பு கொண் டோம். மீண்டும் ஒருதடவை சந்தித்துக் கொண்டோம். நீதிமன்றத்தில் வழக்கு எடுக்கப்பட்ட திகதியைத் தொலைபேசி மூலம் அவளுக்குத் தெரியப்படுத்தியிருந் தேன். கட்டாயம் வருவதாகச் செல்லி யிருந்தாள்.

வாகனப்போக்குவரத்து நீதி மன்றத் தில் இந்த வழக்கு எடுக்கப்பட்டபோது சொன்னபடியே அவளும் அங்கே வந்திருந்தாள். பனிக்காலமாகையால் வீதிப்பாதுகாப்பு காரணமாக மெது வாகவே வண்டிகள் ஊர்ந்தன என்பதை முக்கிய காரணமாக எடுத்து அதை நீதிபதிக்கு விளங்கப் படுத்தினேன். எனது வாதத்தை நீதிபதி ஏற்றுக் கொண்டு வழக்கைத் தள்ளுபடி செய்தி ருந்தார். தீர்ப்பு எங்களுக்குச் சாதகமா கவே அமைந்திருந்ததால் அவள் முகத் தில் புன்னகை பூத்திருந்தது. இருவரும் நீதிமன்ற அறையைவிட்டு வெளியே வந்து வண்டியை நோக்கி நடந்தோம்.

அருகே வந்து கைகொடுத்து நன்றி சொல்லிவிட்டு கைப்பையை எடுத்தபடி 'உங்க பீஸ்' என்றாள்.

'நான் பெரிதா எதுவும் செய்ய வில்லை. எனக்காக வாதாடும்போது உங்களுக்கும் சேர்த்து வாதாடினேன். அவ்வளவுதான்' என்றேன்.

'இல்லை வேறுயாரிடமாவது சென்றி ருந்தால் நான் பணம் கொடுத்துத்தானே வாதாடியிருப்பேன். இது உங்க தொழில், சொல்லுங்க எவ்வளவு?' என்றாள்.

'எவ்வளவு சொன்னாலும் கேட்க மாட்டேன் என்றால் நான் என்ன செய்யி றது. இதை ஒரு கடனாய் நினைச்சால் தாங்க, உங்க மனம் நோகக் கூடாது என்பதற்காக வாங்கிறேன்' என்றேன்.

'நானும் உங்க மனசை நோகவைக்க வில்லை. உங்களைப்பற்றி நிறையவே அறிந்து வைத்திருக்கிறேன், யூ ஆ ஸோ ஸிமாட் அதனாலே.. நீங்க செய்த இந்த உதவிக்கு ஏதாவது தரணும்..!'

'விடமாட்டீங்க போல இருக்கே, உங்க இஷ்டம். தருவதை வாங்கிக் கொள்கிறேன்' என்றேன்.

அவள் அருகே வரவே ஏதாவது பணம் கொடுக்கப்போகிறாள் என நினைத்தேன், ஆனால் அவள் "இச்" சென்ற ஓசையோடு எட்டி ஒரு முத்தம் கொடுத்தாள்.

எதிர்பாராத முத்தத்தால் ஒருகணம் நான் உறைந்து போயிருந்தேன். யாராவது பார்த்திருப்பார்களோ என்ற அச்சத்தில் அக்கம் பக்கம் பார்த்தேன்.

இவ்வளவு விரைவில் அதிகம் பழகாத ஒரு பெண்ணிடம் இருந்து முத்தம் கிடைக்குமா? அவள் இந்த சூழ்நிலையில் வளர்ந்தவள் என்ற துணிச்சலா? எனது சிந்தனையின் இடைவெளியில் அவள் மறைந்து போயிருந்தாள். மூன்றாவது சந்திப்பில் என்ன நடக்குமென்று தெரியும்தானே என்று இதைத்தான் அன்று அவள் சொன்னாளா?

வண்டியில் ஏறி, கண்ணாடியில் கன்னத்தைப் பார்த்தேன். உதட்டுச்சாயம் மெல்லிய கோடாய்ப் பதிந்திருந்தது. இதுவரை இல்லாத, சொன்னால் புரியாத இனிய உணர்வுகள் உடம்பெல் லாம் பரவியது. மறுகன்னத்தையும் காட்டியிருக்கலாமோ என்று ஒருகணம் எண்ணத் தோன்றியது.

டேற்றிங் என்றால் என்னவென்று புரிந்தது போலவும் புரியாதது போலவும் ஒருவித தடுமாற்றமிருந்தது. அடுத்த சந்திப்பு எப்போ கிடைக்கும் என்று மனசு ஏங்கத் தொடங்கியதென்னவோ உண்மைதான். நான் காதல் என்றேன், அவள் டேற்றிங் என்றாள். ஒன்று மனதைத் தொட்டு உடலைத் தொடுவது, மற்றது உடலைத் தொட்டு மனதைத் தொடுவது. சரியா பிழையா தெரிய வில்லை. அந்த நேரம் எல்லாமே ஒன்று தான் என்பது போல மயக்கமாயுமிருந் தது. அவள் சென்று நெடுநேரமாகியும் அவளது மூச்சுக் காற்று எனது காதுமடலை வருடிக்கொண்டிருந்தது.

# அக்காலக் கவர்ச்சித் தாரகை, ஈழத்து நடிகை தவமணிதேவி

மாத்தளை சோமு

நூறாண்டுகளுக்கு மேலாகிவிட்ட தமிழ்ச் சினிமாவில் முதன்முதலில் 1941இல் வெளிவந்த வனமோகினி என்ற திரைப்படத்தில் நீச்சல் உடையில் நடித்துப் பரபரப்பை உண்டாக்கியவர் இலங்கையைச் சேர்ந்த தவமணிதேவி. யாழ்ப்பாணம் இணுவில் என்ற ஊரில் பிறந்து தனது 17ஆவது வயதில் கதாநாயகியாக நடித்தார். பிராமணச் சமூகத்தில் பிறந்த இவருடைய தந்தை கொழும்பில் நீதிபதியாக இருந்தார். மாமா பாலசிங்கம் பிரிட்டிஷ் ஆட்சியில் ஓர் அமைச்சர்.

தவமணிதேவியின் தந்தை கார்த்திகேசுவிற்கு ஐந்து மகன்கள். பெண் பிள்ளை இல்லையே என்று கோயில் கோயிலாகப் போய்ப் பிரார்த்தித்ததில் பிறந்தவர் தவமணிதேவி. பள்ளியில் உடையப்பா என்பவர் இருந்தார். அவருக்கு உடையப்பா பாடுவார். நடனமும் ஆடுவார். ஆதனால் ஆர்வமடைந்த தவமணிதேவி கிராமபோனில் எஸ்.ஜி. கிட்டப்பாவின் பாடலைக் கேட்டுப் பாடிப் பழகினார். பிறகு முறைப்படி சங்கீதம் கற்றார். பள்ளியின் வகுப்புப் போட்டியில் சுதந்திரப் போராட்டம் குறித்த பாடலைப் பாடினார் தவமணிதேவி. அதை அறிந்து வீட்டில் அவரிடம் 'இது போன்ற பாடலைப் பாடாதே. பிரிட்டிஷ் அரச நிர்வாகிகள் அறிந்தால் உனக்குப் பிரச்சினை வரும்' என்றார்கள். நல்ல வேளை. எதுவும் நடக்கவில்லை. பள்ளியில் படிக்கும்போது சிங்களம் கற்றதால் இவரால் சிங்களம் வாசிக்கவும் எழுதவும் தெரிந்தது. சிங்களப் பாடல்களையும் பாடினார். அதனால் ரேடியோ சிலோனில் பாடக்கூடிய வாய்ப்பு அவருக்கு வாய்த்தது. அக்காலத்தில் மக்களிடம் தவிர்க்க முடியாத பிரபல்யமான ஊடகம் வானொலிதான். அங்கு பாடிய பாடல் அவருக்குப் புகழ் கொடுத்ததுடன் வானொலி நிலையம் சார்பில் 'சிலோன் குயில்' என்ற பட்டமும் அவருக்குக் கிடைத்தது.

எம்.கே.தியாகராஜ பாகவதர் கொழும்பு வந்தபோது அவரது பாட்டுக் கச்சேரியைக் கேட்கத் தன் தந்தையாரோடு தவமணிதேவியும் போனார். கச்சேரி முந்ததும் பாகவதரைப் பார்த்த அப்பா அவரைப் பாராட்டிப் பேசி விருந்துக்கு அழைத்தார். பாகவதர் விருதுக்குப் போனார். விருந்தின்போது தவமணிதேவி பாடினார். அவரது பாட்டைக் கேட்ட பாகதவர் 'தங்கச்சி நல்லாப் பாடுது. அவளைச் சினிமாவில் நடிக்க வைக்கிறேன்' என்றார்

தவமணிதேவியின் அப்பா அதற்கு உடன்படவில்லை. தியாகராஜ பாகவதர் இலங்கையில் பல இடங்களில் கச்சேரிகளை நடத்தினார். அவரோடு வந்த அவருடைய தந்தை கிருஷ்ணசாமி திடீரென்று இறந்தார். அவரது உடலைத் தமிழ்நாட்டுக்குக் கொண்டுபோவதில் சட்ட சிக்கல் இருந்தது. பாகவதர் தவமணிதேவியுடைய அப்பாவிடம் ஒரு குழந்தைபோல் அழுது, 'தந்தையாரின் உடலை அம்மாவுக்குக் காட்ட வேண்டும். உதவி செய்யுங்கள்' என்றார். அப்பா தன் செல்வாக்கில் பாகவதர் தன் தந்தையாரின் உடலைக் கொண்டுபோக உதவி செய்தார். இதற்குப்பின் பாகவதரின் குடும்பமும் தவமணிதேவியும் குடும்ப நண்பர்களானார்கள். தவமணிதேவி நடிக்க வராதது பாகவதருக்குக் கவலை என்றாலும் அவளுடைய தந்தையார் விருப்பத்தையே ஏற்றார்

பாகவதர் சினிமாவில் அழைத்துப் போகாத தவமணிதேவி, சினிமாவில் நடிக்கப் போக வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. அப்போது அவருக்கு 13 வயது. சேலம் மாடர்ன் தியேட்டர் டி.ஆர். சுந்தரம் தவமணிதேவியின் குரல்வளம், நடனத்திறம் எல்லாவற்றையும் கேள்விப்பட்டுத் தன் உதவியாளரைக் கொழும்புக்கு அனுப்பித் தவமணிதேவியின் அப்பாவிடம் மகளை நடிக்க அனுப்புமாறு கேட்டார். முதலில் மறுத்த அவர், உதவியாளரின் அடுத்தடுத்த பேச்சினால் சம்மதித்தார். அப்போதே 10000 ரூபாயை முன்பணமாகக் கொடுத்தார்.ஷ


சினிமாவில் நடிக்கத் தவமணிதேவியும் அவருடைய அப்பாவும் அம்மாவும் தமிழ்நாட்டிற்குப் போனார்கள். தங்க வீடு கொடுக்கப்பட்டது. முதல்நாளே டி.ஆர்.சுந்தரம் வசனத்தைக் கொடுத்துப் பேசுமாறு சொல்லத் தவமணிதேவி பேசினார். டி.ஆர்.சுந்தரத்திற்கு மகிழ்ச்சி.

முதன்முதல் மாடர்ன் தியேட்டரின் சதி அகல்யா கதாநாயகியாகத் தவமணிதேவி நடித்தார். படத்தை இயக்கியவர் டி.ஆர்.சுந்தரம். 1931 மார்ச் 10இல் வெளிவந்தது. அப்போது தவமணிதேவிக்கு வயது 13. இவர்தான் மிக இள வயதில் கதாநாயகியாக நடித்த முதல் பெண்.

சதி அகல்யாவிற்குப் பின்னர் சியாம் சுந்தர் (1940), சீதா ஜனனம் அல்லது வேதவதி (1941), சந்திர பிரபா (1940) ஆகிய படங்களில் நடித்த தவமணிதேவி நடிப்பதற்காகக் கொழும்பிலிருந்து போய்வந்தார். அம்மாவின் மரணத்திற்குப் பிறகு சென்னையில் அப்பாவோடு குடியேறினார். தொடர்ந்து, கிருஷ்ணகுமார், (1941), வன மோகனி (1941), பக்த காளத்தி (1945), ஆரவள்ளி ஆரவள்ளி (1946), வித்யாபதி (1946), ராஜகுமார் (1947), நாட்டிய ராணி (1949) ஆகிய படங்களில் நடித்தார். பிரபல நடிகர் எம்.கே.ராதாவோடு கதாநாயகியாக நடித்த வனமோகினி இவருக்குப் புகழ் சேர்த்தது. சீதா ஜனனம் அல்லது வேதவதி படத்தில் தவமணிதேவி கதாநாயகியாக நடிக்க, எம்.ஜி.ஆர். அதில் இராவணனுடைய மகனாக இந்திரஜித் வேடத்தில் நடித்தார். அதே எம்.ஜி.ஆர். கதாநாயகனாக நடித்த ராஜகுமாரி படத்தில் தவமணிதேவி உபவேடத்தில் நடித்தார்

பத்திரிகையாளர் சந்திப்பில் "தமிழ்ப் பெண்கள் திரைப்படங்களில் நடிக்க முன்வர வேண்டும். தயங்கக் கூடாது" என்று சொன்ன தவமணிதேவி, அதைச் செயல்படுத்தியதோடு விஜயா என்ற திரைப்படத்தைத் தயாரித்தார். இரண்டாம் உலகப்போரால் அந்தப் படம் முடியாமல் போனதோடு திரை உலகில் அவருக்கு ஏற்பட்ட மறைமுக அச்சுறுத்தலால் நடிப்பதை விடுத்து நடனம், பாட்டுக் கச்சேரிகளைச் செய்து வந்தார். அதற்கும் எதிர்ப்பு வந்தது. திருச்சி தேவர் மண்டபத்தில் நடக்க இருந்த அவரின் நிகழ்ச்சி அச்சுறுத்தலால் நிறுத்தப்பட் டது.

சென்னையில் வாடகை வீட்டில் குடியிருந்த தவமணிதேவி தன்மீது நடத்தப்பட்ட நிழல் போரில் கார், நகைகளை விற்று இராமேஸ்வரத்தில் குடியேறினார். தினமும் கோயிலுக்குப் போய் வந்தார். 1962இல் கோடிலிங்க சாஸ்திரி என்பவரைத் திருமணம் செய்தார். 2001வரை வாழ்ந்த அவர் அங்கேயே மறைந்தார். பத்துக்கும் மேற்பட்ட படங்களில் நடித்த தவமணிதேவி அக்காலக் கட்டத்தில் புகழ்பெற்ற நடிகையாக இருந்ததால் லக்ஸ் சோப் தனது விளம்பரத்திற்கு அவரது படத்தை முன்னிலைப்படுத்தியது. தமிழ்ச் சினிமா உலகின் கவர்ச்சித் தாரகையான தவமணிதேவி சினிமாவில் நடிக்க வேண்டும் என்று விரும்பிய எம்.கே.தியாகராஜ பாகவதருடன் சேர்ந்து நடிக்க வாய்ப்புக் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் மாடர்ன் தியேட்டரோடு தவமணிதேவி போட்ட ஒப்பந்தம். அதே நேரத்தில் எம்.கே.தியாகராஜபாகவதரை வைத்து எந்தத் திரைப்படத்தையும் அந்த நிறுவனம் எடுக்கவில்லை.



'ராஜ குமாரி' – எம்.ஜி.ஆர்.–தவமணி தேவி (1947)



